பக்கங்கள் · இருபத்திநான்கு

Registered as a News paper

# சஞ்சீவி

விலை ரூபா 8-00

ADVT - 49

மலை:7 வள்ளுவர் ஆண்டு2029 தை 11 சனிக்கிழமை (24-01-1998) SANJEAVY-Regenerative Tamil Weekly சிகரம்:34

# புங்குடுதீவு ஈ.பி.டி.பி. முகாம் புலிகளால் தாக்கப்பட்டது!

## 9 பேர் மரணம்; 4 பேர் படுகாயம் இருவர் காணாமற்போயினர்

யாழ்ப்பாணம், ஜனவரி 24

புங்குடுதீவில் மடத்துவெளி என்னும் இடத்தில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி. அமைப்பின் முகாம் நேற்று அதிகாலை புலிகளால் தாக்கப்பட்டது.

இத்தாக்குதலில் ஒன்பது ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் உயிரிழந்தனர்;நான்கு பேர் காயமடைந்தனர்; இரு உறுப்பினர்களைக் காணவில்லை.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் விடுதலைப்புலிகள் ஷெல்கள், ஆர்.பி.ஜி.கள் கொண்டு இந்த முகாமைத் தாக்கியதாகக் கூறப்படுகின்றது.

சுமார் ஒன்றரை மணிநேரம் இருதரப்புக்கும் இடையில் சண்டை இடம் பெற்றது.

இத்தாக்குதலில் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் எட்டுப் பேர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். காயமுற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஐவரில் ஒருவர் நேற்றிரவு உயிரிழந்தார்.

இத்தாக்குதல் வேளை அந்த முகாமில் இருந்த இரு ஈ.பி.டி.பி. உறுப்பினர்களும் காணாமல் போயுள்ளனர்.

அந்த முகாமில் இருந்த ஈ.பி.டி.பியினரின் 6 ஆயுதங்களையும் புலிகள் எடுத்துச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

எல்.எம்.ஜி. ஒன்று, ஏ.கே. 47 ரைபிள் - 5 மற்றும் ஒரு தொகை நடுத்தர ரவைகள் ஆகியவற்றையே புலிகள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். தேர்தல் வன்முறை: இதுவரை 25 முறைப்பாடுகள்

கொழும்பு, ஜன. 24

எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறவிருக்கும் யாழ். தேர்தல் வன்முறைகள் குறித்து இதுவரை 25 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரமான, நியாயமான தேர்தல்களைக் கண்காணிக்கும் அமைப்பின் பணிப்பாளர் பாக்கியஜோதி சரவணமுத்து நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். சிவில் நொச்சிப் பொலீஸாருக்கு 19 முறைப்பாடுகளும் —

இராணுவத்தினருக்கு இரு முறைப்பாடுகளும் —

சுதந்திரமான, நியாயமான தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கு எஞ்சிய நான்கு முறைப்பாடுகளும் —

(12ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலைக் கண்காணிக்க நகரில் இரண்டு நிலையங்கள்

யாழ். உள்ளூராட்சித் தேர்தல்களைக் கண்காணிக்க இரு நிலையங்கள் யாழ். நகரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுதந்திரமான நியாயமான தேர்தலுக்கான மக்கள் முன்னணி (PAFFREL), சுதந்திரமான நியாயமான தேர்தல் கண்காணிப்புக் குழு (MFFE) ஆகியவற்றின் அலுவலகம் இல. 9, பழைய பூங்கா வீதியில் உள்ள கட்டடத்திலும்—

தேர்தல் வன்செயல்களைக் கண்காணிக்கும் குழு (CMV) அலுவலகம் பிரதான வீதியில் உள்ள பஸ்ரியன் ஹோட்டலிலும்—இயங்க ஆரம்பித்துள்ளன.

இந்த அமைப்புக்களின் சார்பில் இங்கு வந்துள்ள அதிகாரிகள் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று நிலைமைகளை ஆராய்ந்து வருகின்றார்கள்.

தேர்தல் வன்செயல்கள் தொடர்பான முறைப்பாடுகளை இந்த அலுவலகங்களுக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-3)

## வடக்கு - கிழக்கில் உள்ள படையினரின் லீவு ரத்து!

கொழும்பு, ஜன. 24

யாழ். உள்ளூராட்சித் தேர்தல்கள் மற்றும் சுதந்திரதின பொன்விழாக் கொண்டாட்டங்கள் ஆகியன காரணமாக வடக்கு, கிழக்கிலுள்ள படையினரின் விடுமுறைகள் கடந்த 22 ஆம் திகதி முதல் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் செயற்படுத்தப்பட்டுள்ள விசேட பாதுகாப்பு ஒழுங்குகளுக்கு அமைய இந்த நடவடிக்கை எனவும் —

இது பெப்ரவரி 5 ஆம் திகதிவரை நடைமுறையில் இருக்கும் எனவும்— தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

## பிரசாரம் மும்முரம்

யாழ்ப்பாணம், ஜன, 24

எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறவுள்ள யாழ். உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் தேர்தல் பிரசாரங்களில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் நேற்று தமது பிரசாரத்தை ஆரம்பித்தனர்.

யாழ். மாநகர சபை, வலி. வடக்கு பிரதேச சபை பகுதிகளில் அவர்கள் பிரசாரங்களில் ஈடுபட்டனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## லித்துவேனியாவிலிருந்து 45 ஈழத்தமிழர் நேற்று நாடு கடத்தப்பட்டனர்

கொழும்பு, ஜன. 24

சட்டவிரோதமாக லித்துவேனியாவினுள் உள்நுழைந்த 45 இலங்கைத் தமிழர்கள் அந்நாட்டு அரசாங்கத்தால் நேற்று வெள்ளி காலை கொழும்புக்கு விமானம் மூலம் திருப்பி அனுப்பப்பட்டார்கள்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 2 வேட்பாளர்களும் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன. 24

புங்குடுதீவு மடத்துவெளி ஈ.பி.டி.பி. முகாம் நேற்றுக் காலை விடுதலைப்புலிகளால் தாக்கப்பட்ட சம்பவத்தில் உயிரிழந்த 9 பேரில் இருவர் வேலணைப் பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

காளிதாஸ் (வயது-32), சுதா (வயது-33) ஆகிய இரு வேட்பாளர்களுமே உயிரிழந்தவர்களாவர். (உ-3-21)

## கண்ணிவெடியில் சிக்கும் காட்டு யானைகள்

வவுனியா, ஜன. 24

மாங்குளம் ஒலுமடுப் பகுதியில் முன்னணிப் பாதுகாப்புப் பகுதியில் விடுதலைப் புலிகள் புதைத்துவைத்த நிலக்கண்ணிகளால் பல காட்டு யானைகளும் மூன்று சிப்பாய்களும் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த21 ஆம் திகதி பிற்பகல் 3.15 மணியளவில் காட்டு யானைகளின் கூட்டம் ஒன்று இந்தக் கண்ணிவெடிகளில் சிக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

## நாளை வானொலியில்

கொழும்பு, ஜன. 24

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச்சேவையில் நாளை காலை 7 மணி முதல் 8.30மணி வரை நடைபெறும் வாரம் ஒரு வலம் நிகழ்ச்சியில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களின் பேட்டிகளும், வாக்காளர்களின் மன நிலையும் ஒலிபரப்பாகும் என தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## எமது பாதுகாப்புக்கே எம்மிடம் ஆயுதங்கள்!

### ஈ.பி.டி.பி. ஜெகன் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஜன. 24

எமது பாதுகாப்புக்கே ஆயுதங்களை நாம் வைத்துள்ளோம். எந்த ஆயுதக் குழுக்களையும் தேடிச் சென்று தாக்குவதற்கு ஆயுதங்களை வைத்திருக்கவில்லை. எம்மை தாக்க எந்த ஆயுதக் குழு வந்தாலும் தாக்குவோம்.

ஈ.பி.டி.பி, அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் யாழ். மாநகரசபை முதன்மை வேட்பாளருமான வி.கே. ஜெகன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புங்குடுதீவு தாக்குதலின் பின்னர் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். தேர்தலில் போட்டியிடும் ஏனைய அமைப்புக்களின் போலிக் குற்றச்சாட்டுக்களை மறுக்கும் முகமாகவும், யாழ். தேர்தலை இயன்றவரை நியாயமாக நடத்த வழி செய்யும் வகையிலும் ஆயுதக் குறைப்பு மற்றும் ஆயுதத்துடன் நடமாடுதல் ஆகியவை தொடர்பாக நாம் அளித்த வாக்குறுதியைக் காப்பாற்றியுள்ளோம் என்பதை இத்தாக்குதல் காட்டுகிறது.

அங்குள்ள மக்களுக்குச் சேவையாற்றவே அங்கு நாம் பணிபுரிகிறோம். விடுதலைப் புலிகளைப் பிடிக்கவோ அல்லது அவர்களுடன் சண்டையிடவோ இல்லை — என்றார். (உ-3)

## கதிர்காமத்தில் நேற்று 2 வாகனங்கள் தீக்கிரை!

கதிர்காமத்தில் புத்தளம் வீதியில் கல்கே முருகன் ஆலயத்துக்குச் சமீபமாக இரு வாகனங்கள் நேற்று அதிகாலை இனந்தெரியாதவர்களால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

புத்தளத்தில் இருந்து தேங்காய் ஏற்றிக்கொண்டு கல்முனை நோக்கிச் சென்று கொண்டிருந்த லொறி ஒன்றையும் —

அப்பகுதியில் சென்ற கார் ஒன்றையும் —

வழிமறித்த இனந்தெரியாதவர்கள் அவ்விரு வாகனங்களையும் தீயிட்டனர்.

அதன்பின் அப்பகுதியில் வந்த மற்றைய இருவாகனங்களையும் மறித்து அவற்றில் ஏறி அவர்கள் தப்பிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்த சம்பவ இடத்துக்கு பொலீஸார் வந்தனர். அந்தப் பொலீஸ் கோஷ்டியில் இடம் பெற்ற பொலீஸ்கான்ஸ்டபிள் ஒருவர் அங்கு வைக்கப்பட்ட நிலக்கண்ணியில் சிக்கி காலை இழந்தார். (உ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

# அறிவித்தல்

"தீவக, தென்மராட்சி, யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச பாடசாலைகளுக்கு புதிதாக நியமனம் பெற உள்ள பயிலுநர் ஆசிரியர்களுக்கான திசைகோள் உறுத்தல் (முன்சேவைப்) பயிற்சி யா/யாழ். இந்துக் கல்லூரியில் 98-01-27 ஆம் திகதி முதல் நடைபெற உள்ளது. நியமனக் கடிதங்கள் கிடைக்கப்பெற்றவர்கள் 98-01-26 ஆம் திகதி யாழ். வலயம் 1 கல்விப் பணிமனையில் தங்கள் பெயர்களைத் தவறாது பதிவு செய்து கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். நியமனம் பெற்றவர்களின் பெயர்ப் பட்டியலை இவ்வலுவலகத்தில் பார்வையிடலாம்.

கல்விப் பணிப்பாளர்,
யாழ். வலயம் 1.

(சி/2711)

குறிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள

## அரசாங்கப் பாடசாலைகளில் தமிழ் மொழி மூல தகுதி காண் ஆசிரியர்களை ஆட்சேர்த்தல்

24-02-96 இல் நடைபெற்ற மேற்படி விடயம் தொடர்பான போட்டிப் பரீட்சையில் தோற்றி பின்வரும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் குறிப்பிட்ட வெட்டுப் புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்றவர்களுக்கான நேர்முகப்பரீட்சை 27-01-98 ஆந் திகதி யாழ் வலயம் 2 அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. இவ் வெட்டுப் புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்றோர் அன்றைய தினம் நேர்முகப் பரீட்சைக்குச் சமூகம் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். நேர்முகப் பரீட்சைக்குரிய அறிவுறுத்தல்கள் அடங்கிய கடிதங்கள் உரியவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அத்துடன் யாழ். வலயம் 2 அலுவலகத்தின் விளம்பரப் பலகையிலும், கோட்டக்கல்வி அலுவலகங்களின் விளம்பரப் பலகைகளிலும் அறிவுறுத்தல் அடங்கிய அழைப்புக்கடிதங்கள் இடப்பட்டுள்ளன.

| உதவி அரசாங்க அதிபர் பிரிவு | வெட்டுப் புள்ளி |
|---|---|
| 1. வலிகாமம் மேற்கு | 80 |
| 2. வலிகாமம் தென் மேற்கு | 84 |
| 3. வலிகாமம் கிழக்கு | 91 |
| 4. வலிகாமம் வடக்கு | 104 |
| 5. வலிகாமம் தெற்கு | 83 |
| 6. வடமராட்சி வடக்கு | 102 |
| 7. வடமராட்சி கிழக்கு | 95 |
| 8. வடமராட்சி தென் மேற்கு | 101 |

சி. சிவராசா,
கல்விப் பணிப்பாளர்,
யாழ். வலயம் 02

(இ-2703)

# மரண அறிவித்தல்கள்

## சரவணமுத்து அப்புராசா

(இளைப்பாறிய ஊழியர், சங்கானை பட்டினசபை)

தொட்டிலடி சங்கானையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து அப்புராசா 23-01-98 அன்று காலமானார்.

அன்னார் உத்தமிதேவியின் அன்புக் கணவரும், வெற்றிவேல்நாதன் (30 ஸ்ரீ 2774, 787 மூளாய் பஸ் உரிமையாளர் மாயன்), சண்முகநாதன் (இந்தி), செல்வகுமாரி (ராணி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், விக்கினேஸ்வரி, விமலாதேவி (குஞ்சு), சிவலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும், கிஷாந், கிஷாந்தி, றொஷாந், பிரஷாந், அனுசாந், துஷாந், சாரங்கன், கோபிராஜ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24-1-98) சனி காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. வெற்றிவேல்நாதன் (மாயன்)
(மகன்)

வல்லை வீதி,
சங்கானை.

(49921)

## திருமதி இராஜபூமணி சிவநம்பிகை

மல்லாகத்தைச் சேர்ந்த திருமதி இராஜபூமணி சிவநம்பிகை 23-01-98 அன்று சிவபதம் அடைந்தார்.

இவர் திரு. சி. சிவநம்பிகை (சட்டத்தரணி) அவர்களின் அன்பு மனைவியும், கந்தசாமி, சுந்தரமூர்த்தி, இராணி, இராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24-01-98 சனிக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அன்னாரின் முகாந்திரம் ஒழுங்கை, மல்லாகம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. சிவநம்பிகை.
[கணவர்]

முகாந்திரம் ஒழுங்கை,
மல்லாகம்.

(52844)

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 24

நல்லூர், யாழ்ப்பாணக் கல்விக்கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான — எதிர்வரும் சுதந்திரதினவிழா பற்றிய — கூட்டம் ஒன்று நாளை மறுதினம் திங்கள் காலை 10 மணியளவில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளதாக வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ-7)

## திங்கள் முதல் நியமனம்

யாழ்ப்பாணம், ஜன. 24

யாழ். கல்வி வலயம் இரண்டில் உள்ள பாடசாலைகளில் நாளை மறுதினம் திங்கட்கிழமை நியமனம் பெறும் ஆசிரியர்களை அன்று காலை 8,30 மணிக்கு வலயம் இரண்டு அலுவலகத்தில் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

நியமனம் பெறுபவர்களுக்கான நியமனக் கடிதங்கள் தபாலில் அனுப்பப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## பொன்விழா மலர் வெளியீடு

நெடுந்தீவு, ஜன. 24

நெடுந்தீவு மகாவித்தியாலய பொன்விழா மலர் வெளியீட்டுவிழா இன்று சனிக்கிழமை வித்தியாலய அதிபர் திருமதி பி. எம். ஜே. அன்ரனி தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசனும் சிறப்பு விருந்தினர்களாக நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் நா. இராமச்சந்திரன், நெடுந்தீவு கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். தில்லைநாதன் ஆகியோரும் கலந்து கொள்வர். (ஐ-111)

## சடலம் அடையாளம் காணப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன. 24

கைதடி மேற்குப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி ஜெகதீஸ்வரன் (30 வயது) என்ற குடும்பஸ்தர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர் அதிகாலை 5.30 மணியளவில் தோட்டத்திற்கு தண்ணீர் வார்ப்பதற்குச் சென்ற போதே சூட்டுக்கு இலக்கானதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-5)

## திருத்தம்

உதயன் 22-01-1998 ஆம் திகதிய இதழில் வெளியான சண்டிலிப்பாய் வடக்கு அரசடி சித்தி விநாயகர் ஆலய அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்புச் சம்பந்தமான விளம்பரத்தில் - கோரப்படாத பரிசில்களுக்குரிய டிக்கெட் இலக்கங்களில் 286 என்றிருப்பதை 2876 எனத் திருத்தி வாசிக்கவும்.

## லிபேட்டி சினிமா

அச்சுவேலி.

30 அடி அகலத் திரையில்
இன்று (சனி) முதல்
அஜித்குமார்
தேவயானி
நடித்த
'காதல் கோட்டை'

பழைய நேரம்
9-30, 12-30, 3-30

(52705)

## அபிராமி பட்டர் விழா

ஷ்டி விழா 27-01-98 செவ்வாய்க்கிழமை யாழ். வண்ணை கலட்டி எச்சாட்டி மகாமாரி அம்மன் ஆலயத்தில் பி. ப. 2-30 மணிக்கு நடைபெறும்.

அனைவரும் வருக.

சுபம்.

(52756) தா. வாசுதேவக் குருக்கள்

## யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் வழங்கும்

## 'கலைக்குயில் கானங்கள்'


இடம்: யா/ நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்
காலம்: 25-01-98 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பி.ப. 2.30 மணி (இலங்கை நேரம்)
அன்பளிப்புகள்: 20/- (மாணவர்கள் மட்டும்) 50/-, 100/-

முக்கிய குறிப்பு:
நுழைவுச் சீட்டுகள் பெறும் இடங்கள்:
★ திரு வீடியோ விஷன்,
★ ஜெகா மோட்டோர்ஸ்,
★ நவீன கல்வி நிலையம், நெல்லியடி
★ மண்டப நுழைவாயில்

கலைப்பீட மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக் கழகம்.

(52855)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் நாகமுத்து இரத்தினம்

மலர்வு: 14 – 07 – 1943
உதிர்வு: 25 12 – 1997

உதித்த வீட்டின் உத்தமனாய் புகுந்த வீட்டின் புத்தொளியாய், கைபிடித்த காரிகைக்கு கலங்கரை விளக்காய், உடன் பிறந்தோருக்கு உற்ற துணையாய், பெற்றெடுத்த பிள்ளைகளுக்கு பாசமிகுந்த தந்தையாய், மருமக்களின் நேசம் நிறைந்த மாமனாய், பாசமுடன் கண்ட பேரப்பிள்ளைகளுக்கு சிறந்த பேரனாய் அனைவரையும் அன்பாலும், பண்பாலும் வழிநடத்திய குடும்பத்தின் பாசமலராய் கூடி வாழ்ந்து எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொண்ட அன்புத் தெய்வமே! நீங்கள் பிரிந்து சென்று 31 நாள் அன்று பறந்து விட்டதை மலர்ந்த முகத்தோடு அன்பு மனைவிக்கும், அருமைக் குழந்தைகளுக்கும் நீர் ஆற்றிய செயல்களையும், சேவைகளையும் மறக்க முடியுமா? காலமெல்லாம் எங்களுக்குத் துணை நிற்பீர்கள் என்று எண்ணினோம் ஆனால் காலமோ இடை நடுவில் எம்மைப் பிரித்து விட்டது. உயிர் கொடுத்தவன் நிழலடியில் நீங்காத வாழ்வு நீங்கள் வாழ இறைவனை இறைஞ்சுகின்றோம்.

24. 01. 1998 இன்று அவரது கோண்டாவில் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:

அன்புமனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரன், பெறாமக்கள், மைத்துனர், மைத்துனிமார், உறவினர், நண்பர்கள்.

சுகந்தன்,
குட்செட் றோட்,
கோண்டாவில்.

(52842)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதியதோர் ஆரம்பத்திற்காக.....!

## ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முதன்மை வேட்பாளர்களில் சிலர்..



த. சுபத்தரன்
யாழ். மாநகரசபை



க. சிவராசா
நகரசபை சாவகச்சேரி



சு. தங்கேஸ்வரன்
நகரசபை பருத்தித்துறை



கா. ஜெயக்குமார்
நகரசபை வல்வெட்டித்துறை



க. பாலநடராசன்
வலிகாமம் கிழக்கு
பிரதேச சபை



செ. ரவீந்திரன்
பச்சிலைப்பள்ளி
பிரதேசசபை



அ. ஜோன்
வலிகாமம் தென்மேற்கு
பிரதேசசபை



சி. ஜெயசீலன்
வேலணை பிரதேசசபை



ந. தனபாலரட்ணம்
நல்லூர் பிரதேசசபை



செ. மதிவதனன்
வடமராட்சி தென்மேற்கு
பிரதேசசபை

### யாழ். குடாநாட்டில் வாழும் வாக்காளப் பெருமக்களே!


வணக்கங்கள்.

அவலமும், அச்சமும், ஐயப்பாடுகளும் நிரம்பிய இன்றைய வாழ்க்கைச் சூழல் முற்றாக மாற்றப்படல் வேண்டும். இதற்கு பொது வாழ்வில் மாற்றுக் கருத்துக்களுக்கும் மதிப்பளிக்கும் ஜனநாயக அரசியற் செயற்பாடுகள் மலர வேண்டும். இந்த இலக்கு நோக்கிய பயணத்திற்கான ஓர் ஆரம்பமாகவே எதிர்வரும் தேர்தலை நாங்கள் கருதுகின்றோம். எனவே புதியதோர் ஆரம்பத்திற்கான அங்கீகாரம் கிட்டும் வகையில் உங்கள் வாக்குகளைப் பயன்படுத்தும்படி வேண்டுகின்றேன்.

நன்றி!

**க. சுரேஷ் பிரேமச்சந்திரன்,**
**செயலாளர் நாயகம்.**
**ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி.**
**(EPRLF)**

## ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
## (E.P.R.L.F.)



(விளம்பர இலக்கம் 67669)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தல்கள் - 1998



## அன்பான யாழ். மக்களே!

போரின் நேரடியான, மறைமுகமான தாக்கங்கள் காரணமாக துன்பங்களையும் இழப்புகளையும் நாளாந்தம் வாழ்வின் ஓர் அம்சமாக அனுபவித்துவரும் உங்களிடம் பல சந்தர்ப்பங்களிலும் பல வழிகளிலும் எனது கருத்துக்களைப் பகிர்ந்தும் ஆலோசனைகளைப் பெற்றும் மக்களுக்கான எனது பணிகளைச் செய்து வந்த நான், தமிழர்களின் அரசியல் வரலாற்றில் நெருக்கடிகள் நிறைந்த இந்தச் சந்தர்ப்பத்தில் மீண்டும் ஒரு முறை உங்களுடன் எனது கருத்துக்களை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்,

நான் இந்த மண்ணுக்குப் புதியவன் அல்ல. விடுதலைத் தீ இந்த மண்ணில் சிறு பொறியாக ஆரம்பித்து கொழுந்து விட்டெரியும் காலம் வரை சாத்வீகப் போராட்டங்களிலும் ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளிலும் மிதவாதத் தலைவர்களுடனும் தீவிரவாதத் தலைவர்களுடனும் கைகோர்த்து செயலாற்றி வந்திருக்கிறேன். எனது தந்தை காலஞ்சென்ற வி. தர்மலிங்கம் அவர்களை நீங்கள் நன்கு அறிந்திருப்பீர்கள்.

இடதுசாரிக் கொள்கைகளில் பற்றுறுதி கொண்டிருந்தாலும் தந்தை செல்வாவின் சாத்வீகப் போராட்ட நடவடிக்கைகளில் தன்னை ஈடுபடுத்தி தமிழினத்தின் விடுதலைக்காகவும் தான் பிரதிநிதித்துவப் படுத்திய மக்களுக்காகவும் அயராது சேவையாற்றி இறுதிவரை உங்கள் மத்தியிலேயே வாழ்ந்து மரித்தவர். அவரைப் பற்றி அறிந்த, தெரிந்த எவருக்கும் நான் அவருடன் செயற்பட்ட காலங்கள் பற்றி மீண்டும் நான் கூறிவைக்கத் தேவையில்லை எனவும் கருதுகிறேன்.

மறைந்த எமது தலைவர் தோழர் உமாமகேஸ்வரனும், அவரது வழி நடந்த எமது கழக உறுப்பினர்களும் தமது ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளுக்கு சமாந்தரமான பரந்துபட்ட வெகுஜன அணிதிரட்டலை, விடுதலைப் போராட்டத்தை மக்கள் மயப்படுத்தும் நோக்கில் எந்தளவு உறுதியுடனும் தீர்க்கதரிசனத்துடனும் ஒழுங்கமைக்கப்பட்ட முறையிலும் மேற்கொண்டிருந்தார்கள் என்பதை தாங்கள் அனைவரும் அறிவீர்கள்.

எமது இனத்தின் சகல மட்டங்களிலும் உள்ள சகல பிரிவுகளினதும் அடிப்படைப் பிரச்சினைகளை இனங் கண்டு, அவர்களது குரலாக, ஒருமித்து, அப்பிரச்சினைகளில் தீர்க்கமான ஒரு முடிவைக் காணுகின்ற அல்லது முடிவைப் பெற்றுக் கொடுக்கின்ற வெகுசனப் போராட்டங்களை நடத்தி மக்களை ஒருமுகப்படுத்துகின்ற முறையை முதன் முதலாக எமது விடுதலைப் போராட்டத்தில் ஏற்படுத்திய அமைப்பினர் நாங்கள் தான்.

அவ்வாறான மக்கள் பிரதிநிதித்துவம் நிறைந்த வெகுசன அணிதிரட்டலும் அது சார்ந்த அமைப்புக்களும் தொழிற்சங்க அமைப்புக்களும் இன்று இல்லாததன் காரணமாக ஏற்பட்ட பின்னடைவுகளை நாம் கண்டுணர்ந்து வருகின்றோம்

மக்களை, முறைப்படுத்தப்பட்ட வெகுசன அமைப்புக்கள் மூலம் பிரதிநிதித்துவப்படுத்தாத எந்த ஓர் அரசியல் தலைமையும் மக்களின் மன உணர்வுகளை அறிந்து அவர்களது அபிலாஷைகளுக்காக போராடுவதாகக் கூறிக்கொள்வது பொருத்தமில்லாத விடயம் என்றே நாம் கருதுகின்றோம்.

எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைகள் மூலம் மீண்டும் அவ்வாறான ஒரு வாய்ப்பு - மக்களை முறையாகப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஓர் அரசியல் பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்தக் கூடிய வாய்ப்பு - கிடைக்கக்கூடியதாக இருக்கும் என்றே கருதுகின்றேன்.

எனது தந்தையின் சுயநலமற்ற சேவையில் நானும், எமது மறைந்த தலைவர் உமாமகேஸ்வரனது தீர்க்க தரிசனமிக்க வழிகாட்டலில் என்னுடன் எனது கட்சி அங்கத்தவர்களும் அர்த்தமுள்ள முன்னுதாரணங்களையும், அறிவுரைகளையும், அனுபவங்களையும் பெற்றிருக்கின்றோம். உறுதிமிக்க, மக்களின் மன உணர்வுகளையும் அபிலாசைகளையும் புரிந்து கொள்ளக்கூடிய அவர்களது அடிப்படை உரிமைகளுக்காக தொடர்ந்தும் போராடுகின்ற, உறுதிமிக்க ஓர் அரசியல் பிரதிநிதித்துவத்தை யாழ். மக்களாகிய உங்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய பக்குவத்தை எங்களுக்குத் தந்திருக்கின்றன என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கைகொண்டிருக்கின்றோம்.

அதை நீங்களும் புரிந்து கொண்டிருப்பதை நடக்கும் நாள்களில் எமக்கு நீங்கள் தருகின்ற அளவு கடந்த ஆதரவையும், காட்டுகின்ற ஆழமான அன்பையும் கொண்டு எம்மால் உணர முடிகின்றது. உங்களின் அநேகர் எனக்கு தனிப்பட்ட முறையில் நன்றாக அறிமுகம் ஆகியிருந்தும் நேரடியாகச் சந்தித்து உரையாட முடியாத காலமும், சூழ்நிலையும் இருப்பதை நீங்கள் அறிவீர்கள். ஆகவே சஞ்சீவி மூலம் உங்களுடன் அளவளாவுகிறேன்,

எமது மக்களுக்கு சேவையாற்றவும் அவர்களது அத்தியாவசியமானதும் அடிப்படையானதுமான பிரச்சினைகளுக்காக போராடித் தீர்வு காணவும் நாம் கொண்டுள்ள பற்றுறுதி மேலும் வலுப் பெறவும் குடாநாட்டில் செயலுருப்பெறவும் எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில் தவறாது வாக்களிக்கச் சென்று எமது கட்சியின் சின்னமான நங்கூரத்துக்கு நேரே புள்ளடியிட்டு தங்கள் நம்பிக்கை நிறைந்த ஆதரவை உறுதிப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்,

**என்றும் உங்களுடன், உங்களுக்காகவே**

அன்புடன்

[signature]

**தர்மலிங்கம் சித்தார்த்தன்,**
**தலைவர்,**

**ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்)**

# ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்)

X

(B 001)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தல்-1998 யாழ். மாவட்டம்

எதிர்வரும்
ஜனவரி
29 ஆம் திகதி
உங்கள்
வாக்குகள்
வீணைச்
சின்னத்திற்கே!

மக்களே!

எம் மக்களே!!

எதிர்வருகின்ற
உள்ளூராட்சித்
தேர்தலை

மக்களின்
பேராதரவு
ஈ. பி. டி. பி. க்கே!!

★ கௌரவமான, நீதியான அரசியல் தீர்வுக்காக ஜனநாயக ரீதியில் போராடும் அரசியல் தலைமையை வலுப்படுத்துவதற்காகவும்


★ அரைகுறையான தீர்வுக்கு துணைபோகின்ற, எதிர்த்துக் குரல் கொடுக்காத சக்திகளை தோற்கடிப்பதற்காகவும்

★ தமிழ் பேசும் மக்களின் தாயகமான வடக்குக் கிழக்கை கூறுபோடும் முயற்சிகளை எதிர்த்து நிற்கவும்

★ தாயகப் பாதுகாப்பிற்காகப் போராடும் நம்கரங்களை வலுப்படுத்தவும்

★ கௌரவமான சமாதானம், நீதியான தீர்வு என்பனவற்றின் மீதான நாட்டத்தை வெளிப்படுத்துவதற்காகவும்

## உங்கள் வாக்குகளைப் பயன்படுத்துங்கள்!





உங்களுக்காக வாதாடவும், போராடவும்,
ஈ.பி.டி.பி.யின் கரங்களைப் பலப்படுத்துங்கள்.
எமக்கு வாக்களியுங்கள்!

## ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி (ஈ. பி. டி. பி.)

(விளம்பர இலக்கம் ஏ-0025)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்ட உள்ளூராட்சி



அமரர் வெ. யோகேஸ்வரன்



அமரர் எஸ்.ஜே.வி

**"தமிழ்பேசும் மக்களின் அரசியற்கிளர்ச்சிகள் பெரிதும் வடமாகாணத்திலேயே ஆரம்பித்தன. இலங்கை அரசியலில் தமிழ் மக்களுக்கு எனத் தனித்துவமானதொரு இடமிருக்கிறது."**

*— 1948 இல் தந்தை செல்வா —*

★ அந்த வடமாநிலம், யாழ். மாவட்டம் இன்று ஜனநாயக அரசியல் தலைமைத்துவமற்றுவிட்டதோ எனும் அநாதரவான நிலை —
அழிந்துபோன பழைய நகரமொன்றின் எஞ்சிய சிதைவுகளிலிருந்து மெல்ல எழுந்து நடமாடத் தொடங்கியுள்ள மக்கள் இன்னும் பழைய இயல்புகளுக்கும், நினைவுகளுக்கும் திரும்பாத நிலையில்— புதை குழிகளிலும், சாம்பல் மேட்டிலும்; இராணுவ ஆட்சிக்கும் ஆயுத அச்சுறுத்தலுக்குமிடையே அந்த ஜனநாயகத்தை தேடுகிறோம்.

★ இந்த நிலையில் மக்களும், நாமும் வேண்டாத இந்த உள்ளூராட்சித் தேர்தல் அரசினால் திணிக்கப்பட்டுள்ளது. மக்கள் தீர்ப்புக்கு விடுவதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை.

★ அடிமைத் தளையிலிருந்து விடுதலைபெறத் தொடங்கிய மக்கள் போராட்டங்கள் சிங்கள அரசுகளின் இராணுவ—ஆயுத முனையில் அடக்கி ஒடுக்கப்பட்டதன் விளைவுகள்தான் இன்று அழிவைத் தந்து கொண்டிருக்கும் ஆயுதப் போர்.

★ மக்களையும், நாட்டையும், அழித்துக் கொண்டிருக்கும் இந்தக் கொடிய போர் நிறுத்தப்பட்டு மக்களின் விடிவுக்கு அரசியல் தீர்வு காணப்படுவதே இன்றைய கட்டாயம்.

★ இராணுவ மயமாக்கல், ஆயுதமயமாக்கல் என்பதற்கெதிராகவும், ''சமாதானத்திற்கு ஒரு யுத்தம்'' என்பதற்குப் பதிலாகவும் அரசும்-தமிழீழ விடுதலைப்புலிகளும் விசுவாசமானதொரு பேச்சுவார்த்தையில் அரசியல் தீர்வை எட்டுவதற்கு, வேண்டுமானால் மக்கள் சக்தியைத் திரட்டுவதே இன்றைய காலத்தின் தேவை.

★ இராணுவ முகாமிலிருந்தும் ஆயுதக் கலாசாரத்திலிருந்தும் ஜனநாயகத்தை கட்டியெழுப்ப முடியாது; எம்மக்களிடமிருந்தே ஜனநாயகத்தை கட்டியெழுப்பவும்; அழிவுகளையும், அவலங்களையும் இழப்புகளையும் வாழ்நாள் முழுவதும் அனுபவித்துக் கொண்டிருக்கும் எம் மக்களுக்கு விடிவுகிட்டவும் தமிழர் விடுதலைக் கூட்டணி தன்னை அர்ப்பணிக்கிறது.

★ எம்மக்களைப் போலவே, எம் கட்சியின் பல அரிய உயிர்களைப் பலி கொடுத்துள்ள போதும் தார்மீக ஜனநாயகக் கடமைகளிலிருந்து நாம் ஒரு போதும் விலகியதில்லை.

★ அரசியல் தீர்வை எட்ட அரசுகளுடன் பேசுகிறோம், அது ஒரு ஜனநாயகக் கட்சிக்குரிய கடமை; ஆனால் நாம் அரசின் பங்காளிகளல்ல. மனித உரிமை மீறல்களை இராணுவ அட்டூழியங்களை எதிர்த்துச் செயல்படுகிறோம்.
நாடாளுமன்றத்திலும் வெளியிலும் பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டு அதிகரிப்பை எப்பொழுதும் எதிர்த்திருக்கிறோம்.



யாழ். மாநகரசபை
முதன்மை வேட்பாளர்
**திருமதி சரோஜினி யோகேஸ்வரன்**

# தமிழர் விடுதலைக் கூட்டணி



திரு. எம். சி
தமிழர் விடுதலைக் கூ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சி சபைத் தேர்தல்கள் - 1998



வி. செல்வநாயகம்



அமரர் அ. அமிர்தலிங்கம்

அவசரகாலச்சட்ட நீடிப்புக்களை அன்று முதல் இன்று வரை நாடாளுமன்றத்தில் எதிர்த்திருக்கிறோம்; எதிர்த்தே வாக்களித்து வருகிறோம்.

அதற்கு மேலாக அரசியல்தீர்வை, சமாதானப் பேச்சுவார்த்தையை வலியுறுத்துகிறோம். இராணுவத் தீர்வை ஒரு பொழுதும் ஆதரித்ததில்லை; எதிர்த்து நிற்கிறோம்.

★ வடக்கு — கிழக்கு மாநிலம் தமிழ் முஸ்லிம் மக்கள் வாழும் பிரதேசம், பாரம்பரிய தாயகம்; நாம் சுயநிர்ணய உரிமையுள்ள தேசிய இனம் எனும் தந்தை செல்வா விட்டுச் சென்ற தத்துவம் — சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தனி அரசா, கூட்டாட்சியில் தன்னாட்சியா என்பதைத் தீர்மானிக்கும் இறைமையும் உரிமையும் எம்மக்களிடமே உண்டு.

★ தந்தை செல்வா காட்டிய வழியில் வடக்கு — கிழக்கு மாநிலத் தாயகத்தில் தமிழ்மக்கள் விடுதலைக்கும் விடிவுக்கும் உழைத்திடும், நாம் முஸ்லிம் மக்களின் ஜனநாயக அரசியல் உரிமைகளை அங்கீகரித்து நிற்கின்றோம்.

ஆனால் வடக்கிலிருந்து கிழக்கு மாநிலத்தைப் பிரித்தெடுக்கும் சூழ்ச்சியை — பேரினவாத சக்திகளின் முயற்சியை —

இதற்காக அரசு கிழக்கில் கருத்துக்கணிப்பு நடத்துவதை தமிழர் விடுதலைக் கூட்டணி திட்டவட்டமாக எதிர்த்து நிற்கிறது.

★ இன்று யாழ். மாநகரத்தை — யாழ். மாவட்டத்தைப் புனரமைக்க சர்வதேச சமூகம் முன் வந்திருக்கிறது.

எம்மக்களின் புனர்வாழ்வுக்கும், எம்மக்கள் விடிவுக்கும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம், எம்மை அர்ப்பணித்து உழைப்போம்;

நாம் மக்களைச் சூறையாடுபவர்களல்ல; மனிதர்களைக் கடத்துபவர்களல்ல; பலி எடுப்பவர்களுமல்ல;

அரசியல் தீர்வினால் அமைதிச் சூழலில்தான் மக்கள் நல்வாழ்வு சாத்தியம் என்பது எமது கணிப்பு. மக்களே எங்கள் மகாத்மாக்கள், மக்களே எங்களுக்கு அரண். அவர்களிடம் எம்மை அர்ப்பணிக்கிறோம்.

★ ஜனநாயக பாரம்பரியமிக்க எம்மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியை ஜனநாயக விழுமியங்களை காத்துநிற்கும் கட்சியை மீண்டும் கட்டியெழுப்ப ஆதரவு வழங்குவார்கள்.

★ மீண்டும் ஜனநாயக மக்கள் சக்தியைக் கட்டியெழுப்பவும், மக்கள் விடுதலைக்கும் விடிவுக்கும் எம்மை அர்ப்பணிக்க ஆதரவு தாருங்கள்.

## உங்கள் எதிர்காலம் சிறக்க, மீண்டும் ஜனநாயகம் தழைக்க, எம் கரங்களை வலுப்படுத்த,
## **உதயசூரியன் *சின்னத்திற்கே வாக்களியுங்கள்!***



சிவசிதம்பரம்
க் கூட்டணித்தலைவர்

X



வலி - வடக்கு பிரதேச சபை
முதன்மை வேட்பாளர்
திரு. சு. ஸ்ரீபாஸ்கரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

om Sri Sairam

# சாயி கல்வி வெளியீடுகள்

**ஆண்டு - 4**
கணிதப் பயிற்சியும் செயல்நூலும் 70/-
ஆரம்ப விஞ்ஞானம் பயிற்சியும் செயல்நூலும் 70/-

**ஆண்டு - 5**
கணிதப் பயிற்சியும் செயல்நூலும் 80/-
ஆரம்ப விஞ்ஞானம் பயிற்சியும் செயல்நூலும் 70/-

**ஆண்டு - 6**
வரலாறும் சமூகக்கல்வியும் 60/-
(பரீட்சை வழிகாட்டி)

**G.C.E. (O/L) மாணவர்களுக்கான**
விஞ்ஞானம் - பரீட்சை வழிகாட்டி 120/-
அடிப்படை இலத்திரனியல் 60/-

**க.பொ.த. உயர் தரம் புதிய பாடத்திட்டம்**
1. மனித உயிரியல் பகுதி - 1 150/-
2. மனித உயிரியல் பகுதி - 2 160/-
3. மனித உயிரியல் பகுதி - 3 160/-
4. பிறப்புரிமையியல் 100/-
5. பிரயோக விலங்கியல் 100/-
6. விலங்குச் சூழலியல் 100/-
7. தொழிற்படும் தாவரம் 135/-
(தாவர உடற்றொழிலியல் பகுதி - 1)
8. பிரயோக கணிதம் (நிலையியல் பயிற்சிகள்) 120/-
9. பிரயோக கணிதம் (இயக்கவியல் பயிற்சிகள்) அச்சில்

மேற்படி நூல்கள் யாவற்றையும் யாழ். நகரில் முன்னணிப் புத்தகசாலைகள் யாவற்றிலும் பெற்றுக் கொள்ள முடியும்.

தொடர்பு:-
**Sai Educational Publications**
155, Canal Road, Colombo - 6.
Phone: 592707

(52806)



# வைத்தியக் கல்வி

- சீன வைத்தியம்
- அராபியர் வைத்தியம் (யூனானி)
- அவசர வைத்தியம் (அலோபதி)

✶ வீட்டில் இருந்தபடியே தபால் கல்விப் போதனை மூலம் நேரடிச் செய்கைப் பயிற்சியின் பின்னர் நடத்தப்படும் பரீட்சையில் சித்தியடைபவருக்கு சர்வதேச பல்கலைக் கழகச் சான்றிதழ் வழங்கப்படும்.

★ ரூபாய் பத்துக்கான தபாற்தலையுடன், தபாலுறை சுயவிலாசமிட்டு அனுப்பி விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கௌரவ காரியதரிசி

**ஸ்ரீலங்கா அக்குபங்சர் சங்கம்**
வயாவிளான்.

(52788)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 24 | 25 |
| — | — |
| 10 | 12 |
| — | — |
| 1927 | 1997 |

## சண்முகம் இராசையா
(மைலர்)

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட எங்கள் அன்புத் தந்தையின் சபிண்டீகரக் கிரியைகள் இன்று சனிக்கிழமை (24-01-98) கோப்பாய் தெற்கில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இக்கிரியை வைபவத்தில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

235, பழைய வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய். (52805)

திருமலையில் சுதந்திரப் பொன்விழாக் கொண்டாட்டம்

# சூரியமூர்த்தி கூட்டிய கூட்டத்தை 5 ரெலோ உறுப்பினர் பகிஷ்கரிப்பு

திருகோணமலை, ஜன. 24

சுதந்திரப் பொன் விழா நிகழ்ச்சிகளை திருமலையில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் குறித்து ஆராய ரெலோ அமைப்பு ஆதரவான திருமலை நகரசபைத் தலைவர் பொ. சூரியமூர்த்தி ஏற்பாடு செய்த கூட்டத்தை அந்தச் சபையில் ரெலோ சார்பில் அங்கம் வகிக்கும் ஐந்து உறுப்பினர்கள் பகிஷ்கரித்தனர்.

நேற்று முன்தினம் ஏற்பாடு செய்த இந்தக் கூட்டத்தைப் பகிஷ்கரித்ததாகச் சபையின் உப தலைவர் கே. லோகேஸ்வரனும், நான்கு உறுப்பினர்களும் அறிவித்தனர்.

இது தொடர்பாக அவர்கள் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் பேசும் மக்கள் தமது சொந்த மண்ணிலேயே சகல உரிமைகளையும் இழந்து அநாதைகளாக அகதி முகாம்களில் வாழும் நிலையில்—

நாடு தழுவிய ரீதியில் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளும், எதேச்சாதிகாரங்களும் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் நிலையில்—

பொன்விழாக் கொண்டாட்டங்களை மகிழ்ச்சியுடன் நாம் கொண்டாடலாமா?

நிரந்தர சமாதானத்தையும் வடக்கு — கிழக்கு இணைந்த நீதியான ஒரு மாநில சுயாட்சியையும் தர முயற்சிக்காத அரசு தமிழ் மக்களின் மரபு வழித்தாயகமான வடக்கு — கிழக்கை துண்டு துண்டுகளாகப் பிரிக்கும் தீர்வுப் பொதியைத் தருவதாகக் கூறிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் நகரசபைத் தலைவரால் திருகோணமலையில் நடத்தப் படவிருக்கும் பொன் விழாக் கொண்டாட்டங்களில் மக்கள் பிரதிநிதிகளாகிய நாம் எவ்வாறு கலந்துகொள்ளமுடியும் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3-7)

# இரண்டாவது நாளாக வவுனியா சுற்றிவளைப்பு

வவுனியா, ஜன. 24

வவுனியா ராஜேந்திரகுளம் பாரதிபுரம் ஆகிய பகுதிகள் இரண்டாவதுநாளாக நேற்று முன்தினம் இரவும் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு 18 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் பகுதி இதற்கு முதல் நாளும் சுற்றிவளைக்கப்பட்டு 17 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைதானவர்களை விடுவிக்க பொலீஸ் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளதாக புளொட் அமைப்பின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் பார்த்திபன்தெரிவித்தார்.

## ரூ. ஆயிரம் முற்பணம்

நவாலி, ஜன. 24

அரசாங்க ஊழியருக்கான 1000ரூபா விசேட முற்பணம் சம்பந்தமான சுற்றறிக்கை சகல திணைக்களங்களுக்கும் பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

(இ-100)

## 6 மாதகால பயிற்சி

நவாலி, ஜன. 24

இலங்கை உயர் தொழில் நுட்பக்கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த ஐவர் இம்மாதம் முதல் 6 மாத காலப் பயிற்சியை மேற்கொள்வதற்காக யாழ். செயலகத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(இ-100)

# ஆனைக்கோட்டையில் துணிகரக் கொள்ளை!

நவாலி, ஜன. 24

இரவு வேளையில் வீட்டைச் சோதனையிடப் போவதாக கூறியவர்கள் பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்ளையடித்துச் சென்றனர்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

செவ்வாய் இரவு 10 மணியளவில் ஆனைக்கோட்டை ஆருகால்மடம், லோட்டஸ் வீதியைச் சேர்ந்த ஒருவரது வீட்டுக்குள் கைக்கோடரி, வாள், கத்தி போன்ற ஆயுதங்கள் சகிதம் வசயில் கறுப்புத்துணி கட்டியவாறு நுழைந்த 8பேர் கொண்ட கோஷ்டி வீட்டைச் சோதனையிடப் போவதாகவும் எல்லோரையும் ஓர் இடத்தில் இருக்கும்படியும் கூறினர்.

பின்பு அங்கிருந்த பெறுமதியான ரீவி, டெக், நகைகள், பணம் என்பனவற்றை அவர்கள் எடுத்துச்சென்றனர்.

மறு நாள் காலை வீட்டுக்காரர் எழுந்து வெளியில் பார்க்கையில் அவர்களது வெளிப் படலையடியில் சங்கிலியும் காப்பும் விழுந்து கிடந்தன. கொள்ளையர்கள் ஏனைய பொருள்களுடன் தலைமறைவாகி இருந்தனர். (இ-100)




# 3 ஆம் ஆண்டு அகவை பெறும் ஸ்ரீ ஐங்கரன் வெதுப்பகம்

டச்சு வீதி, சாவகச்சேரி.

வேரோடி விழுது பரப்பி
பேரோடு நாமிலங்கச்
சீரோடு கைகொடுத்த
பாரோங்கு மன்புக்கு
நன்றி! பல நன்றி! பலகோடி நன்றி சொன்னோம்!

★ ★ ★

தடை கடந்து தரணியிலே
நடைபயின்று நாமெழுந்தோம்
திடமுடனே சேர்ந்து நின்று
திசழ வைத்தீர் நன்றி சொன்னோம்

★ ★ ★

தரத்தில் சிறந்த பாண், கேக், பணிஸ், பிஸ்கட்வகைகள், கேக்பேக்கிங், ஐசிங் எவையானாலும்

**"ஸ்ரீ ஐங்கரன் வெதுப்பகம்"**

என்றும் எங்கும் எல்லோர் மனதிலும்

**() ஸ்ரீ ஐங்கரன் வெதுப்பகம் ()**

எம் வளர்ச்சிக்கு கை கொடுக்கும்:
1) ★ வாடிக்கையாளர்கள்
2) ★ வர்த்தகப் பெருமக்கள்
3) ★ யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கத் தலைவர், செயலாளர், உறுப்பினர்கள், பணியாளர்கள்
4) ★ சக வெதுப்பக உரிமையாளர்கள்

அனைவரையும் இந் நாளில் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

என்றும் உங்களுக்காக எம் சேவை!
எப்பொழுதும் உங்கள் ஆதரவு எங்களுக்குத் தேவை!!

**ஸ்ரீ ஐங்கரன் வெதுப்பகம்**
ஆஸ்பத்திரி பின்புறம்,
[illegible] வீதி, சாவகச்சேரி.

உரிமையாளர், பணியாளர்கள்.

(52811)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். குடாநாட்டு உள்ளூராட்சித் தேர்தல்

★ உடனடிப் போர் நிறுத்தத்திற்காகவும்,

★ நிபந்தனையற்ற பேச்சு வார்த்தையை நிர்ப்பந்திக்கவும்,

★ மூன்றாந் தரப்பு மத்தியஸ்தத்தை வற்புறுத்தவும்,

★ நீதியான அரசியல் தீர்வொன்றிற்காகவும்,

★ நிரந்தர சமாதானத்திற்காகவும்,

இனப்பிரச்சினைக்கு தமிழ் மக்கள் தேடும் உறுதியான தீர்வைத்தராத, இணைந்த வடக்கு - கிழக்கு தாயகத்தை துண்டு, துண்டுகளாக்க எத்தனிக்கும், ஜனாதிபதி சந்திரிகாவின் தலைமையிலான பொதுஜன ஐக்கியமுன்னணி அரசின் தீர்வுப் பொதியை நிராகரிக்கவும், தமிழ் மக்களுக்கு எதிராக நாடு தழுவிய அனைத்து அடக்கு முறைகளுக்கு எதிராகப் போராடவும்,

தமிழ் மக்களுடைய எதிர்ப்பு உணர்வுகளை காட்டும் ஓர் அபிப்பிராய வாக்கெடுப்பாக இத் தேர்தலைக் கணிக்குமாறு ரெலோ இயக்கம் கேட்டுக் கொள்கின்றது.

வெலிக்கடை வெஞ்சிறையில் வெட்டி விழ்த்தப்பட்ட எமது தலைவர்கள் தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன், தேவன், நடேசுதாசன், சிவபாதம், ஸ்ரீகுமார், குமார், மரியாம்பிள்ளை, குமாரகுலசிங்கம் உட்பட 53 போராளிகளினதும் நினைவாகவும், இன்றுவரை உயிர்நீத்த சகல இயக்கங்களையும் சேர்ந்த போராளிகளின் நினைவாகவும் மற்றும் சகல பொது மக்களின் நினைவாகவும், ஒவ்வொரு வருடமும் ஜூலை 25 ஆம் திகதியை "தமிழ் தேசிய வீரர்கள் தினம்" என அனுஷ்டிப்பதன் மூலம் அனைத்து இயக்கங்களின் ஒற்றுமையை நிலைநாட்ட ரெலோ இயக்கம் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது.

நடுக்கடலில் திசை தெரியாது தடுமாறும் "தமிழ் தேசிய இனம்" என்ற கப்பலுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்காக, வெளிச்ச வீடாக ரெலோ இயக்கம் விளங்கும்.

## தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ)

X

(D-001)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

இறைச்சிக் கோழி (Broiler) விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். 5(17) கோயில் வீதி, யாழ்ப்பாணம் (ஆஸ்பத்திரி வீதிச் சந்திக்கும் பிரதான வீதிக்கும் இடையில்). [52782]

இறைச்சிக்கோழி (Broiler) கல்டேட்ஸ், சேவல் என்பன மொத்தமாகவும், சில்லறையாகவும் எந்நேரமும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு:- இல. 68, Old Park Road, Jaffna. (52819)

நல்ல இனமானதும் திடகாத்திரமானதுமான 'கினிக் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். பொ. இராமநாதன் கல்வளவு கோப்பாய் தெற்கு, கோப்பாய். [52837]

**புலமைப்பரிசில் — 1998**

18-1-98 இல் நடைபெற்ற புலமைப்பரிசில் - 1998 11 ஆவது பயிற்சி வினாத்தாள் விடைகளுடன் பெற்றுக் கொள்ளலாம். BOND, யாழ். நகர். [52718]

**ஆங்கிலம் — கணிதம்**

ஆண்டு 6 — 11 வரை. Literature ஆண்டு 9, (O/L வினாவிடை உட்பட) G A Q. ஆங்கிலம் Spoken English கற்பிக்கப்படும் ஆசிரியர், 85, சிவன்கோயிலடி, சிவன்கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. [52824]

**இலகு திருமண சேவை**

46 வயது மலை அரச உத்தியோகப் பெண்ணுக்கும், 40 வயது உத்தரட்டாதி 4 அரச உத்தியோகப் பெண்ணுக்கும் மணமக்கள் தேவை. சொந்த வியாபார முடையோரும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு:- ஞாயிறு காலையில் துரைவிமலா, யாழ். நாச்சிமார் கோயிலடி. [52733]

**தவறிவிட்டது**

தர்மலிங்கம் மயூரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டையும் (782903733V), விசேட அடையாள அட்டையும் 20-01-98 அன்று மாலை கோண்டாவில் டிப்போ அண்மையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன். சன்மானம் வழங்கப்படும். [52841]

சண்முகம் இரத்தினசிங்கம் என்பவரது 663441108V இலக்க தேசிய அடையாள அட்டை இலங்கை வங்கி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அரசடி வீதி, வட்டு தெற்கு, வட்டுக்கோட்டையில் ஒப்படைக்கவும். [52825]

மாணிக்கம் பிரதாபன் ஆகியஎனதுதேசியஅடையாள அட்டையும் (70088667V), விசேட அடையாள அட்டையும், சாரதி அனுமதிப்பத்திரமும், தொழில் அடையாள அட்டையும் 19-01-98 திங்கள் அன்று யாழ். நகரப் பகுதியில் பேர்ஸ் ஒன்றுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் "ரஞ்சனாவி", இல. 4, மத்தியசந்தை, கன்னாகம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். [52840]

பெறுமதிமிக்க கறுப்பு கைப்பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கோ. ஆனந்தராணி, பிடாரிகோயிலடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். [49912]

19-1-98 திங்கட்கிழமை பி.ப 5.30 மணியளவில் அராலியூடாக மாதகல் புறப்படவிருந்த (C T B) பஸ்ஸில் தங்கநகை அடங்கிய சிறுப்புநிற பேர்ஸ் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கருணை சுரந்து புனிதா நகைமாளிகை, 239, கஸ்தூரியார் வீதி என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [52810]

**தவறிவிட்டது**

கந்தசாமி அனேசமூர்த்தி என்பவரது (713640948), இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை, பல்கலைக்கழக அடையாள அட்டை என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் ஒப்படைக்கவும். [52828]

**இறைச்சிக்கோழி**

புறோயிலர் (Broiler) இறைச்சிக்கோழி தினந்தோறும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- இல. 141, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (52834)

இறைச்சிக் கோழி (புறோயிலர்), விற்பனைக்குண்டு. ஒவ்வொரு நாளும் பெற்றுக் கொள்ளலாம். சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும். மொத்தமாகவும், சில்லறையாகவும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: Lucky Farm, Sales Centre Palaly Road, Thirunelvely. [52843]

இறைச்சிக் கோழிகள் (புறோயிலர் அல்ல) விற்பனைக்கு உண்டு. சில்லறையாகவும், மொத்தமாகவும் விற்கப்படும். தொடர்பு கொள்ளவும்: கே. வி. சாமி, 131/1, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். [52838]

**வாடகைக்குத் தேவை**

3 பேர் கொண்ட டாக்டர் குடும்பத்திற்கு யாழ். மாநகர சபை எல்லைக்குள் நல்ல நிலையிலுள்ள வீடொன்று வாடகைக்குத் தேவை. தொடர்பு:- மே/பா 685, "உதயன்" இல 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [52814]

**சிங்களம்**

எழுத்து/பேச்சுப் பயிற்சி புதிய வகுப்பு ஆரம்பம்:- 28-01-98 புதன் பி.ப 4.00 ஏற்கனவே 1 கட்டப் பயிற்சி முடித்தவர்களுக்கு அடுத்த கட்டப் பயிற்சியும் ஆரம்பமாகவுள்ளது T Sagathevan English & Sinhala Classes, 46, பிரப்பங்குளம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். [52813]

**காணி விற்பனைக்கு**

சுன்னாகம் கந்தரோடை வீதியில் றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கு அண்மையில் நல்ல வருமானமுள்ள தென்னங்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: திருமதி மண்டலம், "தேவி பவனம்" அந்தோனியார் வீதி, சுன்னாகம். [52833]

**விற்பனைக்கு**

ஓர் 4 கேரியர், (F) பால் சைக்கிள், சில்வர் வைப் பிரஸ், பாம் கன்றுகள் விற்பனைக்குண்டு.

**பிளான்ட் பரடைஸ்**
152/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
(52790)

## ஆண்டு 6 அனுமதி 1998

1997 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆண்டு 5 புலமைப் பரிசிற் பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்கள் எமது கல்லூரிக்கான விண்ணப்பங்களைப் பெற்று அனுமதிக்காக 06-02-98 -க்குமுன்னர் விண்ணப்பிக்குமாறு கோரப்படுகின்றனர்.

அதிபர்,
யாழ். வேம்படி மகளிர் உயர் தர பாடசாலை,

அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.
(சி2708)

## வாழ்த்துகின்றோம்

பிரபல சமூக சேவையாளரும், அனைத்துலக எம் ஜி ஆர். மன்றத் தலைவரும், சமாதான நீதிவானுமான எமது இனிய அண்ணா

**திரு. பொன். மதிமுகராஜாவின்**
**50 ஆவது பிறந்த தினம் 24-01-98 இல்**
**பொன்விழா**

எடுக்கும் இந்நேரத்தில் நாமும் அவரை பல்லாண்டு வாழ்க! என வாழ்த்துகின்றோம்.


இயற்கைநேசன்
குறள் வழி வள்ளல்
மா, கனகராஜா

இளவரசி களஞ்சியம்,
பிரதான வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

எம்.ஜி. ஆர்.
பேக்ஹவுஸ்,
மகாத்மா வீதி,
நெல்லியடி.

தர்மம் தலை காக்கும்; தக்க சமயத்தில் உயிர் காக்கும்.
பூமியில் நேராக வாழ்பவர் எல்லோருக் சாமிக்கு நிகரில்லையா?
மாபெரும் சபையினில் நீ நடந்தால் உனக்கு மாலைகள் பல விழவேண்டும்.
(சி/2705) M.G R.

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | | மறைவு: |
|---|---|---|
| 06 | | 18 |
| 07 | | 01 |
| 1911 | | 1993 |

**முத்துத்தம்பி கந்தையா**
(மட்டுவில் தெற்கு)
திதி: 24-01-1998

ஆண்டு ஐந்து ஆயினும் உங்கள் நினைவுகள் என்றும் எங்கள் நெஞ்சை விட்டு அகலாது.

என்றும் நினைவு கூரும்,
- குடும்பத்தினர்

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி
(52748)

## விற்பனைக்கு

தமிழ் மக்களுக்கொரு வரப்பிரசாதம்!

ஆம், பிரயாண அலைச்சல், வீண் பணச்செலவு இல்லாமல் சுக வாழ்வை விரும்பும் ஒவ்வொருவருக்கும் பிணியகற்ற உங்கள் இல்லங்களுக்கு அருகிலுள்ள மருந்துக் கடைகளில் குறைந்த விலையில் பின்வரும் எமது மருந்துகளை வாங்கிப் பாவித்துப் பயனடையுங்கள்.

| | | மொ. விலை | சி. விலை |
|---|---|---|---|
| விநாயகர் விரண களிம்பு 10g | — | 23 00 | 25 00 |
| விநாயகர் விரண தைலம் 30ml | — | 22 00 | 25 00 |
| அகஸ்தியர் வாத நோவு தைலம் 30ml | — | 33 00 | 35 00 |
| அகஸ்தியர் இரத்தி எண்ணெய் 30ml | — | 33 00 | 35 00 |

பரம்பரை வைத்திய முறைப்படி தயாரிக்கப்பட்டவை
ஒரு முறை வாங்கிப் பாவித்தால் பலன் விளங்கும்.
நியாயமான விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள, நாடவேண்டிய விலாசம்:

**சென்றல் வைத்தியசாலை & மருந்தகம், கைதடி.**
**கிளை: சென்றல் வைத்தியசாலை, உடுப்பிட்டி.**

விற்பனை முகவர்கள் கடித மூலம் தொடர்பு கொள்க.
உடன் கவனிக்கப்படும். விசேட சலுகை உண்டு. [52784]

**உங்கள் வாக்குகளை எங்கள் சின்னத்துக்கு தாருங்கள்!**
**உங்கள் ஆதரவை எங்கள் கட்சி கொள்கைக்கு தாருங்கள்!**
**எங்கள் வேட்பாளர்களை உங்கள் சேவகர்களாக ஏற்றுக் கொள்ளுங்கள்!**

**ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)** X

[ஏ-0025]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டுக்கள்

### யா/டிறிபேக் கல்லூரி,
சாவகச்சேரி.

1997 ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற எட்டு மாணவர்களையும் பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

1. செல்வி சாமந்தி வேலாயுதம்
2. செல்வி காயத்திரி குமாரதேவன்
3. செல்வி தாரணி இராஜதுரை
4. செல்வன் அருணோதயராசா ரஜீவன்
5. செல்வன் தெய்வேந்திரன் மயூரன்
6. செல்வன் திருநாவுக்கரசு குமரேசன்
7. செல்வன் சுந்தரலிங்கம் கபில்ராஜ்
8. செல்வன் செந்தில்வடிவேல் எதிபன்

இவர்களுள் 149 புள்ளிகளைப் பெற்று யாழ். மாவட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்ற செல்வி சாமந்தி வேலாயுதத்தை சிறப்பாகப் பாராட்டுவதுடன், இம்மாணவர்கள் சிறந்த பெறுபேற்றை அடைவதற்கு வழிசமைத்த ஆசிரியைகளையும் பாராட்டுகின்றோம்.

பெற்றோர் ஆசிரியர் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

யா/ டிறிபேக் கல்லூரி,
சாவகச்சேரி. (சி/2710)



உ
தேவி மயம்

## அபிராமி தாச உற்சவம்

மேற்படி உற்சவம் 27-01-98 செவ்வாய்க்கிழமை யாழ். வண்ணைகலட்டி எச்சாட்டி மகாமாரி அம்மன் தேவஸ்தானத்தில் வெகு சிறப்பாக நடைபெற திருவருள் கூடியுள்ளது.

நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| காலை | 6-00 மணி | 108 சங்காபிஷேகம் |
| காலை | 8-00 மணி | பூசை |
| பிற்பகல் | 2-00 மணி | மாலைப் பூசை |
| ,, | 2-30 மணி | அபிராமி அந்தாதிப் பாடல் |
| மாலை | 4-00 மணி | வசந்த மண்டப பூசை |
| ,, | 4-30 மணி | அபிராமி அழகிய பூந்தண்டிகையில் வெளி வீதி உற்சவம் |

அந்தாதி பாடல் ஓதுபவர்
நா. வி. மு. நவரத்தினம் (நயினை)

மிருதங்கம் — M. மகேந்திரன்
வயலின் — அ ஜெயராமன்

மங்கள இசை
மு. சிவசுப்பிரமணியம் கோஷ்டியினர், நல்லூர்

சுபம்

உபயம்: நா. திவாகரசர்மா
தி. ஜெயப்பிரபா தம்பதிகள்

அனைவரும் வருக. அபிராமி அருள் பெறுக!

(52755)



## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 22 — 10 — 1930
மறைவு: 04 — 02 — 1997

### அமரர் நடராஜா வல்லிபுரநாதன்
(மின்சார சபை ஓய்வூதியர்)

திதி: 24—01—1998

குடும்பத்தின் குல விளக்காய்த் திகழ்ந்து எம்மை அன்போடும், பாசத்தோடும் வளர்த்து நல்வழி காட்டிய அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரி, மாமி.

திருமதி இ. வல்லிபுரநாதன்,
மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம். (52830)


# யாழ். எம். பி. ஒருவருக்கு பிரதி அமைச்சர் பதவி

யாழ்ப்பாணம், ஜன. 23

ஈ. பி. டி. பி. அமைப்பில் இருந்து பிரிந்து சென்று தனியாக இயங்கும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அணிக்கு பிரதி அமைச்சர் பதவி ஒன்று விரைவில் வழங்கப்பட இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

யாழ். உள்ளூராட்சித் தேர்தல் முடிந்த பின்னர் அவர்களின் அணியைச் சேர்ந்த ஒருவர் பிரதியமைச்சர் பதவியை ஏற்பார் எனத் தெரியவந்தது.

இந்த விடயம் தொடர்பாக அந்த அணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் சாமமூர்த்தி தகவல் வெளியிடுகையில், விரைவில் ஜனாதிபதியைச் சந்திக்கவிருப்பதாகவும்— அதன் பின்னர் இந்தப்பதவியை ஏற்கலாம் என்றும்— தெரிவித்தார். (இ-3-7)

## 28,29 ஆம் திகதிகளில் யாழ். பாடசாலைகள் மூடப்படும்

யாழ்ப்பாணம், ஜன. 24

எதிர்வரும் 29 ஆம் திகதி யாழ். குடாநாட்டில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களை முன்னிட்டு 28 ஆம், 29 ஆம் திகதிகளில் யாழ். குடாநாட்டில் உள்ள சகல பாடசாலைகளுக்கும் விடுமுறை தினங்களாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரு நாள்களுக்கான பதில் பாடசாலைகளை அடுத்து வரும் சனிக்கிழமைகளில் நடத்துமாறு அதிபர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (இ-7)

## இலவசபாடப்புத்தகம்

தென்மராட்சி, ஜன. 24

தென்மராட்சில் கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாடப் புத்தகங்கள் நேற்றுமுன்தினம் முதல் வழங்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## யாழ். இந்துவுக்கு விடுமுறை

யாழ்ப்பாணம், ஜன. 24

உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இன்று முதல் முதலாம் திகதி வரை மூடப்பட்டிருக்கும் என அதிபர் அறிவித்துள்ளார். (உ)

## வள்ளங்கள் அழிப்பு

கொழும்பு, ஜன. 24

இலங்கை விமானப்படையின் கிபிர் விமானங்கள் நேற்று முன்தினம் முல்லைத்தீவு வாவியில் புலிகளின் அதிசக்திவாய்ந்த 6 வள்ளங்களைத் தாக்கி அழித்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த வள்ளங்களின் மத்தியில் தற்கொலைத்தாக்குதல் நடத்தும் வீரர்களைக் கொண்டபடகுஒன்று விரைவதாக விமானப்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த வள்ளத்தில் இருந்த அனைவரும் கொல்லப்பட்டதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

## நாளை

**தை 12**

ஞாயிற்றுக்கிழமை
திதி: துவாதசி
பிற்பகல் 3.32 வரை.
நட்சத்திரம்: மூலம்
காலை 6.01 வரை
பிரதோஷ விரதம்
சுபநேரம்: 9.36-11.06
[illegible]
(பஞ்சாங்கம் இரண்டும்
[illegible] நேரப்படி)

## தாவடியில் உயிரிழந்த இளைஞர்களின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டன

யாழ்ப்பாணம், ஜன. 24

கடந்த 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 10-30 மணியளவில் தாவடிப் பகுதியில் ஊரடங்கு வேளையில் நடமாடியதாகக் கருதப்பட்டு படையினர் நிகழ்த்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் கொல்லப்பட்ட இரு இளைஞர்களது சடலங்களும்நேற்று முன் தினம் அடையாளம் காணப்பட்டன.

யாழ். கொட்டடியைச் சேர்ந்த கனகசுந்தரம் கந்தர்தாசன் (வயது 28), கிருஸ்ணபிள்ளை பரமலிங்கம் (வயது26) ஆகியோரே இவ்வாறு கொல்லப்பட்ட இருவருமாவர்.

மல்லாகம் மாவட்ட நீதிவான் இவர்கள் கொலை தொடர்பான மரண விசாரணையை நடத்தினார்.

மரண விசாரணையின் பின்னர் இருவரது சடலங்களும் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன.

இச்சம்பவம் இடம்பெற்ற அதேநாளில் நவாலிப் பகுதியில் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான இளைஞனின் சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (இ-7-ரி)

## பஸ் திரும்பவில்லை

யாழ்ப்பாணம், ஜன. 24

குறிக்காட்டுவான் நோக்கி நேற்று முன்தினம் மாலை சென்ற வடபிராந்திய போக்குவரத்துச்சபை பஸ் நேற்று மாலை வரையும் யாழ் டிப்போவுக்குத் திரும்பி வந்து சேரவில்லை.

இந்த பஸ் தினமும் மாலையில் தீவுப்பகுதி பயணிகளை ஏற்றிச்சென்று இரவில் அங்கு தரித்து நின்று அடுத்த நாள் காலை யாழ். நோக்கி பயணிகளுடன் வருவது குறிப்பிடத்தக்கது.

புங்குடுதீவு மடத்து வெளியில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து நேற்று தீவுப் பகுதி நோக்கிச் சென்ற அனைத்து வாகனங்களும் வேலணையில் வைத்து படையினரால் திருப்பி விடப்பட்டன. (உ-5)

## திரைமறைவு அரங்கு

யாழ். உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் முக்கிய கட்சி ஒன்றின் மூத்த தலைவர் நேற்று முன்தினம் மாலையில் கூறிய கருத்துக்கள் இவை:-

''உண்மையில் நாங்கள் தேர்தல் நடத்த அனுமதித்தது தவறு என்பதை நான் உணர்கிறேன். நாங்கள் அனைவரும் சேர்ந்து இத்தேர்தலைப் பகிஷ்கரித்து தேர்தல் நடக்காமல் பார்த்திருக்க வேண்டும். அழிவுக்கு மத்தியில் மக்கள் படும் கஷ்டம் என்னவென்பது வீடுவீடாக தேர்தல் பிரசாரத்துக்குச் செல்லும் போதுதான் தெரிகின்றது. ஓடு இல்லாத வீட்டுக்குள் வெய்யில், மழையில் அல்லாடும் மக்களிடம் போய் 'வோட்டு' கேட்கவே வெட்கமாக இருக்கின்றது.''

— இப்படிக் கூறினார் அந்தத் தலைவர்.

என்ன செய்வது? காலம் கடந்து விட்டது. ''கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் செய்வது'' போன்ற சுடலை ஞானம்தான் இது.

உள்ளூராட்சித் தேர்தலை அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் சேர்ந்து பகிஷ்கரிக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டு கூட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட சமயம் அதை முறியடிப்பதற்கு முன்னின்ற தலைவர்களில் அவரும் ஒருவர், தேர்தல் முடிவுகள் வரமுன்பே 'ஞானம்' பிறந்தது சந்தோசம் தான்.

★ ★ ★

வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் நடவடிக்கைகளை தபால் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. யாழ். தபாலகத்தைப் பொறுத்த வரை மொத்த வாக்காளர் அட்டையில் நான்கில் ஒரு பகுதியே நேற்று வரை விநியோகிக்கப்பட்டிருக்கின்றது.

வழக்கமாகத் தேர்தல் என்றால் ஒவ்வொரு பிரிவு மக்களுக்கும் உரிய வாக்களிப்பு நிலையங்கள் எங்கு அமைந்திருக்கும் என்பது பற்றிய அறிவிப்பை தேர்தல் திணைக்களம் விடுக்கும். ஆனால் தற்போதைய தேர்தலுக்கு அந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட வில்லை.

ஓர் அன்பர் யாழ். நகரின் ஒரு மூலையில்— கொட்டடியில்— வசிப்பவர். அவருக்குரிய வாக்களிப்பு நிலையம் நகருக்கு மற்றொரு மூலையில் நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தில் அமைந்திருக்கும் என்று வாக்காளர் அட்டையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது

ஏற்கனவே வாக்களிப்பதா விடுவதா என்று குழப்பத்தில் இருக்கும் அந்த அன்பர், வாக்களிப்பு அன்று பெரும் பந்தோபஸ்து நடவடிக்கைகளுக்கு மத்தியில் இவ்வளவு தூரம் செல்வதா என்று கேட்டு விட்டு வாக்களிக்காமல் ஒதுங்க முடிவு செய்து விட்டார்.

- மின்னல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளைமோர் தாக்கு

நேற்றுக் காலை நீர்வேலிச் சந்திக்கு அருகில் பொலிஸாரின் ஜீப் ஒன்று கிளைமோர் தாக்குதலுக்கு இலக்காகிச் சேதமடைந்தது.

(உ-9-109-51)

## பிரசாரம்...

(முதலாம் பக்கத் தொடர்)

புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்.,ரெலோ ஆகியவற்றின் தலைவர்கள் குடாநாட்டில் பரவலாக பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டனர். வீடு வீடாகச் சென்று வாக்கு வேட்டையிலும் அவர்கள் ஈடுபட்டனர்.

ஈ.பி.டி.பி. அமைப்பினர் வாகன அணி ஒன்று மூலம் நேற்று சூறாவளிப் பிரசாரத்தை மேற்கொண்டனர்.

சுமார் 40 வாகனங்களில் 500பேர் யாழ். நகரப் பகுதி, திருநெல்வேலி, நல்லூர், அரியாலை, கல்வியன்காடு, கொழும்புத்துறை, பாஷையூர், குருநகர், நாவாந்துறை பகுதிகள் உள்ளடங்கிய பகுதிகளில் ஐந்து மணி நேரம் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

## யாழ். ...

(முதலாம் பக்கத் தொடர்)

கிடைத்துள்ளன என்று அவர் தெரிவித்தார்.

அவதானிகள் குழு ஒன்று விரைவில் அங்கு செல்லவிருக்கின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் அர்ஜுன பராக்கிரம, வர்ண கருணதிலக ஆகியோரும் பங்குபற்றினர்.

(உ-3)

## 45 ஈழ...

(முதலாம் பக்கத் தொடர்)

விசேட வித்துவேவியப் பாதுகாப்பு விமானத்தில் அழைத்து வரப்பட்ட இவர்கள் நேற்றுக்காலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் இரகசியப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

வித்துவேவியாவில் இருந்து நாடு கடத்தப்பட்ட இவர்கள் அனைவரும் 30 வயதுக்குக் குறைந்த இளைஞர்கள் என்று விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இரகசியப் பொலீஸார் இவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(உ-7)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
தமிழ் மன்றத்தின் ஆதரவில் யாழ்ப்பாண
நாட்டார் வழக்கியற் கழகம் வழங்கும்

**'சத்தியவான் சாவித்திரி'**

(புராண இசை நாடகம்)

தயாரிப்பு - நெறியாள்கை
கலாநிதி இ. பாலசுந்தரம் அவர்கள்

இடம்: யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
கைலாசபதி கலை அரங்கம்

காலம்: 24-01-1998 சனிக்கிழமை பிற்பகல் 2 மணி

பிரவேசம் 20/- 50/-

நுழைவுச் சீட்டுக்களை மண்டபவாயிலில் பெற்றுக் கொள்ளலாம்.

நாட்டார் வழக்கியற்கழக பணிதொடர
மங்கல விளக்கேற்றி வாழ்த்துவோர்.

திருமதி S. அருள்நங்கை (நிர்வாகி)
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (52853)





**வாழ்த்துகிறோம்**

எமது கழகத்தின் தலைவரும்,
பிரபல சமூகசேவையாளரும்,
அனைத்துலக எம். ஜி. ஆர்
பேரவை தலைவரும்,
சமாதான நீதிவானுமாகிய
எமது இனிய அண்ணன்

**திரு. பொன். மதிமுகராசா**

அவர்களின்

**50 ஆவது பிறந்தநினம் இன்று**

24-01-98 சனிக்கிழமை
(பொன் விழா) நடைபெறும்.

இடம்: தலைமைச்செயலகம்
எம். ஜி. ஆர் இல்லம், தாவடி

அனைத்துலக எம். ஜி. ஆர். பேரவை
தாவடி.

விளம்பர அன்பளிப்பு:

சிறி நதியா நகைமாடம்
2 G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

இணை நிறுவனம்:-

சிறி ரூபா நகைமாடம்
131, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சிறி நதியா நகைமாடம்
56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/2715)


## கூட்டணியின் தேர்தல் பிரசாரம்

யாழ்ப்பாணம், ஜன. 24

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரங்கள் வானொலியிலும் தொலைக்காட்சியிலும் இடம் பெறவுள்ளன. உரையாற்றுவோர் விவரம் வருமாறு:-

வானொலி

★ இன்று மாலை 7.00 முதல் 7.15 வரை:- மாவை சேனாதிராஜா

★ நாளை இரவு 8.15முதல் 8.30 வரை:- எம். சிவசிதம்பரம்

தொலைக்காட்சி

★ இன்று இரவு 9.15முதல் 9.30வரை:- மாவை சேனாதிராஜா

★ நாளை இரவு 7.00முதல் 7.15வரை:- திருமதி சரோஜினி யோகேஸ்வரன்

★ நாளை மறுதினம் இரவு 7.00 முதல் 7.15 வரை:- மாவை சேனாதிராஜா (உ)

## ஷெல் தாக்குதல்

மட்டக்களப்பு — வாழைச்சேனை மாசிவன் தீவுப் பகுதியை நோக்கி கடந்த புதன்கிழமை இரவு 10.30 மணியளவில் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத் தாக்குதலில் 3 வீடுகள் சேதமடைந்தன. ஷெல் தாக்குதலைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள் பாதுகாப்புத் தேடி காட்டுக்குள் ஓடினர்.

(உ-164-3)

## புங்குடுதீவு..

(முதலாம் பக்கத் தொடர்)

எடுத்துச் சென்றனர்.

தாக்குதலுக்கு உள்ளான அந்த முகாம் பகுதியில் இராணுவத்தினர் தற்போது நிலை கொண்டுள்ளதாக தகவல்கள் தெரிவித்தன.

அந்தமுகாமில் இருந்தஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் அங்கு இருந்து வெளியேறி வேலணையில் உள்ள தமது முகாமில் தங்கியுள்ளதாக ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சமரில் புலிகள் தரப்பில் ஐவர் உயிரிழந்ததாகவும்— அவர்களின் சடலங்களை புலிகள் எடுத்துச் சென்றுவிட்டதாகவும்— ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் யாழ்ப்பாணத்தில் தெரிவித்தன. (உ-ஐ-3-5-7-9-ரி-51-103)


இடநெருக்கடி காரணமாக
பாசுபதன் எழுதும்

**'சமர்க்களம்'**

கட்டுரை இன்று சஞ்சீவியில் பிரசுரமாகவில்லை. இடவசதியையிட்டு அடுத்து வரும் நாள்களில் உதயனில் சமர்க்களம் பிரசுரமாகும்.


## சடலத்தை ஏற்க மறுப்பு

வவுனியா, ஜன. 24

நெடுங்கேணிப் பகுதியில் கடந்த புதன்கிழமை நள்ளிரவு 12 மணியளவில் படையினரின் சூட்டுக்குப் பலியான ஒருவரின் சடலத்தை விடுதலைப் புலி உறுப்பினரின் சடலம் என்று தெரிவித்து விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஆனால் அந்தச் சடலம் தமது அமைப்பு உறுப்பினருடையது அல்ல என்று தெரிவித்து அதை ஏற்க விடுதலைப் புலிகள் மறுத்துவிட்டனர்.

மன்னாறு இராணுவத்தினரின் தகவலின்படி செஞ்சிலுவைச்சங்க வவுனியாக்கிளைத் தலைவர் சிவநாதன் கிஷோர் இச் சடலம் குறித்து விடுதலைப் புலிகளுக்கு தகவல் தெரிவித்தார்.

ஆனால் விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்ட நபர் தமது உறுப்பினர் அல்லர் என்று தெரிவித்து சடலத்தை ஏற்க மறுத்ததையடுத்து, சடலம் வவுனியா ஆஸ்பத்திரியில் தற்போது வைக்கப்பட்டுள்ளது.

(உ-164-3)

## கைதிகள் களுத்துறைக்கு

மட்டக்களப்பு, ஜன. 24

மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 67 தமிழ் அரசியல் கைதிகளும் நேற்று பலத்த பாதுகாப்புடன் பஸ் ஒன்றில் களுத்துறை சிறைச்சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர்.

(உ-21)

## கிரிக்கெட்

குருநகர், ஜன. 24

யாழ். மாநகர சனசமூக நிலையங்களின் சமாசம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று காலை 8.30 மணிக்கு கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலைய மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 25,27,30 ஆம் திகதிகளில் நடைபெறும் இப்போட்டிகளில் ஒன்பது சனசமூக நிலைய அணிகள் மோதவுள்ளதாக யாழ். மாநகர சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் க. நாகேந்திரம் தெரிவித்தார்.

(உ-51)


நாய்களுக்கான

**நோய் தடுப்பு மருந்து**

நாய்களுக்கான தடுப்பு ஊசி மருந்துகள் உடன் விற்பனைக்கு உண்டு. பார்வோ (Parvo), ரேபிஸ் (Rabies Nobvac), டிஸ்ரம்பர் (Nobivacdhl) மற்றும் விற்றமின்ஸ் மருந்துகள் உடன் விற்பனைக்கு உண்டு.

மல்லிகாபதி
சந்தை கிழக்கு ஒழுங்கை,
மானிப்பாய்.

(52859)



**Institute of Informatics Studies**
*Jaffna, Sri Lanka.*

முதல் முதலில் யாழ். நகரில்...

**AUSTRALIAN COMPUTER SOCIETY**
**Information Technology Examination [June 1998]**

கணணித்துறையில் பல புதிய தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்திய நாம், அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் உலகளாவிய ரீதியில் நடத்தப்படும் கணணிப் பரீட்சைக்கு யாழ். மாணவர்களையும் தயார்படுத்தவுள்ளோம்.

கொழும்பு சென்றுதான் உங்கள் கணணிக்கல்வியை மேற்கொள்ள வேண்டும் என்ற கவலையை விட்டுவிடுங்கள்.

எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

மிகக்குறைந்த கட்டணத்தில் உலகளாவிய ரீதியில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழைப் பெற்றிட

ஆரம்பம்: **31 - 01 - 1998 at 11. 00 a. m.**

மேலதிக விவரங்களுக்கு:

— DIRECTOR —

IIS ★ 68, Clock Tower Road, Jaffna.
★ Navalar Madam, Karaveddy.

(C/2706)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 24-01-98 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி

சஞ்சிகை

24 – 01 – 1998 சனிக்கிழமை

சாரங்கா நகைமாடம்

பெண்ணுக்கு அழகு வண்ண நகைகள் அவள் கண்ணுக்கு அழகு எங்கள் நவயுக நகைகள்.

177/4 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-2682)

## கருத்துக் கலசம்

மயூரா

### பாசமும் பணமும்

யாழ்ப்பாணத்தின்—தமிழர்களின்—பல பாரம்பரியங்கள், மரபுகள், நல்லொழுக்கங்கள் மறக்கப்பட்டும், நலிந்தும் வருவது குறித்து இப்பத்தியில் அடிக்கடி குறிப்பிட்டு வருகின்றோம்.

இந்த வகையில் முதுமை அடைந்த பெற்றோரை அவர்களின் கடைசிக் காலத்தில் காத்துப் பராமரிக்கும் பண்பு அருகி வருவதும் குறிப்பிடக் கூடிய ஒன்றாகும்.

மாதா, பிதா, குரு, தெய்வம்; தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை; தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை; என்பன வெறும் வார்த்தைகளாக அன்றி தமிழர் வாழ்வின் வாழ்க்கை முறைகளாக, நெறிகளாக நடைமுறையில் கடைப் பிடிக்கப்பட்டவை.

அது மட்டுமன்று—

தாயும் தந்தையும் தமது பிள்ளைகளை இவர்களது இளமைக் காலத்தில் எவ்வாறு சீராட்டி, பாராட்டி, பாதுகாத்துக் கண்போலப் பேணி வளர்க்கிறார்களோ—

அதே போலப் பிள்ளைகள் தமது பெற்றோரை அவர்கள் மூப்புற்ற காலத்தில், அவர்கள் மனம் நோகாமல், எவ்வித குறையும் வைக்காமல் பேணிக் காத்துப் பராமரிப்பது எங்கள் மரபு.

குடும்ப உறவுகளும், பிணைப்புகளும், பிடிப்புகளும் முறிவு கண்டு வரும் காலமாக இக்காலம் மாறிவருகிறது. அரசியல் சூழ்நிலையால், போரின் தாக்கத்தினால் குடும்பங்கள் பிரிந்து வாழும் நிலை உருவானது உண்மையே.

நாட்டுச் சூழ்நிலை காரணமாக இளவயதினர் வெளிநாடுகளுக்குச் செல்ல நேர்ந்ததும் தள நிலைமை ஆயிற்று.

பிள்ளைகள் வசதி வாய்ப்புக்களுடன் வாழ, மூப்படைந்த பெற்றோர் நோய் நொடிகளுடன் வயோதிபர் இல்லங்களையும் ஏனையோர் தயவையும் நாடும் பரிதாபம் இப்போது வீட்டுக்கு வீடு வாசற்படி என்றாகி விட்டது.

தமது வாழ்நாளில் நல்ல பதவிகளை வகித்தவர்கள், பணத்துக்குக் குறைவில்லாதவர்கள், பிள்ளைகள் பெரும் உத்தியோகங்களில் இருக்க இங்கே தம்மைப் பராமரிப்போர் இன்றித் தவிக்கிறார்கள்.

அம்மா சாகிறகாலம்; அவரைப் பார்த்துக்கொண்டிருக்க முடியுமா? எனக்கு வெளிநாடு செல்லக் கிடைத்த வாய்ப்பை நழுவவிட முடியுமா? — என்று கேட்கும் பிள்ளைகள் மலிந்து வருகின்றனர்.

வெளிநாடுகளில் உள்ள பலர் தமது தாய் தந்தையருக்குப் பணத்தை அனுப்புகிறார்கள். ஆனால் அந்தப் பணம் பாசத்துக்காக ஏங்கும் மூத்தவர்களுக்குஎம்மாத்திரம்?

உறவுக்கும், உரித்துக்கும், பாசத்துக்கும் ஏங்கும் பெற்றோர்களின், பிள்ளைகளின் பராமரிப்புக்கு ஏங்கும் மூத்தவர்களின், எண்ணிக்கை பெருகி வருவது எமது சமூகம் மிக விரைவில் எங்கோ முட்டிக் கொள்ளப் போகின்றது என்பதற்கான சமிக்ஞைகளில் ஒன்றே!

# இன்பத்துள் இன்பம் இலக்கிய இன்பம்!

இவ்வுலகில் நிம்மதியாக வாழ்ந்து இன்பம் காண்பதற்கு இவ்வுலகைப் படைத்த இறைவனின் நோக்கத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். அதே போலத்தான் கவிதை உலகில் வாழ்ந்து கவி இன்பம் காண வேண்டுமானால் கவிதையைப் படைத்த கவிஞனின் நோக்கத்தைக் காணவேண்டும்.

''அணி செய் காவியம் ஆயிரம் கற்பினும் ஆழ்ந்திருக்கும் கவி உளம் காண்கிலார்'' என்கிறார் பாரதியார். எனவே பாரதியார் கருத்துப்படி கவிதையில் கவிஞனின் உள்ளத்தை காண முயல வேண்டும். கவிதையில் எங்களின் உள்ளத்தை ஏற்றிக் கவிதையைக் குழப்பக் கூடாது. கவிதை கற்புடையது. அதில் கவிஞனின் உள்ளத்துக்கே இடம் உண்டு.

உரையாசிரியர் பரிமேலழகர் உலகு போற்றும் உரையாசிரியராகத் திகழ்கிறார் எனறால் அதற்குக் காரணம் அவர் திருவள்ளுவருடைய உள்ளத்தைக் காணப்பல்லாண்டுகள் உழைத்த உழைப்பே.

### சிலப்பதிகாரத்தில் இலக்கிய இன்பம்

சிலப்பதிகாரத்தில் 'நடந்தாய் வாழி காவேரி' என்றொரு தொடர் வருகிறது. இளங்கோ அடிகள் ஆற்றைப் பார்த்து நடந்தாய் என்பது புதுமையானது. ஆறு பாய்கிறது என்று படித்திருக்கின்றோம். ஆறு ஒடுகிறது என்று படித்திருக்கிறோம். ஆறு நடந்தது என்று படிக்கவில்லையே!

அப்படியானால் இளங்கோ அடிகள் ஏன் ஆறு நடந்தது என்றார்?

காவேரி ஆற்றைப் பெண்ணாகக் கண்டார் இளங்கோ. அதனால் தான் 'நடந்தாய் வாழி காவேரி' என்றார்.

பெண் ஓட்டப் போட்டியில் முதலிடம் பெறலாம். உயரப் பாய்தலில் சாதனை புரியலாம். இவை வரவேற்கத்தக்கனவே. ஆனால் ஓட்டப் போட்டியில் ஈடுபடும்போதும் உயரப்பாய்தலில் ஈடுபடும்போதும் அவளது இயல்பான அழகு குறைந்தே தோன்றும். ஆனால் அவள் நடந்து செல்லும் போது அவளது இயல்பான அழகு இயல்பானதாகவே இருக்கும். இதனைக் கவிஞர்கள் அன்னநடை, பிடிநடை என வர்ணிப்பர்.

ஆறு நடந்தது என்று காவேரியை இளங்கோ அடிகள் கூறுவதற்குக் காரணம் இல்லாமலும் இல்லை.

காவேரி மேற்குக் குடகு மலையிற் பிறந்து — குடகு, மைசூர், கோவை, சேலம் வழியாகவே சோழநாட்டில் புகுகிறது.

குடகுமலையிற் பிறந்த காவேரி அங்கே சிறுமியாக இருக்கிறாள். அதனால் சிறுமி அங்கே குதித்துப் பாய்ந்தாள். மெல்ல மெல்ல வளர்ந்து காவேரி ஓடினாள்.

சோழநாட்டிற்கு வரும் போது காவேரி பருவப் பெண்ணாகி விட்டாள். பருவப் பெண் நடப்பது தானே அழகு. அதனால் 'நடந்தாய் வாழி காவேரி' என்றார்.

'காவேரியே! இருபக்கத்தும் வண்டுகள் சிறந்து ஒலி செய்ய நடந்தாய்' என்றார். 'அழகிய பூ வாடையைப் போர்த்து நடந்தாய்' என்றார். 'கரிய கயற்கண் விழித்து அசைந்து நடந்தாய்' என்றார்.

''மருங்கு வண்டு சிறந்தார்ப்ப
மணிப்பூ ஆடை அது போர்த்து
கருங்கயற்கண் விழித் தொல்கி
நடந்தாய் வாழி காவேரி''

### புறநானூற்றில் இலக்கிய இன்பம்

புலவர்கள் அரசரை இரந்து பாடிப் பரிசில் பெற்றார்கள் என்று கூறுகிறார்கள். பரிசில் பெற்ற புலவர்கள் அரசர்க்கு எதையுமே கொடுக்கவில்லையா? கொடுத்தார்கள். அரசர்கள் கொடுத்ததிலும் உயர்ந்த பொருளை அரசருக்குக் கொடுத்தார்கள்.

அரசர்கள் புலவர்களுக்குக் கொடுத்த பொருள் நிலையற்றது. ஆனால் புலவர்கள் அரசர்களுக்குக் கொடுத்த பொருள் நிலையானது.

புலவர்களுக்கு அரசர் கொடுத்தது உடம்பைப் பாதுகாக்கும் பொருள். அரசருக்குப் புலவர் கொடுத்ததோ ஆத்மாவுக்கு உணவாகிய உயர்ந்த கருத்துக்கள். அரசர் கொடுத்த பொருள் எப்போதே எங்கேயோ போய்விட்டது. புலவர் கொடுத்த பொருளோ இன்றும் நிலைத்துள்ளது. இனியும் நிலைத்து நிற்கும்.

புலவர் பெருஞ்சித்திரனார் வறுமையால் வாடினார். பலநாள்கள் உணவின்றி இருந்தார். அதுபற்றி அவர் கவலைப்படவில்லை. முதுமை அடைந்த தாய் பசியோடு இருந்ததை அவரால் சகிக்க முடியவில்லை.

அதேபோல தன்னை நம்பி வாழும் தன் மனையாள் பசித்திருப்பதையும் அவரால் பொறுக்க முடியவில்லை.

குமண வள்ளலிடம் ஓடோடிச் சென்றார்.

புலவர் ம. பார்வதிநாதசிவம்

''என்தாய் முதுமை அடைந்து விட்டாள். வறுமையினாலும் முதுமையினாலும், மனம் தளர்ந்து வாழ்வை வெறுத்து இன்னும் உயிர் போகுதில்லையே என்று பெருமூச்சு விடுகிறாள். முதுமையால் அவளது கண்பார்வையும் போய் விட்டது. நடப்பதற்குக் கால்கள் தளர்ந்து விட்டமையால் ஊன்றுகோலைக் காலாகக் கொண்டு நடக்கிறாள். எனது தாய்படும் இந்தத் துன்பத்தை என்னாற் சகிக்க முடியவில்லை.

''என்மனைவியோ, சமைப்பதற்கு அரிசி இல்லாமையால் மிகவும் வருந்தி குப்பையிலே உள்ள கீரையைப் பறித்து உப்புத்தானும் இல்லாமல் காய்ச்சி மோரும் இல்லாது பலநாள் சோறு காணாது வருந்துகிறாள்.

''இந்த இருவரும் மகிழ, இவர் பசி நீங்கப் பொருள் தா!'' என்கிறார்.

தாய் பசித்துயரில் வாட அதை நீக்கமுடியாது ஒருவன் இருப்பதை விட உலகில் வேறு துன்பம் இல்லை என்பதை தன் அனுபவத்தில் வைத்துக் கூறித் தாயின் பசி தீர்ப்பதை விடப் பெரிய தர்மம் இல்லை என்பதை விளக்கிய பெருஞ்சித்திரனார் புலவராகவும் சான்றோராகவும் நிமிர்ந்து நிற்கிறார். அவர் கருத்தை விளக்கும் புறநானூற்று அடிகள்.

''வாழு நாளொடு யாண்டுபல
உண்மையின்
தீர்தல் செல்லாதென் உயிரெனப்
பல புலந்து
கோல் காலாகக் குறும் பல வொதுங்கி
நூல்விரித் தன்ன கதுப்பினள்
கண்துயின்று
முன்றிற் போகா முதிர்வினள்யாயும்''

### பதிற்றுப்பத்தில் இலக்கிய இன்பம்

காக்கை பாடினியார் நச்செள்ளையார் என்னும் பெண்பாற் புலவர் வீரத்தைப் பாடுவதில் வல்லவர். அதே நேரத்தில் உளவியல் உண்மைகளையும் சிறப்புறக் கூறக்கூடியவர். பதிற்றுப் பத்தில் ஆறாம் பத்தை அவரே பாடியுள்ளார். ஆறாம்பத்தில் பாடப்பெற்ற மன்னன் ஆடு கோட்பாட்டுச் சேரலாதன்.

சேரலாதன் ஒரு நாள் ஆடல் மகளிரோடு தானும் சேர்ந்து ஆடிவிட்டு அந்தப்புரம் திரும்புகிறான். இதனை அறிந்த அரசிக்கு ஊடல் உண்டாகிறது. கோபம் அடைந்த அரசி தன்கையிலே இருந்த சிறு செங்குவளை மலரால்அரசனுக்குஎறிவதற்கு ஓங்கினாள்.

அரசனுடைய கை கொடுப்பதற்காகக் கவியுமே அல்லாது பிறரிடம் இரப்பதற்காக என்றும் மலர்வதில்லை. அப்படியிருந்தும் ஓங்கியமலரைக் கீழே விழாதவாறு காப்பதற்காக அரசன் கையைப்பணிந்து நீட்டினான். அரசி மலரை எறியவில்லை. ஆயினும் கோபத்தைப் புலப்படுத்தி ''நீ எமக்கு யார்?'' என்றாள்.

மகளிரிடத்து மென்மை உடையவராகவும் போர்க்களத்தில் வன்மை உடையவராகவும் நடந்து கொள்வதே ஆடவருக்குச் சிறப்பு.

போர்களத்தில் அஞ்சாது போர் புரியும் சேரலாதன் அந்தப்புரத்தில் மனையாளின்நியாயமான கோபத்துக்கு அஞ்சி இருகைகளையும் நீட்டி இரந்து நிற்கின்றான். மனைவியின் நியாயமான கோபத்துக்கு அஞ்சிய சேரலாதனின் அன்புள்ளம் காக்கை பாடினியாரைப் பெரிதும் கவர்ந்தது.

அவன் மெல்லியல்பு வாய்ந்த மனைவியின் சிறுகோபத்துக்கும் அஞ்சுபவன். அதேவேள அவள் கையில் இருக்கும் குவளை மலர் நிலத்தில் விழுந்தால் மலர் சிதைந்து விடுமே என்று மலருக்காகவும் ஏங்குபவன். மங்கைக்கும் மலருக்கும் இரங்கும் நல்லுள்ளம் காக்கை பாடினியாரின் பாராட்டுக்கு உரியதாகிறது.

''சுடரும் பாண்டில் திருநாறு
விளக்கத்து
முழாஇமிழ் துணைங்கைக்குத் தழூஉப்
புணையாகச்
சிலைப்பு வல்லேற்றின் தலைக்கை
தந்து நீ
நளிந்தனை வருதல் உடன்றன ளாகி
.............................................
எறிய ரோக்கிய சிறு செங்குவளை
ஈயென இரப்பவும் ஒல்லாள் நீயெமக்கு
யாரையோவெனப் பெயர்வோள்''

### நாலடியாரில் இலக்கிய இன்பம்

அழகை வியந்து பாடாத கவிஞர்கள் இல்லை. அழகைச் சித்திரத்தில் காட்டாத ஓவியக் கலைஞர்கள் இல்லை. அழகை விளக்காத சிற்பங்கள் இல்லை. சொல்லப்போனால் எல்லாக் கலைகளுமே அழகைப் போற்றுகின்றன.

நாலடியார் பாடல் ஒன்று அழகுக்குப் புதுவிளக்கம் தருகிறது. கல்விக்குப் புதுவிளக்கம் தருகிறது; கல்வியையும் அழகையும் இணைக்கிறது.

''கல்வி அழகே அழகு'' என்கிறது. வெறும் கல்வி மட்டும் அழகாகி விடுமா? கல்வியும் வாழ்வும் இணைந்த போதே அழகாகும். கல்வியும் வாழ்வும் இணைந்தால் ''நெஞ்சத்து நல்லம் யாம் என்னும் நடுவுநிலை தோன்றும்''. அந்த நிலை — நாம் நல்லமாக ஒழுகுகின்றோம் என்று நம்மனம் ஒத்துக் கொள்ளும் நிலை. கல்வியால் ஏற்படும் போது கல்வி அழகே அழகாகிறது. நல்லொழுக்கம் பயக்கும் கல்வியே மக்களுக்கு உயர்வான அழகாகிறது.

''குஞ்சி அழகும் கொடுத்தானைக்
கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல—
நெஞ்சத்து
நல்லம் யாம் என்னும் நடுவு
நிலைமையால்
கல்வி அழகே அழகு''

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்களிப்புக்கு இன்னும் நான்கு நாள்களே; மக்களிடமோ தேர்தல் பரபரப்பு மிகக் குறைவு

## உள்ளும் புறமும்

குறுமுனி

குடாநாட்டில் தேர்தல் திருவிழா 'கிளைமாக்ஸை' எட்டி விட்டது என்னவோ உண்மைதான். ஆனால் அந்த 'கிளைமாக்ஸ்' பரபரப்பை ஏற்படுத்துவதாகவோ சூடு பிடித்ததாகவோ இல்லை.

'எங்காத்துக்காரரும் ஆபிஸுக்குப் போகிறார்' என்ற பாணியில் எல்லாக் கட்சிகளும் தேர்தல் பிரசாரத்தில் ஏனோ தானோ போக்கைத்தான் கடைப்பிடிக்கின்றன. அதுவும் கூட யாழ். நகரை அண்டிய பகுதிகளில் தான் தேர்தல் சூடு. நகருக்கு வெளியே தேர்தல் காற்று மிக மிக லேசாகவே வீசுகிறது.

நகருக்குள் கூட, உள்ளூராட்சித் தேர்தல்கள் தொடர்பாக என்னென்ன நடவடிக்கைகள் சட்டத்துக்குப் புறம்பானவையோ, அவற்றைத்தான் அனைத்துக் கட்சிகளும் செய்கின்றன.

சுவரொட்டிகள் ஒட்டக் கூடாது; கட் — அவுட்டுகள் வைக்கக் கூடாது: வாகனங்களில் ஒலிபெருக்கி கட்டி வீதிகள் வழியே சத்தமாகத் தேர்தல் பிரசாரம் செய்யக் கூடாது; தேர்தலை ஒட்டி வெளியிடப்படும் அனைத்துத் துண்டுப் பிரசுரங்களிலும் எப்போது? எந்த அச்சகத்தில்? யாரால்? அது அச்சிட்டு வெளியிடப்பட்டது என்ற விவரங்கள் இருக்க வேண்டும்' — இப்படி தேர்தல் சட்டம் பல்வேறு வரையறைகளைப் போடுகின்றது.

ஆனால் இவை அனைத்தையும் தூக்கி மூலையில் போட்டுவிட்டு தங்களுக்குத் தாங்களே புதிய சட்டங்களை வகுத்துக்கொண்டு செயற்படுகின்றன தமிழ்க் கட்சிகள். தமிழர் விடுதலைக் கூட்டணியைத் தவிர ஏனைய அனைத்துக் கட்சிகளும் வேறுபாடின்றி இதில் முன்னணியில்!

ஆங்காங்கே சில இடங்களில் சுவரொட்டிகளைப் பொலீஸார் கறுப்பு மை பூசி அழித்தது உண்மைதான். ஆனால் சூரனின் தலை வெட்ட வெட்ட முளைப்பதுபோல, ஒரு சுவரொட்டியைப் பொலீஸார் அழித்தால் புதிதாக நூறு சுவரொட்டிகள் முளைக்கின்றன. அதிலும் வேடிக்கை என்னவென்றால், சுவரொட்டி ஒட்டும் பேர்வழிகள், பாதுகாப்புப் படையினர் நிலைகொண்டுள்ள காவலரண்களை அண்டிய பகுதிகளில் பாதுகாப்பு அதிகம் என்று கருதுவதால் படையினர், பொலீஸார் நிலைகொண்டுள்ள இடங்களுக்கு அருகில், அவர்களின் கண்களுக்கு முன்னால் சுவரொட்டிகளை ஒட்டுவதுதான்.

கடந்த சில நாள்களாக நகர்ப்புறத்தில் இவ்வாறு ஒட்டப்பட்டிருந்த சில சுவரொட்டிகளை பொலீஸார் கறுப்பு மை பூசி அழித்தும், கிழித்து எறிந்தும் அகற்ற முயற்சித்து வருகின்றனர். ஆனால் அதை' போல பன்மடங்கு வேகத்தில் சுவரொட்டிகள் ஒட்டப்படுகின்றன. தமிழ்க் கட்சிகள் யாழ். நகரில் ஒரே இடத்தில் பலடசின் சுவரொட்டிகளை வர்ணப் போஸ்டர்களை ஒட்டும் விதத்தைப் பார்க்குப்போது 'சந்தனம் மிஞ்சியவன் எங்கோயா பூசினானாம்' என்ற பழமொழி தனக்கு நினைவுக்கு வருவதாக அன்பர் ஒருவர் கூறுகின்றார்.

போஸ்டர் விவகாரத்தில் தேர்தல் சட்டங்கள் குளறுபடியாக இருப்பதுதான் கட்சிகளுக்கு வாய்ப்பாகப் போய் விட்டது. தேர்தல் சுவரொட்டிகளை அச்சிடுவது குற்றமல்ல; அதனை விமானத்தில் எடுத்து வருவதும் குற்றமல்ல; பசைபூசி சுவரில் ஒட்டுவது கூட குற்றமல்ல. ஆக சுவரொட்டிகளை பார்வைக்கு பொதுவிடத்தில் காட்சிக்கு விடுவதுதான் சட்டரீதியாகத் தவறாகும். தேர்தல் சட்டத்தில் சுவரொட்டிகளைப் பார்வைக்கு விடுவதுதான் தவறு என்று மட்டுமே கூறியிருப்பதைப் பயன்படுத்தி விளாசித் தள்ளுகின்றன கட்சிகள்; ஆனால் பொலீஸாரோ வாய்மூடி மௌனிகளாக இருக்கின்றார்கள்.

'கட்—அவுட்' விவகாரம் கூட அப்படித்தான்.

'கட்—அவுட்' வைக்கக் கூடாது. வைத்த கட்—அவுட்டுகளை அகற்றி விடுங்கள் என்று சகல அரசியல் கட்சிப் பிரதிநிதிகளையும் தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் மகிந்த ஹெட்டியாராச்சி சில தினங்களுக்கு முன் நேரில் அழைத்து பணிப்புரை விடுத்திருந்தார். ஆனால் 'கட்—அவுட்' சம்பந்தமான பணிப்புரையை 'கட்'பண்ணி விட்டு கட்சிகள் தங்கள் பாட்டில் கோலாகலமாக 'கட்—அவுட்' கலையை வளர்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

துண்டுப் பிரசுரங்கள் பல வெளிவருகின்றன? அவற்றில் பலவற்றில் அச்சிட்டவர் யார்? அச்சகம் எது? வெளியிட்டவர் யார்? வெளியிட்ட திகதி என்ன? என்பவை போன்ற அடிக்குறிப்புக்களைக் காணவேயில்லை.

ஒரு கட்சி, தனதுமறைந்த தலைவர், முதன்மை வேட்பாளர், துணை முதன்மை வேட்பாளர் போன்றோரின் படத்தைப் போட்டு ஒரு பிரசார நோட்டீஸ் வெளியிட்டுள்ளது. அதன் பின்புறத்தில் எப்படி வாக்களிப்பது என்று வாக்காளர்களுக்கு விளக்கமும் அளித்திருக்கின்றது.

வாக்காளர் முதலில் கட்சிக்கு — அதன் சின்னத்துக்கு — புள்ளடியிட்டு வாக்களிக்க வேண்டும். வாக்குச்சீட்டில் அதன் கீழ் 1, 2, 3, 4 என போட்டியிடும் வேட்பாளர்களின் இலக்கம் குறிப்பிடப்பட்டிருக்கும்.

ஒரு வாக்காளர் ஒரு கட்சிக்கு வாக்களித்த பின்னர் தான் விரும்பினால் தமது விருப்பு வாக்குகளை அக்கட்சியின் வேட்பாளர்களுக்கு வழங்கலாம்; அல்லது வழங்காமல் விடலாம்.

ஒவ்வொரு வாக்காளருக்கும் தாம் விரும்பினால் மூன்று அல்லது மூன்றுக்குக் குறைந்த எண்ணிக்கையில் விருப்பு வாக்குகளை அளிக்க முடியும்.

தான் எக்கட்சிக்கு புள்ளடியிட்டு தமது வாக்கைச் செலுத்துகின்றாரோ அக்கட்சியைச் சேர்ந்த ஒரு வேட்பாளருக்கே மூன்று விருப்பு வாக்குகளையும் அவர் அளிக்கலாம்; அல்லது மூன்று விருப்புவாக்குகளில் ஒன்றையோ, இரண்டையோ அல்லது மூன்றையோ இருவருக்கு அல்லது மூவருக்கு பங்கிட்டோ கூட ஒருவர் போடலாம்.

இதற்காக கட்சிச் சின்னங்களுக்குக் கீழ் ஒரு கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை அளவுக்கு இலக்கங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும். அந்தஇலக்கங்களுக்கு அருகில் இரண்டு கட்டங்கள் இருக்கும்.

ஒருவர் ஒரு கட்சிக்கு வாக்களித்த பின்னர், அந்த கட்சியின் வேட்பாளர் பட்டியலில் உள்ள 8 ஆம் இலக்க வேட்பாளருக்கு தமது விரும்பு வாக்குகள் மூன்றையும் அளிக்க விரும்பினால் 8 ஆம் இலக்கத்துக்கு மேலும் அதற்குப் பக்கத்தில் உள்ள இருகூடுகளுக்குள்ளும் புள்ளடிகளை இடலாம். தமது விருப்பு வாக்கில் ஒன்றை மட்டுமே 8 ஆம் இலக்க வேட்பாளருக்கு போட அவர் விரும்பினால் 8 ஆம் இலக்கத்து கூட்டுக்கு மேலே மட்டும் ஒரு புள்ளடியிட்டுவிட்டு மற்றைய இரு விருப்பு வாக்குகளையும் அதே கட்சியின் வேறு இரு வேட்பாளருக்கு அவர் போடலாம்; அல்லது எஞ்சிய இரு விருப்பு வாக்குகளையும் அவர் போடாமற் கூட விட முடியும்.

எது எப்படியென்றாலும், பொதுமக்கள் தமது விருப்பு வாக்குகளை வெளிப்படுத்துவதற்காக வாக்குச்சீட்டில் வேட்பாளர்களின் இலக்கங்களும் அந்த இலக்கங்களுக்கு அருகில் இரு கூடுகளும். (கட்டங்களும்) இருக்கும் என்பது மட்டும் நிச்சயமானது.

ஆனால் சம்பந்தப்பட்ட கட்சி அச்சிட்டிருக்கும் மாதிரி வேட்புமனு சட்ட ரீதியானதா? மாதிரி வேட்புமனு அச்சிடலாமா? என்பவை சர்ச்சைக் குரியவை.

எது எப்படி என்றாலும் —

குடாநாட்டு மக்களுக்கு வாக்களிப்பது எப்படி என்பது இன்று இப்போதைய சந்தர்ப்பம் வரை புரிந்திருக்குமா என்பது கேள்விக் குறியே. இதனாலும் கூட இம்முறை பழுதடைந்த வாக்குகள் அதிகம் வர வாய்ப்புண்டு.

★ ★ ★

யாழ். உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடும் அனைத்துக் கட்சிகளுக்குள்ளும் ஒரு விடயத்தில் ஒற்றுமைகாணப் படுகின்றது. விடுதலைப் புலிகள்குறித்து அவர்கள் அடக்கி வாசிப்பதுதான் அது.

மாற்றுக் கட்சிகள் தங்க [illegible] சேற்றை வாரிப் பூசிக்கொள்கின்றன என்பதெல்லாம் வாஸ்தவம்தான். ஆனால் புலிகளை விமர்சிப்பதையும், கண்டிப்பதையும் தவிர்த்து அந்த விடயத்தில் அவை மௌனப் போக்கையே கடைப்பிடிக்கின்றன.

இது தொடர்பாக கொழும்பிலிருந்து வெளியாகும் தமிழ் வாரப்பத்திரிகைஒன்றுஇரண்டொரு தினங்களுக்கு முன்னர் வெளியிட்ட விமர்சன கருத்து பொருத்தமானதாக இருப்பதால் அதை இங்கு பிரசுரம் செய்கின்றோம்,

''இன்றைய உண்மை நிலை உணராமல் கண்ணை மூடிக் கொண்டு புலி எதிர்ப்புப் பேசிய கட்சிகளின் கண்களை யாழ். உள்ளூராட்சித்தேர்தல் திறந்து விட்டுள்ளது.

''புலிகளுக்கு எதிராக வாய் திறந்தால் விழுகிற வாக்கும் விழாது என்று தெரிந்து விட்டதால் 'புலிகளுக்கும் எங்களுக்கும் பிரச்சினை இல்லை'என்று தங்கள் வாயாலேயே தமிழ்க் கட்சிகள் கூறுவதுதான் வேடிக்கையாக இருக்கின்றது.

''யாழ்.தேர்தல் களத்தில் தமிழ்க் கட்சிகளின் புலிச் சார்பு நாடகம் ஓர் உண்மையைத் தெட்டத் தெளிவாக உணர்த்தி விட்டது. தமிழ் மக்களின் தலைமைச் சக்தி புலிகளே என்பதை ஏனைய தமிழ்க் கட்சிகளும் உள்ளூர ஒப்புக் கொண்டு விட்டன. மறைமுகமாக அங்கீகரித்து விட்டன.

''இதில் வெட்கப்பட ஏதும் இல்லை. உண்மை அதுதான். மறுத்துப் பேசுவது வீம்பான பிடிவாதமாக இருக்கும்; பேசுகின்றவர்கள் கேலிக்குள்ளாவார்கள்.''

— இவ்வாறு கூறுகின்றது அந்த விமரிசனம்.

யாழ். தேர்தல் களத்தில் வலு பிடிப்பாக நிற்கும் தமிழ்க் கட்சிகளைப் பார்த்து — குடாநாட்டு மக்களுக்கு ஒரு முக்கிய விடயத்தைத் தெளிவுபடுத்துமாறு — இரு வாரங்களுக்கு முன்னர் — இதே பத்தியில் விஸ்தாரமாகக் கேட்டிருந்தோம். வாசகர்களுக்கு அது நன்கு நினைவிலிருக்கும். அதை மீண்டும் நினைப்பூட்டுவது கூடப் பொருத்தமானதுதான்.

போராட்டத்தில் முக்கிய பங்கு வகிப்பவர்கள் புலிகள். அவர்களுக்கு எதிராக பெரும்பாலான தமிழ்க் கட்சிகள் (இயக்கங்கள்) அரசுப்படைகளுடன் தோளில் கைபோட்டு நிற்கின்றன. ஆனால் அந்த விடயத்தில் தங்களின் நிலைப்பாடு, செயற்பாடு என்னவென்பதை வெளிப்படுத்தாமல், அது விடயத்தை அமுக்கி வாசிக்கின்றன அக்கட்சிகள்.

★ புலிகள் எதிர்ப்பு விவகாரத்தில் தங்கள் நிலைப்பாடு என்ன?

★ தாங்கள் வைத்திருக்கும் ஆயுதங்கள், தங்கள் பாதுகாப்புக்கு மட்டுமா? அல்லது புலிகளைத் தேடிப்பிடித்து அழிக்கவுமா?

★ தங்கள் பாதுகாப்புக்கு மட்டுமே ஆயுதங்கள் வைத்திருந்தால், அதற்கு எப்படி அரசிடமிருந்து இத்தனை எண்ணிக்கை ஆயுதங்களும், 'வேதனமும்' பெறமுடியும்? அரசிடமிருந்து எவ்வளவு 'வேதனம்' பெறப்படுகின்றது? என்ன அடிப்படையில் அரசு அதனை வழங்குகின்றது?

— இத்தகைய கேள்விகளுக்கு தேர்தலில் நிற்கும் கட்சிகள் பதிலளிக்க வேண்டிய கடமை உண்டு.

— இவ்வாறு இரு வாரங்களுக்கு முன்னர் கேட்டிருந்தோம். ஈ.பி.டி.பி., ஈ.பி. ஆர். எல். எவ்., புளொட், ரெலோ ஆகிய — ஜனநாயக வழிக்குத் திரும்பிய (?) கட்சிகளைப் பார்த்தே பெயர் குறிப்பிட்டு இக்கேள்வி எழுப்பப்பட்டது. கூட்டணி இப்பட்டியில் சேர்க்கப்படவில்லை; சேர்க்கப்படவும் முடியாதது.

இத்தகைய விவகாரங்களில் இக்கட்சிகள் தமது கருத்தை இறுக்கமாகவும், சுருக்கமாகவும் வெளியிட்டால் அதனை மக்கள் முன் வைப்பதற்கு 'உதயன் — சஞ்சீவி' தயங்க மாட்டான் என்பதையும் குறிப்பிட்டிருந்தோம்.

இரண்டு வாரம் கடந்தாகி விட்டது; தேர்தலுக்கு இன்னும் நான்கு நாள்களே பாக்கி. ஆனால் அத்தகைய கட்சிகளின் கருத்து வெளியிடப்பட்டதாகவோ எமக்கு எட்டியதாகவோ இல்லை.

தமது 'புலிகள் எதிர்ப்புப் புறணியை' அவர்கள் அடக்கி வாசிப்பதை இது ஊர்ஜிதப் படுத்துகின்றது.

★ ★ ★

சில தினங்களுக்கு முன்னர் கொழும்பிலிருந்து விமானத்தில் வந்த அன்பர் ஒருவர் கொடுத்த தகவல் இது.

அங்கு இரத்மலானை விமான நிலையத்தில் —சுமாரான விலை மதிக்கத்தக்க— சேலைகள் மற்றும் துணி வகைகள் பல நூற்றுக் கணக்கில் கட்டுக்கட்டாக விமானத்தில் யாழ்ப்பாணத்துக்கு ஏற்றி வரப்படுவதற்காக பொதி செய்யப்பட்ட நிலையில் கிடந்தன.

இங்குள்ள வர்த்தகர்கள் சுமாரான விலை மதிக்கத்தக்க (மிக விலை உயர்ந்தவை அல்ல) சேலைகளை விமானக் கட்டணம் செலுத்தி, கொண்டு வந்து யாழ்ப்பாணத்தில் விற்பவர்கள் அல்லர் என்பது தெரிந்ததே.

தேர்தல் காலத்தில் — வாக்கு வேட்டைக்கு — விநியோகிப்பதற்காக —

தாய்க்குலத்தின் வாக்குகளைத் திரட்டுவதற்காக —

கட்சி ஒன்றினால் அவசர அவசரமாகக் கொண்டு வரப்படுபவையாக அவை இருக்கக் கூடும் என்று சந்தேகப்படுகின்றார் அந்த அன்பர்.

எது எப்படியோ தாய்க் குலத்துக்கு பொங்கல் பரிசு —பிந்தியாவது — கிடைக்கப் போகின்றது போலும்!

இதற்கிடையில்—

தேர்தல் கண்காணிப்புக் குழு யாழ் நகரில் தனது அலுவலகத்தைத் திறந்துபணிகளை ஆரம்பித்து விட்டது.

அந்தக் கண்காணிப்புக் குழுவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட விடயங்களில்முக்கியமானது ஒன்று—

தேர்தல் பிரசாரங்கள் முடிவடையும் நாள்கள் நெருங்கும் இக்கட்டத்தில் தேர்தலில் போட்டியிடும் ஒரு கட்சியின் சார்பில் வெளி மாவட்டங்களில் இருந்து நூற்றுக்கும் அதிகமான தொண்டர்கள் (இளைஞர்கள்) இறக்குமதியாகி இருக்கின்றார்கள் என்பதுதான்!

★ ★ ★

முன்னர் எல்லாம் உள்ளூராட்சித் தேர்தல் வெறும் உள் மட்டத்துக்குள்ளேயே நின்றது. சொந்தக்காரர், நண்பர், அறிமுகமானவர், அறிமுகமானவரின் நண்பர், கிராமத்தில் தனிப்பட்ட செல்வாக்கும் பண வசதியும் உள்ளவர் என்ற மட்டத்திலேயே நின்றது இப்போது கட்சி மட்டத்துக்கு உயர்ந்து விட்டதால் சச்சரவு அரசியலைத் தான் காண முடிகிறது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன யுத்த ஆயுதங்கள் குறித்து மகாபாரதம் விவரித்தது எப்படி?

## ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறப்பட்ட அதிசயக் கருத்துகள்

இந்திய வேதங்கள், வேதாகமங்கள், உபநிடதங்கள், புராணங்கள் போன்றவை உலகிலேயே மிகப் பழமையான நூல்கள்.

அவற்றின் காலத்தைச் சரியாக நிர்ணயிக்க நம்மால் முடியாது. கிறிஸ்து பிறப்பதற்கு பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அவை ஓலைச்சுவடிகளில் இருந்திருக்கின்றன.

''வானத்தின் பரிமாணம் என்ன...?'' என்ற ஒரு கேள்விக்கு, மகாபாரதத்தில் பிருகுமுனிவர் விவரமான ஒரு வர்ணனை கொடுக்கின்றார்.

''அதன் எல்லைகள் அளக்க முடியாதவை; எண்ணிப் பார்க்க இயலாத அளவு கோளங்கள் அவற்றில் இருக்கின்றன. அவை தாமே இயங்கக்கூடியவை. நெருப்பைச் சிந்தும் தட்டுக்கள், ஒளிவிடும் நட்சத்திரச்சுடர்கள், சூரிய—சந்திரரை விட பலமடங்கு அதிகப் பிரகாசம் உள்ள விண்வெளிக் கோளங்கள் அங்கே சுற்றிச் சுற்றி வருகின்றன. தாமே ஒளியைச் சிந்தக்கூடிய அவை, நம்மால் கற்பனை செய்து பார்க்கமுடியாத தூரத்தில் இருக்கின்றன. அவற்றின் ஒளி நம்மை வந்தடைவதற்கே பல ஆண்டுகள் தேவைப்படும். இப்படிப்பட்ட நட்சத்திரங்களை லட்சக்கணக்கில் கொண்டுள்ள ஆகாயம் எல்லை இல்லாதது; அளவில்லாத விரிவு கொண்டது. அதனாலேயே தளவில்லாத சக்தி கொண்ட ஆண்டவன் அங்கே இருப்பதாக நாம் சொல்கிறோம்...'' —இப்படிக் கூறுகிறார் பிருகு முனிவர்.

உலகின் பல்வேறு பாகங்களில் சாதாரண நாகரிகம் கூடப் பரவாத சமயத்தில் —ஐரோப்பாவில் மக்கள் கற்காலத்தில் இருந்துகொண்டிருந்த பொழுதில்— வான் மண்டல ஆராய்ச்சி மிக நுட்பமாக மகாபாரதத்தில் விவரிக்கப்பட்டிருக்கின்றது.

மகாபாரதத்தில் இன்னொரு பகுதி போர்முறைகளைப் பற்றி வர்ணிக்கிறது. இந்தப் போர் முறைகள் இன்று நவீன முறையில் பயன்படுத்தப்படும் ஆயுதங்களைப்பற்றிக் குறிப்பிடுகின்றன.

பூமியைப் பிளந்து தண்ணீரை வற்றச்செய்து, பஞ்சத்தை உண்டாக்கக்கூடிய அஸ்திரம் அதில் குறிப்பிடப்படுகிறது.

காற்றைக் கிழித்துக் கொண்டு, ஒலியை விட வேகமாகச் சென்று தாக்கக்கூடிய அஸ்திரம் அதில் வர்ணிக்கப்படுகிறது.

முன்னும், பின்னும், மேலேயும், கீழேயும் சென்று, எந்த இடத்தை நோக்கி ஏவப்படுகிறதோ அங்கே போகக்கூடிய கணைகள் அதில் விவரிக்கப்படுகின்றன.

விண்வெளியில் பறந்து நின்று அங்கிருந்தபடியே உலகின் எந்தப் பகுதியையும் பார்த்துத் தாக்கக்கூடிய (Setellite—Based) அஸ்திரங்களும், அவற்றின் விண்வெளித்தளங்களும் அதில் குறிப்பிடப்படுகின்றன.

ஒலியைப் பின்பற்றியும், ஒளியைப் பின்பற்றியும் சென்று தாக்கக்கூடிய ஏவுகணைகள் அதில் வர்ணிக்கப்படுகின்றன.

ஒளிக்கதிர்கள் (Laser—Beams) எதையும் பிளந்து தாக்கக்கூடிய வல்லமை கொண்டவை என்பதைப் பற்றிய வர்ணனை அதில் வருகிறது. அதை அடிப்படையாகக் கொண்ட ஆயுதங்களைக் குறிப்பிடுகிறார்கள்.

தரையில் வெகு வேகமாக ஓடக்கூடியவை; வானில்வேகமாகப் பறக்கக்கூடியவை; வானில் ஒலியைக் காட்டிலும் வேகமாகப் பறக்கக்கூடியவை; எந்த இடத்திலும் விண்வெளியில் நிற்கக்கூடியவை—இது போன்ற சாதனங்கள் போரில் பயன்படுத்தப்படுகின்றன.

**- லட்சுமி -**

காற்றோடு கலந்து வேகமாகப் பரவி அழிக்கக்கூடிய வாயுக்களைப் பயன்படுத்தும் முறை (Gas—Warfare) வர்ணிக்கப்படுகிறது.

கிருமிகளைக் கொண்டு நோய்களைப் பயங்கரமாக உண்டுபண்ணி, அதன் மூலம் மக்களை அழிக்கக்கூடிய முறை (Germ—Warfare) விவரிக்கப்படுகிறது.

உலோகத்தைப் பிளந்து உள்ளே சென்று, உடம்பில் கதிர்கள் மூலம் பரவி, தலைமயிர், நகம், பல் ஆகியவற்றை உதிரச் செய்யக்கூடிய கணைகள் (Atomic—Weapons) வர்ணிக்கப்படுகின்றன. அவற்றிலிருந்து தப்பிக்க, போர் வீரர்கள் நீர்நிலைகளுக்குள் மறைந்து கொள்கிறார்கள்.

வானத்தில் விமானத்திலிருந்து போடப்பட்ட அஸ்திரம் பூமியில் விழுகிறது. அதன் விளைவு என்ன என்பதை வர்ணிக்கிறார்கள். ''பெரிய புகை மண்டலம் பிரம்மாண்டமான குடையைப்போல விரிந்து எழுகிறது. கண்ணைப் பறிக்கும் கோடி சூரியப் பிரகாசம் தெரிகிறது! அதிலிருந்து பரவும் மேகங்கள் பட்ட இடங்களில் எல்லாம் மனிதர்கள் பிண்டங்களாகின்றார்கள். தாவரங்கள், மிருகங்கள் யாவும் சிதைந்து போகின்றன. நீர்நிலைகள் கொதிக்கின்றன. காற்றில் விஷவாயு பரவுகிறது...''

இன்று அணுகுண்டு விளைவிக்கக்கூடிய சேதத்தை அப்படியே விளக்குகிறது இந்தப் பகுதி.

இந்த நவீனப் போர்முறை வர்ணனைகளைப் படித்துப் படித்துப் பார்த்தால் ஆச்சரியம் ஏற்படுகின்றது.

''இந்தியாவில் குறிப்பிட்ட பகுதிகளில் அந்தக் காலத்திலேயே அணுஆயுதப் போர் நிகழ்ந்திருக்க வேண்டும். அந்த விநோதமான, கருகிப் போன கற்பாறைகள் இன்னும் இருக்கின்றன. அவற்றைச் சோதித்துப் பார்த்தால் அணு — அழிவுச் சக்திகள் (Radio-active) அவற்றைப் பாதித்திருப்பது புலனாகிறது'' என்று கூறுகின்றார் மேல்நாட்டு பேராசிரியரான எஸ்தர்சொலமன்.

மகாபாரத யுத்த விளைவு குறித்து மகாபாரதத்தில் ஓரிடத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கின்றது:–

''கணைகளின் உக்கிரத்தில் மரங்கள் பற்றி எரிந்தன; ரதங்கள் தீய்க்கப்பட்டன; நெருப்பு வெள்ளம் அலைபுரண்டு — எல்லாவற்றையும் அழித்துக் கொண்டு ஓடிற்று. காற்று பலமாக அடித்தது. நெருப்பும் வாயுவுமாக யுத்தகளமெங்கும் சூழ்ந்தது. மனிதர்களும் மிருகங்களும் கணைகளின் சக்தியால் பாதிக்கப்பட்டுக் கண் பார்வை இழந்து, கை கால் பிளந்து, பிண்டமாக விழுந்த காட்சி அழிவுக்கு முழுமையாக இருந்தது. இதுபோன்ற ஒரு பேரழிவு இயந்திரம் வானிலிருந்து இயங்கித் தரையில் எல்லாவற்றையும் நிர்மூலமாக்கியதாக யாரும் கேள்விப்பட்டதே இல்லை''

''யுத்தகளத்திலிருந்து தப்பியவர்கள் ஓடிப்போய்த் தண்ணீரில் உடலைக் கழுவிக் கொள்ளுகிறார்கள். தங்கள் மீது படிந்த துகள்கள் நாசம் விளைவிக்கும் என்று, அவற்றை அடியோடு துடைத்து அப்புறப்படுத்துகிறார்கள்...''

இந்தக் காட்சியும் வர்ணனையும் அணுஆயுதப் போர் ஒன்றின் அழிவை நினைவுபடுத்துவதுபோல இருக்கின்றது. இதுபோன்ற ஓர் அனுபவம் குறைந்தது ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்தப் பூமியில் நிகழ்ந்திருக்கிறது என்ற பிரமையிலிருந்து எம்மால் விடுபட முடிவதில்லை.

★ ★ ★

அந்த நாளிலேயே ஆண்டுக்கு ஐம்பத்து இரண்டு பகுதி

(XI ஆம் பக்கம் பார்க்க)

# இரண்டு மனைவியர்களுடன் வாழும் கிருஷ்ணர் நித்திய பிரமச்சாரியா?

யமுனை நதியில் வெள்ளம் பெருகிக் கொண்டிருந்தது. அதன் கரையில் துர்வாச முனிவர். பசியுடன்காத்துக் கொண்டிருந்தார். மறுகரையில் நந்தவனத்துக்கு வந்திருந்த கிருஷ்ண பகவான் ருக்மணியிடம், ''யமுனையின் மறுகரையில் துர்வாசமுனிவர் பசியுடன் காத்துக் கொண்டிருக்கிறார்.அவருக்கு உணவு அளித்துவிட்டு வா!'' என்று சொன்னார்.

''சுவாமி!யமுனையில்வெள்ளம் பெருகிஓடிக்கொண்டிருக்கிறதே?எப்படிப் போவது?'' என்று கேட்டாள் ருக்மணி.

சிரித்துக் கொண்டே ஸ்ரீ கிருஷ்ணர். ''நித்திய பிரமச்சாரியான கிருஷ்ணர் என்னைக் கடந்து செல்லச் சொல்லி இருக்கிறார். யமுனையே! வழிவிடு!' என்று சேட்டுக் கொள். யமுனையில் நீர் விலகி ஒரு பாதை உனக்காக வழிவிடும்!'' என்று சொன்னார்.

ருக்குமணிக்கு ஒன்றும் புரியவில்லை.

'இருமனைவியருடனும் வாழும், பதினாயிரம் அரசகுமாரிகளைத் தத்துவரூபமாக மணந்து கொண்ட ஸ்ரீ கிருஷ்ணர் எப்படி 'நித்ய பிரமச்சாரி' என்று தன்னைச் சொல்லிக் கொள்ளுகிறார்?' என்று யோசித்தாள். இருந்தாலும் பகவானின் ஆணைப்படி உணவையும், பட்சணங்களையும், பழங்களையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டுச் சென்றாள். ஸ்ரீ கிருஷ்ணர். சொன்னபடியே கூற, யமுனையும் விலகி வழிவிட்டது! மிகுந்த ஆச்சரியத்துடன் மறுகரைக்குப் போய்ச் சேர்ந்தாள் ருக்மணி.

மறுகரையில் காத்துக் கொண்டிருந்த துர்வாச முனிவருக்கு அறுசுவையுடன் கூடிய உணவைப் பரிமாறினாள். நன்றாகச் சாப்பிட்டுப் பசியாறினார் துர்வாசர்.

''சுவாமி! நான் திரும்பிச் செல்ல வேண்டும். யமுனையில் வெள்ளம் பாய்ந்து செல்லுகிறது. தாங்கள்தாம் நான் திரும்ப உதவ வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டாள்.

''அவ்வளவுதானே? 'நித்ய உபவாசியான' துர்வாசருக்கு உணவு அளிக்க வந்தேன். திரும்பிப் போகவேண்டும். யமுனையே வழிவிடு! என்று கேட்டுக்கொள் அம்மணி! யமுனை நீர் விலகி வழி விடும்!'' என்றார் துர்வாச முனிவர்.

ருக்மணிக்கு இப்போதும் ஒன்றுமே புரியவில்லை.

'இப்போது தான் அவருக்கு வயிறார உணவளித்தேன். 'நித்ய உபவாசி' என்று தன்னைச் சொல்லிக் கொள்கிறாரே? இது எப்படி?' என்று வியந்தாள். இருந்தாலும் அவருடைய அறிவுரையை ஏற்று யமுனையை அணுகி —

**சத்ய சாயி பாபா சொன்ன கதை**

அவர் கூறியபடியே வேண்டிக்கொண்டாள். யமுனையும் விலகி வழிவிட்டது! ருக்மணிக்கு ஒரே ஆச்சரியம்.

நந்தவனத்தில் காத்துக் கொண்டிருந்த கிருஷ்ணபரமாத்மாவிடம் சென்று வணங்கி நடந்ததைக் கூறினாள் ருக்மணி.

புன்னகையுடன் அவர், ''என்ன ருக்மணி? உன்னுடைய மனதில் ஏதோ ஒரு சந்தேகம் உறுத்திக்கொண்டிருப்பது போலத் தோன்றுகின்றதே?'' என்று கேட்டார் பகவான்.

''ஆமாம் சுவாமி! தாங்களோ மணமானவர். ஆனால் தங்களை 'நித்திய பிரம்மச்சாரி' என்று கூறிக் கொள்கிறீர்கள்! அதேபோல துர்வாசரோ வயிறார உணவு உண்டபின் தன்னை 'நித்திய உபவாசி' என்று சொல்லிக்கொள்ளுகின்றார்! இவற்றை உண்மையாக ஏற்று யமுனையும் விலகி வழிவிடுகிறது. இது எப்படி? எனக்குப் புரியவில்லையே? இதுதான் உண்மையா? அல்லது யமுனை உங்கள் இருவருக்கும் அஞ்சி வழிவிடுகிறாளா? இதுதான் என் சந்தேகம்'' என்றாள் ருக்மணி.

புன்னகை மாறாத முகத்துடன் பகவான் கிருஷ்ணர் சொன்னார்...''நித்திய பிரம்மச்சாரி' என்பவன் யார்? தினந்தோறும் பிரம்மத்தை அணுகப் பக்தியுடன் வருபவர்களுக்கு ஆச்சாரியனாக இருந்து வழிகாட்டுபவன். நான் அந்தக் காரியத்தை அனுதினமும் செய்கிறேன் அல்லவா? அதனால் தான் அப்படிக் கூறிக்கொண்டேன். 'நித்ய உபவாசி' என்றால் என்ன பொருள்? பகவானையே எண்ணிக்கொண்டு அவருக்கு மிக அருகில் எப்போதும் வசிப்பவன் — பகவானை உபாசிப்பவன் — என்றுதான் அர்த்தம். மகான் துர்வாசர் அப்படிப்பட்டவர் அல்லவா தேவி? இதை உணர்ந்துதான் யமுனாதேவி எங்களுடைய வேண்டுகோளை உன்மூலமாக ஏற்றுக்கொண்டாள். இப்போது உன் சந்தேகம் தெளிந்ததா என்று கேட்டார்.

**- எஸ்.எல்.எஸ். -**

உண்மையை உணர்ந்த ருக்மணி பகவானின் காலில் விழுந்து வணங்கினாள். சாத்திரங்கள் நாம் வாழ வேண்டிய வழியைக் கூறுகின்றன. அதன் உண்மைப் பொருளை உணர்ந்து அதன் வழியே நாம் நடந்து கொண்டால்தான் வாழ்க்கையில் கடைத்தேற முடியும்!

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோமாளி ஒருவனை அதிகாரி ஆக்கினால்.

கோமாளி ஒருவனை அதிகாரி ஆக்கினால்
குவலயமே சிரிக்கும் — ஒரு
சமானியன் கூடக் கைகொட்டி நகைத்திடும்
சங்கதிகள் நடக்கும்
ஆமான காரியம் ஒன்றையும் செய்திடான்
செய்வோரையும் தடுப்பான் — பொல்லாக்
காமாந்தகன் கூடக் கண்ணியவான் என்பான்
கனவானைத் தீயன் என்பான்.

சொல்வது ஒன்றாகும் செய்வது ஒன்றாகும்
தொடர்கதை யாகுமிது — இவன்
வெல்வது போலவே பேசுவான் ஆயினும்
வெற்று வேட்டாகுமிது
நல்லவை கூறினும் ஏற்றுக் கொள்ளான் தானே
நாயகன் என்றுரைப்பான் — என்றும்
அல்லவை சொல்வோரை ஆஹாவென் றேத்துவான்
அன்பரைத் தள்ளி வைப்பான்.

எண்ணப்படியேதன் காரிய மாற்றுவான்
ஈற்றில் மூக்குடைபடுவான் — ஒரு
மண்ணும் தெரியாத போதிலும் தான் இந்த
மண்ணிலே மன்னன் என்பான்
கண்ணும் கருத்துமாய்க் காரியம் செய்வோரைக்
கணித்து நடக்கமாட்டான் — இந்தப்
புண்ணிய வான்கள் ஒருசிலர் வாழ்ந்தாலே
பூமி பாதாளமாகும்.

தெரியாத ஒன்றையும் தெரியு மென்றோதிடும்
சின்னமதியுடையான் — தான்
அறியாத வற்றையும் செய்ய முனைந்துபின்
அவமானமேயடைவான்
மரியாதை தெரியாத சரியான பேய்வெட்டி
மாந்தர்கள் வாழுகின்ற — இந்த
பரிதாப உலகத்தில் அரிதாகவே சிலர்
பதவிக்கணி யாகிறார்.

— சுந்தா

# புதிர் எழுதும் புதியவர்க்கு!

புதுயுகம் வருவது நிசமென நிதநிதம்
புழுகியே புசத்துற புலவரே
படுகொலை, குடிவெறி, அடிபிடி தொடர்கதை!
பசிபிணி வளருது வளருதே?

தணலிடை...தலையணை துலைத்தவர் உறங்கிடும்
நிலையினை மறக்கிற கவிஞர்காள்
சுனைகெட மதுதரும் மயக்கினில் ஊறியே
தொடை இடை புகழ்வது தொடருமா?

அகதிகள் பசியென அலைவதை; அவர்உள
அழுகையை; விழுபவர் குருதியை,
அகவலில் பதிந்தவர் உணர்வினை உலகினுக்
குரைப்பதை மறுப்பதேன்? தவிர்ப்பதேன்?

வறுமையின் வரையிடை வதிபவர் எழும்பலை!
வளரலை! அவர்சுமை குறையலை!
எரிகிற குடில்அனல் குளிரினுக் கிதமென
நினைத்துமா கிடக்கிறீர்! உறைக்கலை??

பழமைகள் சுமையென புதுமைகள் சுகமென
படைபலச் சமர்புரிந் தலைகிறீர்.
உலகியல், உமதயல், நிலைகுலைந்துலைவதை...;
உரையியல் பிழைப்பதை; மறக்கிறீர்?

உரிமைகள் தொலைந்திடும்...உணர்வுகள் மிதிபடும்
உயிர்ப்பதன் இதயமும் அறுபடும்.
"இது எமக் கெதுக்கென" பகிடிகள் செதுக்குக!
புகழ் அணிந் துறங்குக; நிலம் அழும்.

அதிரடி வளர்ச்சியில் அவனியைப் புதுக்கிடும்
அரசராம் இயந்திர அசுரரின்
மதி...; சதி புரிகையில்...தருமமும் பகர்கிற
கவிக்குரல் மெலிவதா 'புதுயுகம்'?

வலுதிறம் உவமைகள் வகைவகைப் புதுமைகள்
வலம்வரும் கவிதையா நிலைத்திடும்?
இ(ல்) லை; உயிர்த் துடிப்பினை உரைத்தொரு புழுவையும்
உசுப்பிடும் நிசக்கவி! எழுதும்...ம்!

— த. ஜெயசீலன்

# அசோக மரம்

நம் முற்றத்திலு மா (அ) சோக மரம்?
நமக் கெதற்கு இந்த மரம்?
சீதையைச் சிறை வைத் தவனம்
நினைத்தால் சினந் துசீறு மனம்
எங்கள் மண்ணும் ஓர்சோ கவனம்
அச் சோக வலையில் சிக்கிய இனம்
மீள்வ தெப்படி என்று தினம்
பூசை செய்யும் பாவத்தனம்
மண்ணின் மாந் தருக்கும ரணபயம்
ஆளும் மனி தருக்கோ ஆனந்தமயம்
அசோக மன்னனின் ஆன் மீகக்குணம்
அதனால் வளர்ந் தபோதி மரம்
அதனைச் சொல்லியே பே ரினம்
பண்ணும் பாவங்கள் பல விதம்
கேட் பாரி ல்லாத்தமிழ் இனம்
கேட்ப தெல்லாம்சு தந்திரம்.

— ந. யாதவகுலசிங்கம்

# வாழ்வதா? சாவதா?

வாழ்விழந்து
வளமிழந்து
வலுவிழந்து
வாழ்வதா?
பொட்டிழந்து
பொலிவிழந்து
பொருளிழந்து
போவதா?
துணையிழந்து
துணிவிழந்து
துயரடைந்து
துடிப்பதா?
கொடியிழந்து
கொலுவிழந்து
கொதிப்படைந்து
கொள்வதா?
பதியிழந்து
பட்டிழந்து
பாடையிலே
படுப்பதா?
மனையிழந்து
மகவிழந்து
மகிழ்விழந்து
மடிவதா?
கற்பிழந்து
கதியிழந்து
கண்ணிழந்து
கலங்கவா.

- அல்வையூரான்

# எதிர்ப்பின்னூட்டல்

பனி பெய்ய மழை கொட்டப்
பசும் புற்கள் தலை காட்ட
கனியொன்று கதைகொள்ளக்
கரம்பற்றும் மனம் மெல்ல.

குடைநிழலிலே கொதியேற்ற
கொடு வெய்யில் குளிரேற்ற
படை கொண்ட விழிகொல்ல
பதைப்போடு இவன் செல்ல

'படி' யென்று மதி சொல்லப்
'படு' என்று மனஞ் சொல்ல
'துடி' என்று அவள் வெல்ல
துடிக்கின்ற இமை துள்ள

முகம் மீது நகை செய்யும்
முதலான பழம் கொய்யும்
அகம் மீதும் அன்பூறும்
அதனாலென் உயிர்வாழும்!

- கி. வாயுபுத்திரன்

# போட்டி! போற்றி!!

போட்டி! போட்டி!
ஆயிரம் போட்டி!
போட்டி! போட்டி!
தேர்தல் போட்டி!

போற்றி! போற்றி!
ஆயிரம் போற்றி!
ஆயுதக் குழுக்களே
போற்றி! போற்றி!

பேட்டி! பேட்டி!
ஆயிரம் பேட்டி!
வானொலி, ரி. வி,
பேப்பர் பேட்டி!

தேற்றி! தேற்றி!
ஆயிரம் தேற்றி!
மக்களை நீங்களும்
தேற்றி! தேற்றி!

தேடல்! தேடல்!
ஆழ்ந்து தேடல்!
மதில்கள், சுவர்கள்
நீங்கள் தேடல்!

ஒட்டுதல்! ஒட்டுதல்
ஆயிரம் ஒட்டுதல்!
விழுந்தடித்து
போஸ்டர் ஒட்டுதல்!

புரிதல்! புரிதல்!
மக்கள் கருத்து
சற்றும் புரிதல்
தங்களுக்கு
இல்லையோ!

மாளிகூர்
எல். என். சீலன்

# சாதனை செய்துவா! சின்னவா?

பூவெனப் படருமுன் பொன்வண்ணப்பார்வையில்
மழலைப் பூங்கேள்விகள் ஒழிந்திருக்கும்
ஏனெனத் தடங்கிடும் இதயத்து வார்த்தைகள்
உதட்டுச் சறுக்கலில் நெளிந்திருக்கும்!
தேனெனத் தித்திக்கப்பேசுமென் பிள்ளையே!
தெவிட்டாதிருந்ததுன் தேறல் மொழி!
நானுமே துயருறப் போவதேன் அறிகிலேன்!
ஆயினும் வாழ்த்துக்கள் நான் தந்தேன்!

இன்பமாய், துன்பமாய் இரண்டிலும் இணைந்ததாய்
இளையவா என்னிடம் நீ வந்தாய்!
அன்பிலே தோய்ந்ததாய், ஆசையில் நேர்ந்த என்
ஆவலை நிறைக்கவாய் நீ ஆனாய்
என்பினை உருக்கினேன்! என் உயிர் வருத்தினேன்!
எனக்குள்ளே நானாக மறுகினேன்!
துன்பியல் போக்கி நீ துடிப்பாக வரும் நாளை
எண்ணினேன் மனத்துயர் அகற்றினேன்!

பிள்ளைக்கும் அன்னைக்கும் பிரிவேது கண்மணி?
பாசங்கள் பிரியாத பாலங்கள்
வெள்ளத்துள் அலை மோதி உறவெல்லாம் போகும்!
விலகாது என்றும் எம் நேசங்கள்!
முள்ளுக்குக் கால் தந்து அழுதன்று நின்றாய்!
என் நெஞ்சில் பூரத்தம் கண்டாய்!
புள்ளுக்குக் கல்விட்டுப் புண்பட்டு நின்றாய்!
பறவைக்கும் உயிருண்டு என்றாய்!

போகிறாய் மைந்தனே! இன்றெனை துயரத்தின்
பிடிதனில் ஆழ்த்திவிட்டு......
ஏகினாய் உள்ளத்தில் என்றோ ஓர்நாள்
ஏற்றினாய் ஒளியுமிழ் தீபந்தன்னை!
நோகிலும் ஏற்கிறேன்! நோன்புகொள்வேன்!
நோய்நொடிவென்று நீ வாழவென்று!
சாகிலும் நீ வரமுன்பு சாகேன்! சாதனை
செய்து வா காத்திருப்பேன்!

— தாட்சாயணி

# எய்ட்ஸ் கிருமிகளே...!

ஆசைக்கு எதிரிகளாய்
அவனியிலே முளைத்திரே
மனிதர் மடிவினிலே
மகிழ்ச்சியினைக் காண்பீரோ?

'எய்ட்ஸ்' பரப்பும் சூரர்களே,
ஏனிந்தப் பொல்லாங்கு?
கட்டிற் சுகங்களினைக்
கண்ணீரில் முடித்தீர்
காதற் கனவுகளைக்
காலனைப் போற்கலைத்தீர்
குருதியேற்றுகையிற்
குதூகலமாய்ப் புகுந்தீர்
பொருதுகின்ற உமைப்
பொசுக்கிடவே வழியிலையோ?

பாரறியப் பல நோயைப்
படுகுழியிற் புதைத்திட்டோம்
பாவியர் நீர் எங்கிருந்து
பலம் பெற்றீர்? பகர்ந்திடுவீர்..

வைரசுக்கள் நாமென்று
வையகத்தைப் பகைக்கின்றீர்
ஓர் மருந்து கண்டிடுவோம்
ஓடி ஒழிந்திடுவீர்!

— குப்பிழானூர் இ. ஜெயக்குமார்

# பொன் விழா!

அழகு பொழிகின்ற மடியை மிடியாக்கும்
அழிவின் நதிமூலம் என்ன?—நிலக்
கலகம் சொரிகின்ற குருதி மழை நீளச்
சபித்த ரிஷிமூலம் என்ன?

நதியில் விளையாடிக் கொடியில் தலைசீவி
நடந்த இளந்தென்றற் காற்று—இனச்
சதியில் புயலாகி தணலை எடுத்தாட
தரையில் இடிமின்னற் கீற்று.

பல உறவுசேர்ந்து பகிர்ந்து இதமுண்ட
பழைய சுகம் எங்கு போச்சு?—முகம்
கலைந்து சிதறுண்டு புவியில் அலைந்தோய்ந்து
கருகும் எமதன்பின் மூச்சு.

படலையடி வேலிக் கிளுவைநிரை தாண்டிப்
படரும் விசப்புற்று என்றால்—தமிழ்
துடிக்கும்; இதை மாற்றித் துரவை வடிவாக்க
முடியும்...; அட பாம்பே உன்னால்!

வரங்கள் பெற வேள்வி, தவங்கள் புரிந்தேங்கிக்
கிடக்கு எமதன்னை பூமி—வரும்
உறுதிமொழி...சாபம் தனையே தருமென்றால்
உதயம் வருமோடா சாமி?

கனவில் பொருள்நீட்டி...நனவில் களவாடி
"கடமை சரி" என்னுவோரே—நிச
உணர்வை புரியாப் 'பொன் விழவு' சிறக்காது
உணரும்: அறம் சொல்லுவீரே!

— அருணன்

கவிதை முற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரசவம்

### உடுவில் அரவிந்தன்

பத்திரிகையைப் படித்தபடியே தூங்கிவிட்டிருந்த சுகுமாரைத் திடீரெனக் கேட்ட மணியொலி தட்டியெழுப்பியது. மேசையில் வைத்துவிட்டு விரைவாக நடந்து போனான். பதிவுத் தபால் வந்திருந்தது. கையெழுத்திட்டுப் பெற்றுக்கொண்டு பிரிக்கத் தொடங்கினான்.

வன்னியிலிருந்து அப்பா எழுதிய கடிதம் அது. பின் வீட்டுப் பரமசிவம் மலேரியாவால் இறந்ததிலிருந்து, ஷெல் வீச்சுக்களால் தாம் இடம் பெயர்ந்து ஓடியதுவரை சகலதும் எழுதியிருந்தார்.

இங்கு வரும்படி சுகுமார் எத்தனையோ தரம் எழுதிவிட்டான். இருப்பினும், மகனை வன்னியில் விட்டு வரஅவருக்கு விருப்பமில்லை. சுகுமாரும் இனி வற்புறுத்துவதில்லை என்று நினைத்துவிட்டான்.

'வன்னியிலையிருந்துகடிதம் வந்தாக்காணும் உங்களுக்கு. வேறை ஒண்டுமே தேவையில்லை. பாருங்கோவேன் வெய்யிலுக்கை நிண்டு காயிறதை'' திரும்பிப் பார்த்தான் சுகுமார். மைதிலி நிலையோடு சாய்ந்தபடி நின்றிருந்தாள். அவள் முகத்திலே சிரிப்பிருந்தது.

''என்னட்ட இருக்கிற மாத்தேலாத குணம் அது. லெற்றர் வந்தா வாசிச்சுப் போட்டுத்தான் உள்ளுக்க வருவேன்'' பதிலளித்துக் கொண்டே வீட்டினுள் நுழைந்தான். மைதிலி பின் தொடர்ந்தாள்.

''என்னவாம் மாமா??...

''வழக்கம்போலத்தான். வன்னி நிலைமை எழுதியிருக்கிறார். முக்கியமா மருமகளின்ர சுகத்தைப் பற்றித்தான் விசாரிச்சிருக்கிறார்'' என்றவாறு கதிரையிலே சாய்ந்து கொண்டான் சுகுமார்.

''மாமாவுக்கும் பேரப்பிள்ளையைக் காண ஆசை இருக்கும்தானே!'' செல்லமாகச் சிரித்தபடி மைதிலி கூறுவதை கேட்டபடிக் அவளை ஏறெடுத்து நோக்கினான்.

வயிறு பெருத்திருந்தது. இருந்தபோதிலும் நன்றாக வேலை செய்வதனால் அளவான தோற்றப் பொலிவோடு இருந்தாள். வீணாகக் கஷ்டப்படவேண்டாம் எனச் சுகுமார் சொன்னாலும் அவள் கேட்பதில்லை. அவனுக்குப் பிடிக்குமேயென்று சிரமப்பட்டு அதை இதைச் செய்து வைத்துவிட்டு ஏச்சு வாங்குவதும் உண்டு.

மைதிலி ஐந்து பெண்களுடன் கூடப்பிறந்தவள். கரவெட்டியிலே நன்றாகக் கஷ்டப்பட்ட குடும்பம். அவளுடைய தந்தை சுகுமாருக்கு கல்வி கற்பித்தவர். அதன் காரணமாக அவளுடைய குடும்பத்துடன் பழகச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. மைதிலியின் அமைதியான குணமும், அழகும் சுகுமாரைக் கவர்ந்தமையினால் சீதனம் ஒன்றும் வாங்காமல் விரும்பி மணமுடித்திருந்தான். கஷ்டப்பட்ட குடும்பத்திலே பெண்ணெடுத்தால் வாழ்க்கை பெரும்பாலும் இன்பமாக இருக்கும் என்பதை அனுபவத்திலே உணர்ந்திருந்த சுகுமார், அதனை எல்லோருக்கும் சொல்லிப் பெருமைப்படுவதுண்டு. இருப்பினும் ஐந்து வருடங்களாகக் குழந்தைகள் ஏதுமில்லை. இப்போதுதான் உருவாகியுள்ளது.

''...என்ன இண்டைக்கு ஒருமாதிரிப் பார்க்கிறீங்கள்?...'' மனைவியின் கேள்வி சுகுமாரை உணர்வுக்குக் கொண்டு வந்தது.

...''ம்... என்ன கேட்டனீர்?...''

''விழுங்கிற மாதிரிப் பார்த்துக்கொண்டிருக்கிறியள். அதுதான் ஏனெண்டு கேட்டனான்''

''இல்லை மைதிலி! இந்த ஒன்பது மாதமா நீர் எவ்வளவு கஷ்டப்படுகிறீர். கால் பிடிப்பு அது இதெண்டு..! ஆம்பிள்ளைகள் வலு 'கூலாத்' திரிவினம். பொம்பிளைகளுக்குத்தான் சரியான கரைச்சல்''

அவனது குரலிலிருந்த பரிதாப உணர்வு மைதிலியின் உள்ளத்தை இளக வைத்திருக்க வேண்டும்.

''இதிலை என்ன கரைச்சல்? நாங்கள் விருப்பமில்லாமலே சுமக்கிறம்?''

''எண்டாலும் இவ்வளவு பெரிய வயிறோடை திரியிறதெண்டா!''

''இன்னும்ஒருகிழமைதானே பிறகு பெடியனைத் தூக்கிக் கொண்டு திரியேக்க நான் இருக்கிறதையே மறந்து போயிடுவீங்கள்''

''பெடியனோ? உம்மை மாதிரி வடிவான பெட்டை தான் பிறப்பள்...''

''ஊகும்... உங்களை மாதிரிக் குழப்படிக்காறன் தான் பிறப்பான்...''

''...நான் குழப்படிக்காரனோ? குட்டினன் எண்டாப் பிடிச்சு'' என்று கூறியபடி விளையாட்டாகக் கையை ஓங்கிக்கொண்டு எழுந்தான் சுகுமார்.

''...நீங்கள் சரியான குழப்படிதானே?'' என்றவாறு உள்ளே ஓடினாள் மைதிலி.

''மெல்லமாப் போமப்பா...'' என்று அவளது நீண்ட கருங்கூந்தல் அசையும் அழகை இரசித்தபடி கூறினான்.

'டொக்டர் வாற வெள்ளி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரச் சொன்னவர். குணத்திட்டைக் காருக்குச் சொல்ல வேணும். கொஞ்சநாளைக்கு ஸ்கூல் லீவு போட்டாத்தான் சரிவரும்...'' என எண்ணிக்கொண்டான். அவசரமாக எழுந்து உடை மாற்றிக்கொண்டு புறப்பட்டான்.

''மைதிலி! சிவராசா விட்ட தொட்டிலுக்கு ஓடர் குடுத்திட்டு அப்படியே குணத்திட்டையும் போட்டுவாறன். கிணத்தடிப்பக்கம் போயிடாதையும்'' என்றவாறு சைக்கிளை எடுத்தான்.

''தொட்டிலோ? இன்னும் பிள்ளையே பிறக்கேல்லை. அதுக்கிடையிலை...'' மைதிலியின் குரலிலே கேலி இருப்பது தெரிந்தது.

''பின்னைப் பிறந்தாப் பிறகே செய்யிறது? நான் உடனை வாறன். தனிய விட்டுட்டுப்போகவும் பயமாக் கிடக்கு...''

''...சின்னப்பிள்ளை மாதிரிப் பயந்து சாகிறியள். இன்னும் ஒரு கிழமை கிடக்குத்தானே...''

விடைபெற்றுக் கொண்டு வீதிக்கு வந்து சைக்கிளில் ஏறினான் சுகுமார்.

அன்றிரவு.

பத்துமணியிருக்கும்.

இடுப்பில் இலேசாக வலியிருப்பதாக மைதிலிசொன்னபோது பதறிப்போனான் சுகுமார். கார் பிடிக்கக் கிளம்பியவனைத் தடுத்தாள் மைதிலி.

''வேண்டாம். போகாதையுங்கோ. கேவியூ நேரம். எனக்குப் பயமா இருக்கு. என்னோடை இருங்கோ...''

''இல்லை மைதிலி. குணத்திட்டைச் சொன்னனான் தானே. ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயிட்டாப் பிரச்சினை இல்லை. நான் உடனை வாறன்.''

''...ஐயோ! போகவேண்டாம். அவங்கள் சுட்டுப் போடுவாங்கள்.'' அழத் தொடங்கிவிட்டாள்.

''பயப்படாமல் இரும். விளக்குப் பிடிச்சுக்கொண்டு போட்டுவாறன்...'' என்றவாறு இலாம்பையும் தூக்கிக்கொண்டு ஓடினான்.

வீதி இருண்டிருந்தது. ஒரு கையில் விளக்கைப் பிடித்தபடி சைக்கிளை மிதிமிதியென்று மிதித்தான்.

''கடவுளே! ஒருத்தனும் குறுக்கை வரக்கூடாது'' என்று பிரார்த்தித்துக் கொண்டு குணம் வீட்டை வந்தடைந்தான்.

''குணம்! குணம்!'' என்று அவன் போட்ட சத்தத்தில் நாய்கள் குரைக்கத் தொடங்கின. வீடு நிசப்தமாக இருந்தது. சுகுமார் கேற்றைப் படபடவென அடித்தான்.

(X ஆம் பக்கம் பார்க்க)

## சஞ்சீவி சிறுகதைகள்

# நான் செத்துப்போனேன்

### ப.தெய்வேந்திரன்

நான் செத்துப் போனேன். எனக்குப் பிள்ளைகள் மூன்று.

நாட்டு நிலைமையைச் சாட்டாக வைத்து, பணம் சம்பாதிக்கும் ஓரே நோக்கில் மடை திறந்த வெள்ளம் போல் நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கும் இளைஞர்களில் ஒருவனாக மூத்தவன் முகுந்தனை பிரான்ஸ் நாட்டுக்கு அனுப்பி வைத்துவிட்டேன் — பொன் விளையும் செம்மண் தோட்டக் காணி பத்துப்பரப்பை அறா விலைக்கு விற்று.

போனவன் நான்கு ஆண்டுகள் நன்றாக உழைத்து அடுத்தவன் சபேசனை கனடா நாட்டுக்கு அனுப்பி வைத்துவிட்டான். சபேசன், ஏ. எல். படித்துக் கொண்டிருந்த கடைக்குட்டி ரவீந்திரனின் படிப்பை இடைநடுவில் நிறுத்திவிட்டு, அவனைத் தன்னுடன் எடுத்துக் கொண்டு விட்டான்.

கடவுளேயெண்டு சாப்பாட்டுக்குக் குறைவில்லை. மூண்டு பெடியளும் பணம் அனுப்பும் போது.

''அப்பா, அம்மா, உடம்பைக் கவனித்துக் கொள்ளுங்கோ. இந்தச் சத்துணவு வாங்கிச் சாப்பிடுங்கோ. அந்த ரொனிக் வாங்கிக் குடியுங்கோ...'' என்று எழுதுகிற கடிதங்களை வாசிக்கும் போதே எங்கள் பாதி வருத்தம் பறந்து விடும். ஆனால், சரீர உதவிக்குத்தான் ஆளில்லை. மனுசிக்குச் சக்கரை வியாதி. கடின வேலை எதுவும் செய்ய மாட்டாள். கூட்டிற குப்பையைத் தாக்க ஒரு சின்னக் கிடங்கு வெட்டிற தெண்டாலும் நொண்டிச் செல்லையாவுக்கு நூறு ரூபா கொடுக்கவேணும்.

நானும் அறுபது வயது வரைக்கும் நல்ல 'சுகமாய்த்தானிருந்தன். அறுபது வயது கழிஞ்சு ஒரு வருஷம் ஆகேல்லை. இருந்தால் போலை ஒளிச்சிருந்த கள்ளனைப் போலை மாரடைப்பு என்னைத் தீர்த்துக் கட்டிவிட்டுது.

நான் கச்சேரியிலை ஒரு சிற்றூழியனாகத் தானிருந்தனான். கலியாணப் புறோக்கர், மாப்பிள்ளை 'கிளாக்கர்' எண்டு சொல்லி ஏமாத்தி என்ரை மனுசிக்குக் கட்டி வைச்சு விட்டார். நானும் கிளாக்கராக நடிக்க வேண்டி வந்திட்டுது. ஆனா மனுசிக்கு மட்டும் உண்மையைச் சொல்லிப் போட்டன்.

''இதை இரண்டாம்பேருக்கும் சொல்ல வேண்டாம். வேலைக்குப் போகேக்கை லோங்ஸ் மட்டும் போட மறக்க வேண்டாம்'' எண்டு மனுசி எனக்கு உத்தரவு போட்டு விட்டாள்.

அப்படிப் பட்டவள் நான் செத்த பிறகு இலேசிலே விடுவாளா?

என் உயிரற்ற உடலுக்கு ''புல் சூட்'' (Full Suit) போட்டு, வீட்டு ஹோலின் மையப் பகுதியில் அலங்காரப் பெட்டியில் வைத்து, தலைமாட்டிலும் கால்மாட்டிலும் குத்துவிளக்கேற்றினாள்.

நாற்பது வருடங்கள் என்னுடன் இணைபிரியாமலிருந்த என் துணைவி என்னைப் பிரிந்துவிட்ட சோகத்தில், தலைமாட்டில் [illegible] தரையில் ஒருகாலை [illegible] மறுகாலை நாடிக்கு முட்டுக் கொடுத்து வலது கையை தலையில் வைத்துச் சோகமே உருவாக அமர்ந்திருக்கிறாள்.

வாழ்க்கையில் என்னை வெறுத்த சிலரும், என்னை நேசித்த சிலரும் பேதமின்றி என்னை வாயாரப் புகழ்ந்து கொண்டிருப்பது என் காதுகளில் விழுகிறது.

போலிவேடம் போடும் சிலரின் முகத்திரையைக் கிழித்தெறிந்தால் என்ன? என்று என் மனதில் ஓர் எண்ணம் தோன்றுகிறது. நான் செத்தல்லவா போனேன் என்ற நினைவு வந்ததும் நாவை அடக்கிக்கொண்டேன்.

திடீரென என் மனைவியின் சகோதரன் குமார் விரைந்து வந்து தமக்கையிடம் கூறுகின்றான்.

''கனடாவிலிருந்து சபேசனின் கோல் வந்தது. அக்கா... தாங்கள் எவரும் இலங்கை வந்துபோக வசதிப்படாதாம். சிறப்பாக செத்த வீட்டை நடத்தட்டாம். காசு ஐம்பதினாயிரம் [illegible] பீறிட்டுக்கொண்டு வந்திட்டுது. அழுகையின் மத்தியில் ''அப்ப ஆராம் கொள்ளி வைக்கிறது?'' என்றாள்.

''ஆதவனைக் கேட்டுப் பாக்கட்டே?'' என்றான் குமார்.

''...ஆ! என்ன அநியாய ஆலோசனை சொல்லுறான் மச்சான்! ஆதவன் என் ஓரே தங்கையின் ஏக புத்திரன். அவனுக்கு வயது ஐந்தாயிருக்கும்போது, என் தங்கை புருஷனை இழந்து விட்டாள். அவளையும் மகனையும் என்னுடன் வைத்து ஆதரித்தனான். ஆதவனைப் படிப்பித்து, வேலையும் ஒன்று தேடிக்கொடுத்து, அவனுக்கு கல்யாணமும் செய்து வைச்சன்... அவனுக்கு ஆசை அதிகமாகி விட்டது. ஒரு நாள் என்னிடம் வந்து அங்கிள், சீவியத்துக்குச் சம்பளம் போதாமலிருக்கு. கொழும்பிலையிருந்து தைச்ச உடுப்புகள் தருவிச்சு, வியாபாரஞ் செய்ய யோசிக்கிறன். ஓர் இருபத்தையாயிரம் ரூபா தாருங்கோ ஒரு வருஷத்தாலை திருப்பித் தந்திடுவன்?'' என்று உருக்கமாகக் கேட்டான்.

ஏதோ தங்கையின் மகன் தானே, நல்லாய் வரட்டும் என்று கேட்ட தொகையைக் குடுத்தன்.

ஒரு வருடம் இரண்டு வருடங்கள், மூன்று வருடங்கள், கடந்து விட்டன. தாறன், தாறன் என்று அலைக்கழித்து வந்து, ஒருநாள் என் மனதை வேக வைத்திட்டான்.

''...வேண்டினனான்தான். உள்ள நேரந்தரலாம், போங்கோ வெளியாலை'' என்று சொல்லிவிட்டாள்.

நான் திகைத்துப்போனேன். உலகம் என்னைச் சுற்றி வலம் வந்தது! நிதானமடைந்து ''...உந்தக் காசும் வேண்டாம்; உன்ரை உறவும் வேண்டாமெடா. நான் செத்தாலும் என்ரை முகத்திலும் நீ முழிக்கப் படாது. நான் சொல்லித்தான் சாவன்'' என்று கூறிவிட்டு வந்து இப்ப அஞ்சு வருசமாச்சு. இந்த நன்றி கெட்டவனைக் கொண்டா எனக்குக் கொள்ளி வைப்பிக்கப் போறாங்கள் என்று மனம் குமுறிக்கொண்டிருந்தன்.

சிறிது நேரத்தால் மச்சான் குமார் ஆதவனோடு ஏதோ கதைத்துவிட்டு, முகம் மலர எனது மனைவியை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

மச்சான் வளமாக வரட்டும்...ஒரு பாடம் படிப்பிகிறன் என்று ஆயத்தமாக இருக்க, என்னுடைய கால் மாட்டுப் பக்கத்தில் மச்சான் வசதியாக வந்ததும், நான் செத்ததையும் மறந்து ''என்ன வேலை செய்திட்டு வாறாய்'' என்று கத்தியபடி எட்டி ஒரு உதை விட்டன் அவனுடைய நாரியில்.

பக்கத்தில் படுத்திருந்த என் மனைவி, ''என்னப்பா கனவா கண்டியள்'' என்று கூறிக்கொண்டே திடுக்கிட்டு எழும்பி என்னை உலுப்பினாள்.

நான் விழித்துக்கொண்டதும் வலது கால் பெருவிரல் வலியெடுத்திருப்பதை உணர்ந்தேன்.

(யாவும் கற்பனை) ✶

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சூழலியல் அனர்த்தங்களை உருவாக்கும் 'எல் - நைனோ'

பசுபிக் சமுத்திரப் பிராந்தியத்தில் திடீரென பெரும் உஷ்ண அதிகரிப்பை ஏற்படுத்தி, சூழலியல் சம்பந்தமான பரபரப்பை உருவாக்கியிருக்கும் 'எல்-நைனோ' இயற்கை அனர்த்தம் குறித்து கடந்த வார சஞ்சீவியில் பிரசுரமான கட்டுரைத் தொகுப்பின் இறுதிப் பகுதி இது.

பகுதி II

''எல் – நைனோ'' இயற்கை அனர்த்தம் பூமியின் தென் அரைக்கோளத்திலுள்ள கால்நடை உற்பத்தி நாடுகளையும் விட்டு வைக்கவில்லை. இந்த அனர்த்தத்தினால் இந்நாடுகளில் உள்ள கால்நடை மேய்ச்சற் தரைகளில் நிலவுகின்ற கடும் வரட்சி காரணமாக அழிவடைகின்றன. இதனால் கால்நடைகளுக்கு வேண்டிய உணவு கிடைக்காமல் அவையும் அழிவடைகின்றன.

சென்ற ஆண்டு பெப்ரவரி, மார்ச் மாத காலப்பகுதியில் சீனாவில் கோழிகளில் ஒருவிதமான வைரஸ் காய்ச்சல் ஏற்பட்டதால் 17 இலட்சம் கோழிகள் அழிய நேரிட்டது. இந்தப் ''புளு'' காய்ச்சல் தொடர்பாக ஆய்வுகள் தற்சமயம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்கான காரணம் இன்னும் சரியாக அறியப்படவில்லை. ''எல் – நைனோ'' அனர்த்தத்தினால் ஏற்பட்ட வரட்சி நிலைமைதான் இவ் வைரசு அங்கு பரவியதற்கு காரணமோ எனவும் சந்தேகிக்கப்படுகின்றது.

சென்ற வருடம் இந்தோநேசியாத் தீவான சுமாத்திராவில் மூண்ட காட்டுத்தீக்கு ''எல் – நைனோ'' அனர்த்தமே காரணம் எனக் கூறப்படுகின்றது. காட்டுத்தீயினால் ஏறத்தாழ 120 மனிதக் குரங்குகள் அழிந்தன. அங்கு காணப்பட்ட 'உராங்கட்டான்' குரங்குகள், பறவைகள் என்பனவும் அழிவடைந்தன. அங்கு காணப்பட்ட காட்டு மரங்கள், தாவர இனங்கள் பல அழிந்துள்ளன. வரட்சியான காலநிலை நிலவியதே இக் காட்டுத்தீக்கு காரணமாகும். இதனால் 15 லட்சம் ஹெக்டர் காட்டுப் பிரதேசம் அழிந்துள்ளது.

இவ் வரட்சி நிலைமை ''எல்—நைனோ'' அனர்த்தத்தினால்ஏற்பட்டது. அங்கு நிலவிய வரட்சி நிலை காட்டு மரங்களை அவற்றின் தீப்பற்று நிலைக்கு இட்டுச் சென்றிருக்கின்றது. ஓர் இடத்தில் மட்டும் காட்டுத் தீ ஏற்படவில்லை. ஆங்காங்கே பல இடங்களில் ஏற்பட்டு முழுக் காடும் அழிவதற்கு வழிவகுத்தது. சென்றவருடம் ஏற்பட்ட காட்டுத்தீயைப் போன்று 1982 / 1983 ஆண்டிலும் ஏற்பட்டது. அன்று ஏற்பட்ட காட்டுத்தீயினால் ஏறத்தாழ 3.6மில்லியன் ஹெக்டர் காட்டுப் பிரதேசம் அழிந்து நாசமாகியது.

பிறேசில் நாட்டிலும் சென்ற வருடம் காட்டுத் தீ ஏற்பட்டது. கிடைக்கப்பெற்ற சான்றுகளின்படி ''எல்—நைனோ'' அனர்த்தம் நிலவிய காலப்பகுதியிலேயே பொதுவாக இந்நாடுகளில் காட்டுத்தீ ஏற்பட்டுள்ளது. எனவே ''எல்—நைனோ'' காட்டு வளங்களிலும் தனது அழிவு, ஆதிக்கத்தினைச் செலுத்தத் தவறவில்லை என்றே கூறலாம்.

### கடலில் அழிவு

கலிபோர்னியாவின் மேற்கு பசுபிக் கடற்பிராந்தியத்தில் ஒரு வகையான நீர் நாய்கள் காணப்படுகின்றன. அங்கு தற்சமயம் நிலவுகின்ற இத் தட்ப வெப்பநிலை வேறுபாட்டினால் கடலின் வெப்பநிலை அதிகரித்திருக்கின்றது. இதனால் இந்நீர் நாய்களுக்கு வழமையாகக் கிடைக்கின்ற மீன் உணவுகள் கிடைக்காமல் போய்விட்டதனால் அவைகள் விலா எலும்புகள் தெரிய அங்கு உயிருக்கு போராட்டம் நடத்துகின்றன. இதுவரை கலிபோர்னியா கடற்பிரதேசத்தில் 6000 நாய்க்குட்டிகள் மாண்டுவிட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் அடுத்த சில ஆண்டுகளில் பல ஆயிரம் நீர் நாய்கள் பலியாகும் என சூழலியல் ஆய்வு நிபுணர்கள் கூறுகின்றார்கள். இதன் மூலம் ''எல் — நைனோ'' கடல் வாழ் உயிரினங்களில் எந்த வகையில் தாக்கம் செலுத்துகின்றது என்பதனை நாம் அறிந்துகொள்ள முடியும்.

இக்வடோர் (Ecuador), பேரு (Peru), மேற்கு அமெரிக்காவின் கடற்பரப்புக்களில் கடலுக்கடியான நீரோட்டங்களும், நீரின் மேற்காவுகையும் காணப்படுகின்றன. இவற்றினால் கடலின் ஆழ்ந்த மட்டங்களிலுள்ள போசணைப் பதார்த்தங்கள் கடல் நீர் மேற்பரப்பிற்கு கொண்டு வரப்பட்டு மேற்பரப்பிலுள்ள தாவர பிளாந்தன்களுக்கு (ஒளித்தொகுப்புசெய்வதற்கு) வசதியாகக் கிடைக்கச் செய்யப்படுகின்றன. இதனால் நீரில் தாவர, விலங்கு பிளாந்தன்களின் குடித்தொகையானது இங்கு உயர்வாக



எல்—நைனோவின் விளைவால் பசுபிக் சமுத்திரக் கரையோரத்தின் மேல் உருவாகும் கடும் புயல், செயற்கைக் கோள் பிடித்த படம் இது.

காணப்படுகின்றது. இதனால் இக் கடற் பிரதேசங்களில் உயர்ந்தளவான மீன் வளம் பொதுவாக காணப்படுகின்றது. எனினும் 1972 / 1973 ஆம் ஆண்டில் ஏற்பட்ட தட்ப வெப்பநிலை வேறுபாட்டினால் மீன்களின் வாழ்விலும் வீழ்ச்சி ஏற்பட்டது. இதனால் அந்த ஆண்டில் பிடிக்கப் பட்ட மீன்களின் மொத்த அளவானது குறைவாகக் காணப்பட்டது. தட்பவெப்ப நிலை மாறுபாட்டினால் நீர் மேற்பரப்பு உஷ்ணமடைந்ததால் கடற் சூழற்தொகுதியில் காணப்படுகின்ற உணவுச் சங்கிலியில் குழப்பம் ஏற்பட்டது. இதனாலேயே மீன்களின் வளம் வீழ்ச்சியடைந்தது என பின்னர் தெரிவிக்கப்பட்டது. இதே வகையான நிலைமையே 1982 / 1983ஆம் ஆண்டிலும் அவதானிக்கப்பட்டது. சென்ற ஆண்டிலும் பிடிக்கப்பட்ட மீன்களின் அளவு குறைவாக அமைந்துள்ளமைக்கு இவ் வெப்பநிலை வேறுபாட்டினை காரணமாக கூறமுடியும். எனினும் இவ் வெப்பநிலை வேறுபாட்டினால் மட்டுமே மீன்களின் வளம் பாதிக்கப்படுகின்றது என்று திட்டவட்டமாக கூறி விடமுடியாது. இதில் ''எல்-நைநோ'' உடன் தொடர்பற்ற காரணிகளின் பங்கும் இருக்கக்கக்கூடும் எனினும் மீன்களின் வாழ்வின் அளவினை தீர்மானிப்பதில் 'எல்-நைனோ' அனர்த்தமும் பங்களிப்புச் செய்துள்ளது என்று மட்டும் கூறலாம்.

மொத்தத்தில் பசுபிக் பிராந்தியத்தில் தோன்றியுள்ள தட்ப வெப்பநிலை வேறுபாடு நம்மைச் சுற்றியுள்ள இயற்கையுடன் — அதன் சமநிலையுடன் — பல்வேறுபட்ட விதத்தில் போர் தொடுத்த வண்ணம் இருக்கின்றது. இவ் அனர்த்தத்தினால் விவசாயத்துறை, கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, கடல்வாழ் உயிரினங்கள், மீன் பிடித் தொழில், காட்டுவளங்கள் என்பவற்றில் பாரதூரமான விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. இது நேரடியான பாதிப்புகளாகும்.

''எல்—நைனோ'' நேரடியாக அல்லாது மறைமுகமாகவும் பல்வேறு வழிகளில் மனிதகுலத்திற்கு தீங்கு விளைவிக்கின்றது என்பதனை [illegible] நாம் ஊகித்துக்கொள்ளலாம். சென்ற வருடம் இந்தோனேசியத் தீவான சுமத்திராவின் மேடான்நகர் அருகே நடந்த (செப்டம்பர் 26) விமான விபத்தில் 234 பேர்கள் மாண்டனர். இதே போல் டிசம்பர் 19 ஆம் திகதி இந்தோனேசியாவின் மூசி ஆற்றில் விழுந்து விபத்துக்குள்ளான விமானத்தில் இருந்த 104 பேரும் மரணத்தினைத் தழுவிக்கொண்டனர். மேற்படி விமான விபத்துகளுக்கு இந்தோனேசியாவில் ஏற்பட்ட காட்டுத் தீயினால் தோன்றிய புகைமூட்டமே காரணம் எனக் கூறப்பட்டது.

பேருவில் கடந்த 13 ஆம் திகதி பலத்த மழை காரணமாக ஏற்பட்ட மண்சரிவில் 15 பேர் பலியானார்கள்; பல நகரங்களும், கிராமங்களும் வெள்ளத்தில் மூழ்கின.

இத்தகைய விளைவுகளையும் பாதிப்புகளையும் உற்று நோக்குமிடத்து ''எல் — நைனோ'' எவ்வாறு தோற்றம் பெறுகின்றது, அதனை உருவாக்குவதில் பங்களிப்புக்கள் செய்யும் காரணிகள் யாவை? ஏன் குறிப்பிட்ட சில காலப்பகுதிகளில் மாத்திரம் ஏற்படுகின்றது? குறிப்பிட்ட கடற்பகுதிகளில் மாத்திரம் அவதானிக்கப்படுகின்றது?—என்பன எல்லாம் தீவிரமாக ஆய்வுசெய்யப்பட

## பொ. அரவிந்தன்

வேண்டியவை என்பதை நாம் உணர முடியும். சூழலியல் நிபுணர்களைப் பொறுத்தவரை இது முக்கியமானதொரு ஆய்வு விடயமாகவும் உள்ளது.

இவற்றுக்கான சரியான காரணம் கண்டுபிடிக்கப்படுமாயின் மனித குலத்தினை அச்சுறுத்தும் இந்த அனர்த்தத்தில் இருந்து நாம் மீட்சி பெறமுடியும். ''எல் — நைனோ'' பாதிப்புக்களை முன்கூட்டியே அறிந்து அதனை எதிர்நோக்குவதற்காக தற்காப்பு நடவடிக்கைகளைச் செய்வதன்மூலம் பூமியில் உயிரினங்களின் பன்மை இழக்கப்படாமல் பல ஆண்டுகள் நிலைத்து நிற்க நாம் வழிசமைக்க முடியும்.

### உதவி வசதிகள்

உலக உணவு விவசாய நிறுவனம் இத்தட்ப வெப்பநிலை வேறுபாட்டினால் அனர்த்தங்கள் சம்பவிக்கின்ற நாடுகளில் தனது நிவாரணப் பணிகளையும் செயற்பாடுகளையும் முடுக்கிவிட்டுள்ளது. பாதிப்படைய இருக்கும் நாடுகளுக்கு முன் கூட்டியே அறிவிப்புக்களை விடுத்து அனர்த்தத்தினை எதிர்நோக்க அந்நாடுகளைத் தயாராக இருக்கச் செய்கின்றது; பாதிப்புக்கள் தொடர்ச்சியாக நிலவுகின்ற நாடுகளில் விவாசயத்துறையினை மேம்படுத்த கடும்வரட்சி, வெள்ளப் பெருக்கு, புயல் என்பவற்றிற்கு எதிர்ப்புடைய — பயிரிடும் முறைகளை — பயிர்களை — அறிமுகப்படுத்தியிருக்கின்றது. திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்ற நாடுகளுக்குப் பொருத்தமான நீர்ப்பாசன வடிகால் அமைப்புத் திட்டங்களைச் சிபார்சு செய்திருக்கின்றது; காட்டுத் தீ அபாய அறிவிப்புக்களை விடுத்திருக்கின்றது. பாதிப்பு நாடுகளில் நிவாரணப்பணிகளுக்கான பண உதவிகளினை வழங்கி அந்நாடுகளின் பொருளாதார நிலையினை மீளக்கட்டி எழுப்ப உதவுகின்றது. மேலும் உலக உணவு விவசாய நிறுவனத்தின் ஒரு பிரிவான ''உலக முன்னெச்சரிக்கை தகவல் அறிவிப்பு மையம்'' (Globel Information And Early Warning System (GIEWS)) 1997 / 1998 ஆம் ஆண்டில் தென் ஆபிரிக்காவில் நிகழ சாத்தியமாக இருக்கும்வரட்சியினை அந்நாடு எதிர் நோக்கும் வகையில் முன்னெச்சரிக்கை விடுத்துள்ளதுடன் வரட்சி நிலவுகின்ற சந்தர்ப்பத்தில் அங்கு சென்று பணியாற்றவென ஆளணி ஒன்றினையும் உருவாக்கியுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றபோது அவற்றை அரசியல் சலையீடுகள், பாரபட்சங்களுக்கு அப்பாற்பட்ட மனித நேயத்துடன் ஆற்ற வேண்டும். தென் கொரியாவில் அரசியல் காரணங்களினாலே அங்கு நடைபெறுகின்ற நிவாரணப்பணிகளில் மந்த நிலைகள் ஏற்பட்டுள்ளது.

முற்றும். ★

## உடையும் நகங்கள்

இயல்பாகவே 35 வயதுக்குப் பிறகு முதுமை காரணமாக நகங்கள் உடைய ஆரம்பிக்கும்.

அடிக்கடி நீந்திக் கொண்டிருப்பவர்களுக்கும் அதிகம் சமையலில் ஈடுபடுகிறவருக்கும் நகங்கள் முறியும்.

கைகளை நீரில் அமிழ்த்தி வைத்திருக்கும் போது நகங்கள் தமது எடையில் 20—25 சதவீத அளவு நீரை உறிஞ்சிக் கொள்ளும். நீரை உறிஞ்சும் போது நகங்கள் விரிவடையும். கைகள் உலரும் போது சுருங்கும். அடிக்கடி தண்ணீர் பட அடிக்கடி நகங்கள் விரிந்து சுருங்கிப் பலவீனப்படும்.

நம்முடைய கேசத்தைப் போலவே நகங்களும் பரம்பரையை ஒட்டியே அமைகின்றன. அவற்றின் முறிவுத் தன்மைக்கு அதுவும் காரணமாக இருக்கலாம்.

பெண்கள் உபயோகிக்கின்ற அழகு சாதனங்களிலும் அவற்றை அவர்கள் உபயோகிக்கின்ற முறையிலும் நகங்கள் சீரழியலாம்.

'விற்றமின் பி' செறிவுள்ள உணவு வகைகளை உண்பதால் முறிவுத் தன்மை உடைய நகங்கள் மேம்பாடு உடையதாகும்.

எலும்புகளின் அடர்வுத் தன்மை குறைந்த பெண்கள் விற்றமின் 'டி' செறிவுள்ளவற்றை உண்டால் நகங்கள் 15 சதவீதம் கூடுதல் தடிமன் பெறும். (ஆனால் அதிகளவு 'விற்றமின் டி' நச்சுத்தன்மை அடைவதால் மருத்துவர்கள் இதனைச் சிபாரிசு செய்வதில்லை.)


பெண்கள் நகங்களைச் சீரான அளவில் வைத்திருக்க வேண்டும். அதிகம் வளரவிட்டால் அவை உடையலாம். பிளவுண்டும் போகலாம். ரொம்பவும் உடையும்தன்மை கொண்ட நகமாயின் விரல் நுனி அளவில் நறுக்கிவிட வேண்டும். மற்ற வகையினதாயின் அதிக பட்சம் கால் அங்குலம் கூடுதலாக விடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## உங்களுக்குத் தெரியுமா?




இங்கு எத்தனை தமிழ் ழுத்துக்கள் உள்ளன?




இங்குள்ள செவ்வகத்தை ரு நேர்கோடுகளால் ான்கு பகுதிகளாகப் பிரிக்க வண்டும். பிரித்த ஒவ் வாரு பகுதிக்குள்ளும் 3 ட்டங்கள் இருக்க வேண் ம். நேர் கோடுகள் போட முதல் 16 வரையுள்ள ள்ளிகள் உதவும்.




இந்தச் செவ்வகத்தை ரண்டு நேர் கோடுகளால் ான்கு பாகங்களாகப் பிரிக்க வண்டும். பிரிந்த ஒவ்வொரு பகுதிக்குள்ளும் 3 எண்கள் ருக்க வேண்டும். எப்படி... ரியுங்கள், பார்ப்போம்!



நான்கு சகோதரர்கள் களுக்குச் சொந்தமான லத்தில் வீடுகளைக் கட்டிக் காண்டுள்ளனர். அவர்கள் டு கட்டிய சதுரப் பகுதி ல் ஆளடையாளம் காட் ப்பட்டுள்ளது. அந்த வீடு ளை ஒவ்வொருவரும் வைத் ருக்கத்தக்கதாக இந்த லப்பகுதியை நால்வருக்கும் னாகப் பங்கிட்டுக் காடுக்க வேண்டும். உங்க ல் முடியுமா?

(விடை XI ஆம் பக்கத்தில்)

## தெளிவு பிறந்தாச்சு!

பள்ளிக் கூடம் திறந்தாச்சு
பாடப் புத்தகம் வந்தாச்சு
எல்லர் வகுப்பும் நிறைஞ்சாச்சு
எங்கும் கவனம் வளர்ந்தாச்சு.

மாதத் தேர்வு நெருங்கியாச்சு
மனதில் பயமும் வந்தாச்சு
நிதமும் படிக்க முடிவாச்சு
நெஞ்சில் தெளிவு பிறந்தாச்சு.

பிருதிவிராஜ் கிஷோர்ராஜ்
(ஆண்டு - 3, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை)

## வீடு எங்கே?

வண்ணக் கிளியே வீடெங்கே?
மரத்துப் பொந்தே என்வீடு.

தூக்கணாங்குருவி வீடெங்கே?
தொங்குது மரத்தில் என்வீடு.

கறுப்புக்காகமே வீடெங்கே?
கட்டுவேன் மரத்தில் என்வீடு.

பொல்லாப் பாம்பே வீடெங்கே?
புற்றும் புதருமே என் வீடு.

கடுகடு சிங்கமே வீடெங்கே?
காட்டுக் குகையே என்வீடு.

நகரும் நத்தையே வீடெங்கே?
நகருதே என்னுடன் என்வீடு.

கோழிக் குஞ்சே வீடெங்கே?
கொட்டில் கூடே என்வீடு.

வி. உதேஸ்.
(கைதடி)




## விலங்கரசன் சிங்கம்



குட்டி போட்டுப் பால் கொடுப்பவைகளை விலங்கு என்பர். சிங்கம் ''விலங்கரசன்'' என்று பெயர் பெற்றது. இது விலங்குகளில் வலுமிக்கது; பூனை இனத்தைச் சேர்ந்தது.

உயிர்க் காட்சிச்சாலையில் சிங்கத்தை நீங்கள் பார்த்திருக்கலாம். ஆண் சிங்கத்துக்கு பிடரி மயிர் உண்டு. வால் நுனியிலும் மயிர் அடர்ந்திருக்கும். சிங்கம் கருமை கலந்த பழுப்பு நிறமுடையது. பெண் சிங்கத்துக்குப் பிடரி மயிர் கிடையாது. இது பார்வைக்குப் புலி போல் இருக்கும். ஆனால் வரிக்கோடுகள் இதற்குக்கிடையா.

**பிராணிகள் உலகம்**

சிங்கத்தின் பற்கள் கூர்மையான கோரைப் பற்கள் ஆகும். கால் நகங்களும் பெரிதும் கூர்மையானவை; நீட்டவும் சுருக்கவும் கூடியவை. சிங்கத்தின் முகம் உருண்டையானது. இரவில் இதன் கண்களில் ஒளி வீசிக் கொண்டிருக்கும்.

சிங்கம் பெரிய விலங்குகளையும் வாயினால் தூக்கிச் செல்லும். யானையையும் அஞ்சாது எதிர்த்துக் கொல்லும்.

அடர்ந்த பற்றைப் புல்வெளிகளை அண்டிய காடுகளில் சிங்கங்கள் வசிக்கும். ஆபிரிக்காவிலுள்ள சிங்கங்கள் பெரியவை. இராக்காலங்களிலே இவை இரை தேடும். பகற்காலங்களில் குகைகளில் தங்கியிருக்கும்.

பசிக்கும் போது சிங்கம் பெருமுழக்கம் செய்யும். அம்முழக்கத்தைக் கேட்ட விலங்குகள் நாலா பக்கங்களிலும் அஞ்சி ஓடும். அப்போது தனக்கு விருப்பமான விலங்கொன்றைப் பற்றிக் கொன்று தின்று பசியாறும். எவ்வளவு பசி எடுப்பினும் ஏற்கனவே இறந்து கிடக்கும் விலங்குகளை சிங்கம் தின்பதில்லை என்பர். இது சிங்கத்தின் சிறப்பசம்.

தனக்குப் பசியில்லாத போது எவ்விலங்கையும் அது கொல்வதில்லை. வீரமுள்ளவனைச் 'சிங்கம்' என்பர்.


## கண்டுபிடியுங்கள்!

1. கட்டடங்களின் கீழுள்ள '32568' என்ற வரிசை எண்சுட்டங்களுக்குள் ஏதோ ஒரு இடத்தில்தான் உள்ளது. அது இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ, மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ குறுக்காகவோ, நெடுக்காகவோ எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். எங்கே... இந்த வரிசை எண் எங்குள்ளது என்று கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 5 | 6 | 8 | 3 | 2 | 5 | 6 | 2 |
| 5 | 3 | 5 | 2 | 6 | 8 | 5 | 8 | 3 |
| 3 | 5 | 2 | 6 | 8 | 3 | 3 | 8 | 5 |
| 6 | 6 | 3 | 2 | 5 | 6 | 6 | 2 | 8 |
| 8 | 2 | 3 | 5 | 6 | 5 | 3 | 5 | 8 |
| 6 | 5 | 8 | 3 | 2 | 6 | 5 | 3 | 8 |
| 3 | 6 | 5 | 3 | 8 | 8 | 2 | 5 | 2 |
| 8 | 6 | 5 | 3 | 2 | 3 | 5 | 6 | 8 |
| 3 | 2 | 5 | 6 | 6 | 8 | 5 | 2 | 3 |

**32568**

2. இங்குள்ள கட்டையில் 9 ஆணிகள் அடிக்கப்பட்டுள்ளன. இவற்றின் நுனிப் பகுதிகள் மறுபக்கம் துளைத்துக்கொண்டு வெளிவந்துள்ளன. இவற்றுள் ஒரே ஓர் ஆணியின் நுனிப்பகுதி மட்டும் மறுபக்சம் வெளிவராமல் கட்டைக்குள்ளேயே தங்கிவிட்டது. இந்த ஆணி எது?





3. இங்குள்ள 3 முழுமையான வாகனங்களுள் எந்த வாகனத்தைப்போல் '4' ஆவது வாகனம் உருவாகிக்கொண்டிருக்கிறது?




(விடை XI ஆம் பக்கத்தில்)

## வார்த்தை விளையாட்டு




சிறுவர், சிறுமியரே......! இது ஒரு வார்த்தை விளையாட்டு. மேலே உள்ள வட்டத்தில் ஒன்பது எழுத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த ஒன்பது எழுத்துக்களையும் நீங்கள் முன்னும் பின்னுமாகஎப்படி வேண்டுமானாலும் எத்தனை தடவைவேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இதன் மூலம் உங்களுக்கு நிறையத் தமிழ் வார்த்தைகள் கிடைக்கும். குறைந்தது முப்பது வார்த்தைகளாவது உங்களால் உருவாக்க முடியுமா என்று பாருங்கள்.

(விடைகள் XI ஆம் பக்கத்தில்)

## தெரியுமா உங்களுக்கு?

1) நான்கெழுத்தாலான ஓர் ஊர் இது. முதல் மூன்று எழுத்தும் குரங்கைக் குறிக்கும். கடைசி இரண்டு எழுத்தும் 'ஆச்சரியப்படு' எனக் கூறும். இரண்டாம் நான்காம் எழுத்துக்கள் நீங்கின் சந்திரனைக் குறிக்கும், கடைசி எழுத்து உடலிலுள்ள ஓர் உறுப்பு. நான்கு எழுத்தாலான அவ்வூர் எது?

2) மூன்றெழுத்தாலான தளபாடம் இது. முதல் இரண்டு எழுத்தும் வேகத்தைக் குறிக்கும். முதல் எழுத்து நீங்கின் அலையையும், நடுவெழுத்து நீங்கின் அலை முடிவடையும் இடத்தையும் குறிக்கும். அத் தளபாடம் என்ன?

3) திருமணத்தின் போது உண்டாகும் ஐந்தெழுத்து உறவுமுறை இது. முதல், கடைசி எழுத்துக்கள் மறைவில் 'தீட்டப்படுவது. முதல் இரண்டு எழுத்தும் நான்காவது எழுத்தும் நீங்கினால் தலைவன் ஆகும். முதல் எழுத்தும் கடைசி இரண்டு எழுத்துக்களும் சேர்ந்தால் முக்கிய தெருக்கள் இணையும் இடம். கடைசி மூன்று எழுத்துக்களுக்கும் முந்த வேண்டும். திருமணத்தின் போதுண்டாகும் இவ்வுறவு எது?

4) ஐந்து எழுத்தாலான இவர் எமக்கு உதவுவோரில் ஒருவர். முதல் இரண்டு எழுத்தும் குறிக்கும் சொல் பெரியவர்களால் எமக்குக் கிடைக்காவிடின் எம் வாழ்க்கை நன்றாக அமையாது. இரண்டாம், மூன்றாம் எழுத்துக்கள் நீங்கிவிடின் இடையரைக் குறிக்கும். இரண்டாம் எழுத்து நீங்கின் தொன்மையான ஓர் இன மக்களைக் குறிக்கும். ஐந்து எழுத்தாலான இவர் யார்?

(விடை XI ஆம் பக்கத்தில்)

துரைசிங்கம் கேசவன்
(ஆண்டு 8,
சாவகச்சேரி இந்துக்கல்லூரி)

## சிலேடை நொடிகள்

1. குழந்தை அழுவதேன்? குப்பை தேங்குவதேன்?
2. குடிகெட்டுப் போவதேன்? பூவை வண்டு நாடுவதேன்?
3. திருப்பூர்க் குமரன் இறந்ததேன்? பாரி தேரைக் கொடுத்ததேன்?
4. இரத்தம் பெருகுவது எதனாலே? ரசம் மணப்பது எதனாலே?
5. நாக்கு இனிப்பதேன்? நாய் ஓடுவதேன்?
6. பசுவின் பால் கறப்பது எப்படி? பாண்டவர் பிறந்தது எப்படி?
7. அரிசி மாவாய் ஆவதேன்? வானில் சத்தம் கேட்பதேன்?
8. கீரை நிலத்தில் விதைப்பதேன்? கீழோர் செல்வரைச் சுற்றுவதேன்?
9. குதிரை மிகவும் கொழுப்பதேன்? குவிந்த செல்வம் அழிவதேன்?

ச. கயல்விழி
ஆண்டு 4,
(உடுத்துறை ம.வி.)

## விடைகள்

1. எடுப்பாரற்று.
2. மதுவால்.
3. கொடியைக் காக்க.
4. பெருங்காயத்தால்.
5. கல்கண்டால்.
6. குந்தியிருந்து.
7. இடிப்பதால்.
8. பிடுங்கித்தின்ன,
9. கொள்ளையிட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறவு வேள்வன்

பசித்திருப்பவன் துறவியின் விட்டுக்குள் புகுந்தால் போதனைதான் கிடைக்கும். தனித்திருப்பவனிடம் போய் உபசரிப்பை எதிர்பார்க்க முடியுமா?

குடும்பக்காரனிடம் புகுந்தால் குறிப்பறிந்து உதவி உபசரித்து அனுப்புவான். அவனுக்கு அடுத்தவன் தவிப்புப் புரியும்; தேவை விளங்கும்; வழங்கும் வல்லமையும் இருக்கும்.

அவனால்தான் இல்லறத்தைத் துறந்து வாழும் மூவகைத் துறவிகளையும் தாங்க முடிகிறது. ஆண்டிகள் கூடி மடம் கட்ட முடியாது.

நாட்டில் வாழும் பிரமச்சாரிகள் பெற்றோரையோ உற்றாரையோ — ஒரு குடும்பத்தையோ நம்பித்தான் சீவிக்க வேண்டும். நோய் நொடி வந்துவிட்டால் கசாயம் வடிக்கவாகுதல் அடுத்தவன் உதவிக்கு ஓடி வர வேண்டும்.

வனத்திடை புகுந்து தவம் இயற்றியவர்களும்கூட இடைக்கிடை நாட்டில் புகுந்துதான் விருந்து கண்டிருக்கிறார்கள்.

அடுத்தவருக்காக வாழும் தியாகிகள் — தம்மை முற்றாக மதபோதனைக்கோ — அறிவியலுக்கோ — சேவைக்கோ அர்ப்பணித்தவர்களுக்கு குடும்பம் சரிப்பட்டு வராது. இவர்களையும் தாங்கி நன்று ஆற்றுபவன் — துணையாகிறவன் — இல்வாழ்வான்.

*இல்வாழ்வான் என்பான் இயல்புடைய*
*மூவர்க்கும்*
*நல்லாற்றின் நின்ற துணை.*
*—0041*

உலக இன்பங்களையும் ஆசைகளையும் துறந்தோம் என பெருமை பேசுபவர்களுக்கும்கூட அன்னமும் ஆடையும் வழங்கல் வேண்டி உழைப்பவன் ஒரு குடும்பக்காரனே.

வறுமை வாட்ட உண்ண வழியின்றி வாசலில் வந்து நிற்பவனுக்கு கொடாமல் தான் மட்டும் உண்ண மாட்டான். அவன் மனைவியும் அதற்கு இடம் கொடாள்.

நிர்க்கதியாகத் தன்னிடம் வந்து வாழ்ந்தவர் இறந்த பின்பும் கடன்கள் செய்து பிதிர்க்கடன் ஆற்றி ஆத்மாவின் துணையாக நிற்கவும் அவனால்தான் இயலும்.

*துறந்தார்க்கும் துவ்வா தார்க்கும்*
*இறந்தார்க்கும்*
*இல்வாழ்வான் என்பான் துணை.*
*—0042*

(இல்வாழ்க்கை)

—அம்பிகைபாகன்—

# இந்த வார இராசி பலன்

## [24 - 01 - 1998 முதல் 30 - 01 - 1998 வரை]

| | | | |
|---|---|---|---|
| சனி | | | |
| வி கே செ | இராசிச் சக்கரம் | | |
| புத சூ• | | | ரா |
| வெ | சந் | | |

மாற்றம்:

25 – 1 – 98 இல் மகரம் — புதனும் 29 – 1 –98 இல் தனுசு — வெள்ளியும் மாறும்.

வல்லரசு நாடுகளின் உதவிகளும், உபத்திரவமும் இருக்கும். வட திசையின் தேர்தலால் மாற்றங்கள் ஏற்படும். அரசியலில் புதிய திசை திருப்பங்கள் நன்மைகளைத் தரும். யுத்தமும் — சமாதானப் பேச்சும் மாறி மாறி ஏற்படும். இந்திய அரசியலில் பெண் அரசியல் வாதிகளால் மக்கள் திசைதிரும்புவர். அனுதாப அலை தேர்தலை வடக்கிலும் — தெற்கிலும் திசைதிருப்பும். காங்கிரஸின் செல்வாக்கு அதிகரிக்கும். கிழக்கு நாடுகளில் புதிய மாற்றங்கள் ஏற்படும். மேற்கு நாடுகள் மத்தியகிழக்கில் புதிய நெருக்கடிகளை உருவாக்கும். யுத்த அபாயம் மக்களுக்கு ஏற்பட இடம் உண்டு.

**மேடம்:** உங்களுக்கு பரிச்சயமுள்ள செயற்பாடுகளில், தொழில்களில் இறங்குங்கள். காசு சேர்க்கலாமென்றெண்ணிக் கண்டதையெல்லாம் செய்ய முற்படாதீர்கள். பெற்றவர், உற்றவர், உறவாட வந்தவர்களை நம்பி இறங்காதீர்கள். ஏன் உங்கள் தனி முயற்சி போதாதா? எதையும் சமாளித்துச் செயற்படுத்தும் கெட்டித்தனம் உள்ளவர்தானே நீங்கள் என்பதை அடிக்கடி நினைத்துக் கொள்ளுங்கள். இந்தக்காலத்தில் இருப்பதாகக் காட்டாமல் செயற்பட்டபடி இருங்கள். உங்களிடம் காசு கேட்டுப்பெற்ற சகலரும் ஓடி ஒளிக்கும் காலமிது. எதிர்ப்பாளார் ஒத்துப்போக மாட்டார்கள். கிசுகிசு கதைகள் ஓரிடத்தில் புகையும். எனவே நியாயப்படி நடந்துகொள்ள முயலுங்கள். கண், சிரசு, கைகால் சம்பந்தமான இடங்களில் நோ வரலாம். ஏழைகளுக்குத் தான தர்மம் செய்து வாருங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு.

**இடபம்:** நீங்கள் ஓடி ஓடி உழைக்கச் சந்தர்ப்பங்கள் வரும். வாடியிருக்குமாக்கு நாடிவரும் மீனைப் பிடிக்கும் காலமிது. காரியத்தில் கண்ணாயிருந்து நல்லதைச் செய்யுங்கள். தெய்வபக்தி நிறைந்தவர்களின் அன்பு உங்களுக்கு இருக்கும். உங்கள் தர்மம் உங்களைக் காக்க, தர்மவான்கள் உங்களுக்கு உதவுவார்கள். கண், கைகால், நரம்பு, மல, சலம் சம்பந்தமான மந்தப்போக்கு இருக்கும். தொழில் ஸ்தானத்தில் போட்டிகள், குறைகுற்றங்கள் இருக்கும். சகோதரங்கள் குறை சொல்வார்கள். இடைக்கிடை அலைச்சலும், பயப்பாடுகளும் காட்டுவதனால் பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள் மதியம்.

**மிதுனம்:** கலகம் பிறந்து நியாயம் பிறக்கும் காலமிது. எதிர்ப்பாலாருடன் நிதானமாக இருக்கவும்; அல்லது வீண் மனஸ்தாபம் ஏற்படும். நாலுபேர் நாலு விதமாகக் கதைப்பார்கள். தொழில் பீடத்தில் பெரியவர்கள் ஆதரவு தந்தாலும்–சிறியவர்கள் தூற்றவே செய்வர். பொருள் களவு போகலாம். வயிற்று நோ, சளி, காய்ச்சல் இருமல் ஏற்படலாம். வைத்தியத்தால் சுகம் கிடைக்கும். நேரத்துக்குச் சாப்பாட்டைக் கவனியுங்கள். குடும்பத்தவரின் சிறப்பு வாழ்வுக்காக சில காரியங்களைச் செய்யச் சந்தர்ப்பங்கள் ஏற்படும். காற்றுள்ளபொழுதே தூற்றிக் கொள்ளுங்கள். நலமிருக்கும் பொழுதே ஒரு சில நல்ல காரியங்களைச் செயற்படுத்துவதில் கருத்தாக இருக்கவேண்டாமா?

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள்.

**கடகம்:** உங்களுக்கு அட்டமத்து வியாழன் எட்டி நின்று பார்த்தாலும், ஆகா[illegible]யங்களை ஆகும் என நம்பி ஓடிச் செயற்படுத்தும் உந்து சக்தி வெற்றி பெறும். திருமணப் பேச்சு, வேலைதேடி அலைச்சல், கடுகடுத்த வெயிலில் காலாற ஓடிப் பலதையும் தேடிவரும் காலமிது. தொழில் ஸ்தானத்தில் கூடி இருந்த நண்பர் குழிபறிக்க சிந்தை கொள்வர். 'என்னப்பா உலகமிது?' என்று மனம் நொந்திடுவீர். சாஸ்திரியிடமும், சாமியிடமும் பொன், பொருள் போய் விட்டதென ஓடி ஒரு சொல் கேட்டிடுவீர். அடிக்கடி கோபம், ஆவேசப் பேச்சு, அன்பானவர்கள், அயலவர்களைப் பகைதேடிப் பின் மனம் நொந்திடுவீர். சரி, பிழை என மாறிமாறி மனம் பேதலிக்கும். நிதானமாக நடந்து கொள்ளுங்கள். இரட்டை மனம் கொண்ட நீங்கள் இறைபக்தி கொண்ட பெரியவர்களைப் பகைக்காது, அவர்களின் ஆசீர்வாதங்களை பெற்றுவிடும் காலமாகும்.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள், வியாழன்.

**சிங்கம்:** உலகத்தில் நல்லதைச் செய்வோமென நீங்கள் சிந்தித்தாலும், நாவால் சிலர் நல்லதைச் செய்ய விடார்கள். நாலுபேர் நாலு விதமாகப் பேசுவார்கள். விதிவசப்பட்ட பலன்கள் தெய்வ வழிபாடு ஒன்றால் மட்டும் கரைந்து போகும். அடிக்கடி கோவிலுக்கு போய் வாருங்கள். தொழில் ஸ்தானத்தில் பகல், இரவாக மாறி மாறி இருக்கும். என்ன தத்துவம் பேசினாலும் பசி வந்தால் பத்தும் பறந்து விடும் அல்லவா? இக்காலத்தில் துணிவுடன் செயற்பட்டபடி இருங்கள். ''கேளுங்கள் கொடுக்கப்படும்; தட்டுங்கள் திறக்கப்படும்'' என்ற தெய்வீக வாக்குப்படி செயற்படுங்கள். வயிற்றுநோ, கண் கூச்சம், தலையிடி, பலவீனத்தால் அடிக்கடி கோபம், கைகால் உளைவு என்பன [illegible]


(X ஆம் பக்கம் பார்க்க)

## மகாதேவா ஜோதிடம்

நல்லூர்

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 34



சொற்சிலம்பம் இல. 34
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..........................................

விலாசம்: ..........................................

..........................................

.................. இங்கே வெட்டுக ..................

முடிவு திகதி; 30 — 01 — 1998

### இடமிருந்து வலம்

1. முடிதிருத்துபவன். 4. யாகத்தில் சொரிவது 7. வாகனம். 8. முன்வினை. 9. ஓர் இராசி. 11. அரசன். 13. மறைவில் தீட்டப்படுவது. 14. வளர்ப்புத் தாய். 17. திறப்பு. 18. அசைதல். 20. கூட்டல் அடையாளம். 21. வீட்டின் முன்புறம் இருப்பது. 22. உடல் வளர்ச்சிக்குத் தேவையானது.

### மேலிருந்து கீழ்

1. நீண்ட கதை. 2. பூமிக்கு வெளியே இருப்பது. 3. மழையில் நனைந்தால் வரும். 4. நீர் மட்டத்துக்கும் நிலமட்டத்துக்கும் இடையேயுள்ள தூரம். 5. ஒன்று சேர். 6. தினை அரிசியை இடித்துப் பெறுவது. 8 இறைவன். 10. தூக்கத்தில் காண்பது. 11. சந்திரன். 12. தொழு. 13. ஸ்தானம் 14. காது. 15. சிவனின் அருஉருவம். 16. இரக்கம். 17. மேன்மை. 19. விழி. 20. நூறில் எனப் பொருள் படுவது.

### சொற்சிலம்பம் 32 — விடைகள்

**இடமிருந்து வலம்**

1. சகோதரி. 4. ஆமாம். 6. தலம். 7. காட்சி 8. கம்பு. 9. ராசி. 11. ராகம். 13. சக. 15. தபுதாரன். 17. அத்தர். 19. வடு. 20. கதம். 21. தர. 23. தின். 24. கரும்புலி.

**மேலிருந்து கீழ்**

1. சதகம். 2. கோலம். 3. தம்புரா. 4. ஆட்சி. 5. மாசி. 7. கராம்பு. 10. ஏகன். 12. கதர். 13. சரடு. 14. புத்தன். 16. தாவரம். 17. அகதி. 18. தம். 21. தரு. 22. வேலி.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ முதற்பரிசு: சுப்பிரமணியம் திவாகரன்,
பழைய ஆஸ்பத்திரி ஒழுங்கை,
கரவெட்டி மேற்கு, நெல்லியடி.

★ இரண்டாம் பரிசு: ஹரிசாந்தி மகேந்திரன்,
''ஸ்கந்தவாசா'',
உரும்பராய் வடக்கு.

★ மூன்றாம் பரிசு: மு. சண்முகராசா,
ஓமான் வளவு,
கட்டுவன்வீதி, மல்லாகம்.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

முதற் பரிசு:- ரூபா. 150. 00
இரண்டாம் பரிசு:- ரூபா. 100. 00
மூன்றாம் பரிசு:- ரூபா. 50. 00

★ புதிர்போட்டி இலக்கம் 33 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமைகள் இறங்குவதில்லை

## மு. சிவநேசன்

பாகம் 1

நெஞ்சு வலி மெதுவாக நெருடியது. தூக்கத்தில் இருந்து மெல்ல விழிக்கும் உணர்வு. கண்களைத் திறக்க சற்று சிரமமாக இருந்தது. இமைகள் கனமாக இருந்தன. மெல்ல விழிகளைத் திறந்தேன்.

ஒரு புதிய சூழல். என்னைச் சூழ இயந்திரமாக இயங்கும் தாதிகள்; இரண்டொரு வைத்தியர்கள். அவர்களின் முகத்தில் வெற்றியின் பூரிப்பு.

எனது படுக்கையைச் சூழ நான் இதுவரை கண்டிராத பல கருவிகள். எனது உடலிலிருந்து புறப்படும் பல வயர்கள். இமைகளைத் தவிர உடலின் வேறெந்த அங்கத்தையும் அசைக்க முடியாத நிலமை.

நான் அதிதீவிர சிகிச்சைப் பிரிவிலே (ICU) அனுமதிக்கப்பட்டிருக்கிறேன் என்ற உணர்வு தெரிகிறது. ஏன்? எப்படி? எப்போது? என்ற கேள்விகளுக்கு விடை தெளிவாக மூளையில் உறைக்க மறுக்கிறது.

நிமிடங்கள் யுகங்களாக கழிகின்றன. இன்னும் நெஞ்சில் ஏதோ ஒரு மூலையில் வலி இருந்து கொண்டு தான் இருக்கிறது. எதையும் வெளியே சொல்லக்கூட இயலவில்லை.

சூழ இருந்தவர்களில் பிரபல வைத்திய நிபுணர் ரவிக்குமாரும் ஒருவர் என ஊகித்துக் கொண்டேன். அவரைச் சந்தித்தாலே நோய் நொடி பறந்துவிடும் என்ற எண்ணம் எல்லாரிடமும் பரவி நிற்கிறது. ஆனால் நாட்டில் உள்ள பல லட்சம் இதய நோயாளிகளில் மிகச்சிலருக்கே — நோய் முற்றிய நிலையில் — அவருடைய கண்காணிப்பு கிடைக்கிறது. இது தான் யாழ்ப்பாண நிலமை.

உள்ளூர் பத்திரிகைகளை புரட்டினால் ''பாராட்டுகிறோம்'' என்ற தலைப்பில் அடிக்கடி பந்தம் பிடிப்புகள்; ஊழல் மறைப்புகள் எனப் பல விளம்பரங்கள் தென்படுகின்றன. நிலமை மோசமாக இருந்த காலங்களில் எல்லாம் — எத்தனையோ வாய்ப்புகள் இருந்தும் — அவற்றைப் புறந்தள்ளி, இந்த மண்ணோடும் மக்களோடும் இணைந்து அவர்கள் படும் துன்பங்களைத் தாமும் சுமந்து — தமது அந்தஸ்து என்று பாராமல் பாடுபட்ட — மனிதாபிமான சேவை புரிந்த — ரவிக்குமார் போன்ற வைத்தியர்கள் ஓரிருவர் ஏன் இன்றுவரை பாராட்டப்படவில்லை என்ற ஆதங்கம் எழுகிறது.

இந்த வைத்தியர்கள் எனது உடல் நிலையைத் தேற வைக்கலாம். ஆனால்... எனது மனச்சுமைகளை எங்கே கொண்டுபோய் இறக்கிவிடல் முடியும்?

நினைவு தெரிந்த நாள் முதல் சங்கிலித் தொடர் போல நீளும் மனச்சுமைகளின் அழுத்தம் என் இதயத்தை இவ்வளவு காலம் வாழவைத்ததே பெரிய அதிசயம். இப்போதும் சுமைகளும் கடமைகளும் காத்திருக்க நான் இறக்கவும் இயலாமல் வாழவும் முடியாமல் போராடும் நிலமை.

நான் பிழைத்து விடுவேனா என்ற கேள்வி மனதில் எழுகிறது. பிழைத்தபின் எதை என்னைப்போல் ஒரு பெண்ணால் சாதிக்க இயலும்? மீண்டும் அழுத்தும் மனச்சுமைகள் திரும்பவும் இதயத்தை தாக்கி இங்கே கொண்டுவந்து விட்டுவிடும்.

இரத்த அழுத்தம் என்றதும் வைத்தியர் கேட்கும் வழமையான கேள்வி– ''ஏதாவது கவலைகள் இருக்கா?'' என்பதுதான். எனது கவலைகளையெல்லாம் அந்தப் பத்து நிமிடக் 'கொன்சல்ட்டேஷனில்' கூறிவிடல் இயலுமா? அதற்கெல்லாம் அவரிடம் பரிகாரம் இருக்குமா?

எனவே மீண்டும் சிலுவையைச் சுமக்கத் தயாராகிறேன். மெல்ல மெல்ல நெஞ்சுவலி அதிகரிப்பது போன்ற பிரமை. இரண்டாவது தடவை ஏற்பட்ட மாரடைப்பைத் தொடர்ந்து குணமாகி வருகின்றேன் என்பது தெரிய வந்தது. இரண்டு நாள்கள் மயக்க நிலையில் உலகச் சுமைகளை மறந்து நான் இருந்திருக்கிறேன்.



பொதுவாகப் பெண்களை இப்படி மார்புவலி வந்து ஆட்டுவது குறைவு என நான் நினைக்கிறேன். எங்கும் ஆண்கள் தான் இப்படியான இக்கட்டுகளுக்கு ஆளாவதாகவும் — மரணத்தை எட்டுவதாகவும் — கேள்விப்பட்டிருக்கிறேன். குடும்பச்சுமை மற்றும் அழுத்தங்கள் அவர்களை வாட்டுவதே அதற்குக்காரணமாக இருக்கலாம். அப்படி என்றால் என் விடயத்திலும் இந்த நோய் பொருத்தமானதே.

எனது கணவர் பத்து ஆண்டுகளுக்கு முன்பு இதே அறையில்தான் உயிரை விட்டார் என்ற நினைப்பு வேறு வந்து விழிகளில் நீரைத் திரள வைத்தது. அவரையும் இதே இருதயநோய்தான் கூட்டிச் சென்றது. அவரது இதயத்துக்கு எமது காதல் காலம் தொட்டே போதிய சுமைகளைத் தந்த பாவி நான் தான். விளையாட்டாகவும் — தேவை கருதியும் — நிறையவே அவர் மனதை நான் அலைத்தே இருக்கிறேன். அது காதல் கனியும் காலம்.

பின்பு குடும்பம் என்று வந்ததும் அவருக்கு நான் கொடுத்த தலைவலிகளுக்கும் குறைவே இல்லை. முரண்டு பிடிப்பதில் நானொரு மகாராணி. விட்டுக் கொடுப்பதில் அவர் ஒரு கர்ணன். ஆனால் இவற்றை எல்லாம் அவரின மரணம்தான் எனக்குப் புரிய வைத்தது.

கண்கெட்ட பிறகா சூரிய நமஸ்காரம்? இனி இந்த ஞானம் என் கணவரை என்னிடம் கொண்டுவந்து விடுவதற்கு நாம் என்ன சத்தியவான் — சாவித்திரி குடும்பமா?

என்னைப் பார்த்துப் பொறாமைப் படுகிறவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் என் நிலமையைப் போய் விளங்க வைத்திடவா இயலும்? எனக்குள் அழுவதைத் தவிர வேறு வழியில்லை.

'அவளுக்கென்ன குறை? மாசம் முடியமுதல் சம்பளம். அடுத்த சம்பளத்துக்கிடையில் புருஷன்ரை பென்சன். பெடியனும் பெட்டையுமாக ரெண்டு பிள்ளைகள். படிப்பிலும் அதுகள் சூரப்புலிகள். வீட்டிலை எல்லாம் சீரா குறைவில்லாமல் இருக்கு. இதைவிட என்ன வேணும் வாழ்க்கையிலை?' என்றெல்லாம் என் காதுபடவே கதைக்கிறார்கள்.

சத்யனுக்கு இது இறுதி ஆண்டு எஞ்சியரினிங். அவன் ஊருக்கு வந்தே மூண்டு வருஷமாச்சு. எப்பவாவது கடிதம் வரும். கொழும்பிலை நல்லா ஊர் சுத்துவான் எண்டு அடிக்கடி 'றிப்போட்' வரும். நான் அனுப்பிற காசிலை எப்படிச் சமாளிக்கிறானோ தெரியாது. நண்பர்கள் நிறையப்பேர். செலவும் தடல்புடல்.

ஒருக்கால் போய் கண்டு வர — புத்தியும் ஆறுதலும் சொல்லிவிட — ஆசை. ஆராலை ஏலும் இந்தப் பயணங்கள்?

சஞ்சீவி குறுநாவல்

ஒரு வருஷமா அவனைக் காணவில்லை என்று ரெண்டு வருஷத்துக்கு முன்னாலே புறப்பட்டுப்போய் கிளாலிக் கரையிலை நிண்டுட்டு ஏலாமல் திரும்பி வந்திட்டன். கரையிலேயே சமாளிக்க முடியாத நான் எப்பிடி கடலில் இறங்கி... தரை தாண்டி — தாண்டிக்குளத்தைத் தாண்டி நடந்து வவுனியா போறது?

உதவிக்கு மகளைக்கூட கூட்டிக்கொண்டு போகத் தானும் இயலவில்லை. அவளோட வயதுக் கட்டுப்பாடு — பாஸ் பிரச்சினை வேறை. இவளை விட்டிட்டுப்போய் எப்ப திரும்பி வாறது? அது வரை இவள் பொம்பிளைப் பிள்ளை அயலட்டையை நம்பி இருக்கிறதெண்டால்... எனக்கு வழியில ஏதேனும் நடந்திட்டால் அங்கை அவனுக்கும் தெரியாது. இங்கை இவளுக்கும் தெரியாது அது

அடுத்த சிக்கல். இதுக்கிடையிலை 'சுபி' யும் இயக்கம் அதுஇது எண்டு மனம் மாறி விட்டால்...

எல்லாத்தையும் திர யோசிச்சுப் பார்த்து — மகன் எக்கேடு கெட்டாலும்போகட்டும்; ஆம்பிளைப் பிள்ளையை இனியார் கட்டி மேய்க்கிறது? மகளைத்தான் கவனிக்க வேணும். இரண்டுங் கெட்டான் நிலமை வேண்டாம் — என முடிவு எடுத்து ஊரோடை இருந்திட்டன்.

பிறகு நடந்தவை... எல்லாம் யோசிக்க யோசிக்க நெஞ்சைப் பிழியுது நான் அமைதியா இருக்கிறதாத் தான் வைத்தியர் நினைப்பார். சுமை தாங்காமல் மயக்கம் பிறக்குது. நான் உறங்கிப்போறதா நினைக்கட்டும்.

* * *

போன கிழமை மாணிக்கத்தார் கொழும்பாலை வந்தவர். வந்ததும் வராததுமா வீட்டை வந்து ஒரே றிப்போட். எல்லாம் சத்யனைப் பற்றித்தான். எல்லாத்தையும் எனக்குச் சொல்லவும் ஏலாது எண்டு கொஞ்சம்தான் சொல்லி இருப்பார். அவ்வளவுமே என்னாலை தாங்கவே ஏலவில்லை.

அவர் சொல்ல முதலே எனக்கு இவனெடை போக்குக் கொஞ்சம் கொஞ்சம் தெரியும். அதுதான் மனம் இல்லாமல் திரும்பத் திரும்ப கொழும்பு போக முயற்சி எடுத்தபடி இருந்தனான். போன வருஷம் முழுக்க போய் சுப்பல் பதிவுக்கு கால் கடுக்க நிண்டு — வெய்யில் குளிச்சு — காய்ச்சல் வந்தது தான் மிச்சம்.

ஒரே சனம். விசாரணைக்கு கூப்பிட்டாலே அது பெரிய பாக்கியம் போலை. காலையிலை எட்டு மணிக்கு விசாரணை எண்டு விடிய நாலு மணிக்கே கியூவிலை போய் நிண்டிடுவன். ஒரு நாள் 148 ஆம் நம்பர் கிடைச்சுது. மத்தியானம் 1 மணிக்கு உள்ளே போயிட்டன். சுபி தேத்தண்ணி கொண்டுவந்திட்டு திரும்பிப் போயிட்டாள். உள்ள வர ஏலாது.

ஒரு மாதிரி பின்னேரம் 5 மணிக்கு விசாரிக்கிற அதிகாரிக்கு முன்னாலை வந்து இருக்கிறன். எனது வாதம் அடிபட்டுப்போகிறது.

''அம்மா! நீங்கள் ஆம்பிளைப் பிள்ளையைப் பார்க்கிறதுக்கு கொழும்பு போக நிக்கிறியள். இதை அவசர கருமம் எண்டு எப்படி நாங்கள் அனுமதிக்கிறது? இப்ப நோயாளர் — அரச அலுவல் — கல்யாணம் எண்டு போறவைக்கே கப்பலில்ல இடம் கிடைக்கிறது கஷ்டமாயிருக்கு.''

இதற்குமேல் எனக்குக் கதைக்கத் தெம்பு இல்லை. கந்தோரிலையும் லீவு எண்டதும் மனேஜர் ஏதோ விழுங்கிவிடுகிறது போலப் பார்க்கிறார். பேசாமல் திட்டத்தை கைவிட்டிட்டன் — நடக்கிறது நடக்கட்டும் எண்டுதான்.

பிறகு கொஞ்சம் லேசாக சப்பல் பயண அனுமதி கிடைக்கத் தொடங்கவும் சுபியை கொழும்புக்கு அனுப்பி விட்டன். என்னடை உடல்நிலை அப்ப கொஞ்சமும் இடம் தரவில்லை. அவள் போய் வந்ததும் ஒரு வரலாறுதான்.

இப்படி நிலமை இருக்க ஏன் என்னை ஒருக்கால் வந்திருக்க ஏலாதோ என மாணிக்கத்தார் கேட்கிறார்.

அவர் சொன்ன கதையள் தான் என்னை ஐ.சீ.யூ. வரையும் கொண்டுவந்த விட்டிருக்கு.

'தம்பிக்கு சினேகிதம் கூடிப்போயிட்டுது. எல்லாரும் இப்பிடியே படிக்கிறாங்கள். சேருகிற பெடியன்களும் அப்படி. எல்லாரும் எஞ்சினியர்ஸ்.பெரியஸ் டேட்டர்ஸ். நான் எதைக் கமலா கதைக்கிறது?'

'அடிக்கடி போதை. இடைக்கிடை பொலிஸ் கேஸ், கலாட்டா ஏதாவதும் வந்துவிடும். ரெண்டொரு பெட்டைக் குட்டியளும் சேர்ந்திருக்கு. எல்லாம் பொதுவுடைமைதான். தனித்தனியா சொந்தமா எண்டு ஒண்டும் இல்லைப் போலை.'

'நாளைக்கு எஞ்சினியர் ஆயிட்டா காடு — குளம் எண்டு திரிய வேணுமாம். அதுக்குத்தானாம் இந்த ஆயத்தங்கள் — பழக்கங்கள் — எண்டு ஞாயப்படுத்திறான் தம்பி.'

மரத்தாலை விழுந்தவனை மாடேறி மிதிச்ச கதை. இதுக்குப்பிறகும் மாசா மாசம் காசு அனுப்பிற நிலைமைதான் எனக்கு. வேறை எதை என்னாலை செய்ய இயலும்? சுபிக்கு எண்டு ஒரு ரூபா மிச்சம் பிடிக்க வழி இல்லை. பருவப் பெண்ணா வளர்ந்தெல்லே நிக்கிறாள்!

''ஏன் மாணிக்கம் அண்ணை? இப்பவும் பொலிசிலையோ? உள்ள தள்ளிப் போட்டாங்களோ? என்ன கேஸ் — விபரமாச் சொல்லுங்கோ! அடுத்தமுறை கொழும்பு போகயுக்கை நானும் கூட வாறன்.''

''கமலா! இதிலை நான் தலையிட இனியும் விரும்ப இல்லை. அதுதான் சொல்லிப் போட்டு போக வந்தனான். அவன் வெளியிலை தான் இருக்கிறான். இனி இப்போதைக்கு நான் கொழும்பு போற யோசினையும் இல்லை.''

மாணிக்கத்தார் அவ்வளவு திறமான மனுசன் இல்லை. அடிக்கடி கொழும்பு போறதிலும் ஆருக்கும் உதவி செய்யிறதிலும் சூரன்தான். இப்ப அவருக்கு ஒரு ஐம்பத்தைஞ்சு வயது இருக்கும். மூண்டு பாஷையும் தவிடுபொடி. ஊரிலை இருக்கிற ஆக்கள் ஏதும் அலுவல் எண்டால் அவரைத்தான் கொழும்புக்கு அனுப்பிறது.

வெளிநாட்டிலை இருக்கிற புருஷன்மாரோடை கதைக்க, வெளிநாட்டுக்கு கல்யாண விடயமாக போகிற — இளம் பெட்டையளை கொழும்புக்குக் கூட்டிப் போறதெண்டால் அவருக்கு ஒரே புழுகம். வயசு போன மனுசன் எண்டு எல்லாரும் நம்பி விடுகிறதும்.

ஊர் பத்தும் கதைக்கும். கண்ணாலை காணாமல் நம்பக்கூடாது. பெத்த தகப்பன் மாதிரி எண்டுதான் நான் நினைக்கிறது. சுபியையும் அவரோடைதான் அனுப்பினனான். அவரையே கவனமாகக் கூட்டிவந்தும் விடச் சொன்னனான்.

போன போக்கிலை — பத்து நாளிலை சுபி தனிய வந்து இறங்கினது எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவள் முகத்தைத் தொங்கப்போட்டபடி வந்து நிண்டவள். ஏதோ விபரீதம் என விளங்கிச்சு.

எனது வயதுக்கு நான் சுமந்த சுமைகளைவிட வசதியாக இருந்தாலும் — சுபி பாவம் கூடச் சுமக்கிறாள்

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரசவம்...

(V ஆம் பக்கத் தொடர்)

சற்று நேரத்தில் வீட்டுக்கதவு திறப்பது தெரிந்தது.

''ஆரது?'' குணத்தின் மனைவி.

''...நான் சுகு. குணத்தை ஒருக்கா வரச்சொல்லுறீங்களோ?'' குணம் ஆடி அசைந்து வந்தான்.

''சுகு! என்னடாப்பா இந்த நேரத்திலை வந்து குழப்பிறாய்?''

''குணம்! என்ரை மனிசிக்கு இருந்தாப் போலக் குத்தெழும்பி விட்டது. அதுதான் மந்திகைக்குக் கொண்டு போகவேணும். டக்கெண்டு காரை எடு...''

பதற்றத்துடன் சுகுமார் சொன்னான்.

''காரோ? இப்பவோ? உனக்கு விசரே பிடிச்சிருக்கு? அவன் சுட்டுத்தள்ளிப் போடு வானெல்லே...''

''டேய் குணம்! உன்னைக் கும்பிடுறனெடா. தயவு செய்து காரைவிடு. விளக்கோட போனா அவங்கள் ஒண்டும் செய்யமாட்டார்கள்.'' கெஞ்சினான் சுகுமார்.

இதற்குள் குணத்தின் மனைவி வந்து கத்தத் தொடங்கினாள்.

''அவரைக் கொண்டு போய்க் கொல்லவே போறியள். இஞ்சருங்கோ! நீங்கள் உள்ளுக்க வாங்கோ''

''சுகு! குறை நினைக்காதையெடா'' என்றவாறு குணம் உள்ளே போய்விட்டான். சுகுமார் இடிந்து போய் நின்றான்.

'கடவுளே இப்ப என்ன செய்யிறது? அங்க மைதிலி என்ன பாடோ தெரியேல்லை. வேறை ஆரிட்டக் கார் நிக்குது?...ஆ! செல்லத்துரை அண்ணையிட்டப் போய்ப் பாப்பம்...'' எனணியவாறே சைக்கிளைத் திருப்பினான். உடலெங்கும் வியர்வை வெள்ளமா ஊற்றியது,

ஒருவாறு செல்லத்துரையின் வீட்டை வந்தடைந்தான்.

''செல்லத்துரையண்ணை!'' குரல் கொடுத்தான்.

''ஓமோம். ஆரது?''

செல்லத்துரையின் குரல்தான். வெளியே வந்தார்.

''அது நான் அண்ணை'' என்றவாறு சுகுமார் விடயத்தைச் சொன்னான். ''நீர் போம் தம்பி. நான் இப்ப வாறன். போய் ஆயத்தங்களைச் செய்யும்'' என்று கூறிக்கொண்டே உள்ளே ஓடினார் செல்லத்துரை.

கடவுளுக்கு ஆயிரம் நன்றிகளைச் சொல்லிக்கொண்டான் சுகுமார். திரும்பி விறுவிறு என்று உழக்கி வீட்டிற்கு வந்து சேர்ந்தான். வாசற்படி ஏறும்போதே மைதிலியின் அழுகைக் குரல் கேட்டது. இரண்டெட்டில் அவளை அடைந்தான்.

மைதில் கட்டிலிலே கிடந்து துடித்துக் கொண்டிருந்தகள்.

''மைதிலி! இப்ப அஞ்சு நிமிசத்திலை கார் வந்திடும். உடனை மந்திகைக்குப் போகலாம்.'' என்று சொல்லியபடி அவளுடைய வயிறை மிருதுவாகத் தடவிக்கொடுத்தான்.

வெளியே கார்ச்சத்தம் கேட்டது.

மெல்ல அவளைத் தூக்கிக் கொண்டு விரைந்தான். செல்லத்துரையர் கார்க்கதவினைத் திறந்துவிட்டார். பின்சீற்றிலே இருக்கவைத்தான். வீட்டுக்கதவைப் பூட்டிவிட்டு ஓடிவந்து ஏறி அமர்ந்துகொண்டான்.

கார் சீறிக்கொண்டு கிளம்பியது.

மைதிலியின் அலறல் அதிகமாகத் தொடங்கியது. அவளுடைய தலையைத் தன் தோழிலே சாய்த்துக்கொண்டான் சுகுமார். கார் மந்திகை ஆஸ்பத்திரிக்குப் போகும் பாதையிலே விரைந்தது.

பிரதான சந்தியிலே மறித்தார்கள்.

''பண்ட பா'' என்றார்கள்.

காலையில் நடந்த சம்பவத்தின் எதிரொலியாக இருக்கலாம்! சுகுமார் வாதாடிப்பார்த்தான். செல்லத்துரையரும் தனக்குத்தெரிந்த சிங்களத்திலே பெரியவருடன் கதைக்கப் போவதாகக் கேட்டுப்பார்த்தார். போக விடவில்லை.

நேரம் ஒரு மணியைத் தாண்டிக்கொண்டிருந்தது. மைதிலியின் குரல் வரவரக் கூடியது.

''அண்ணை! உவங்களைப் பார்த்துக் கொண்டிருக்கேலாது. வாங்கோ யாழ்ப்பாணத்துக்கு விடுவம், இதுக்குமேல கடவுள் விட்ட வழி'' என்றவாறு சுகுமார் காரினுள்ளே ஏறி அமர்ந்தான்.

கார் திரும்பிக்கொண்டு புறப்பட்டது. வழியிலே சின்னச் சின்னத் தடைகளைச் சமாளித்துக்கொண்டே கப்பூது வெளியை அடைந்தார்கள்.

திடீரெனப் பெரிதாக வீறிட்டாள் மைதிலி.

'ஐயோ அண்ணை பிள்ளை பிறந்திட்டுது போலக்கிடக்கு. கெதியாய்ப் போங்கோ'' சுகுமார் குளறினான்.

செல்லத்துரையர் 'அச்சிலேற்றரை' ஏறி மிதித்தார். அந்தப் பிரதான முகாமிலே தடுத்தார்கள். சுகுமார் பதற்றத்துடன் விடயத்தைச் சொன்னான். காவலுக்கிருந்தவர்களில் ஒருவன் உள்ளே ஓடினான்.

மைதிலி பூழுவாகத் துடித்துக் கொண்டிருந்தாள். சுகுமாரின் காலடியிலே இரத்தம் பிசுபிசுத்தது, குனிந்து பார்த்தான். துடிட்பேயில்லாமல் ஒரு அழகான ஆண்குழந்தை.

''மைதிலி உம்மடவிருப்பப்படி ஆம்பிளைப்பிள்ளை. ஆனா உயிரில்லாமல்......'' போகட்டும், உம்மை நான் எப்படியாவது காப்பாற்றுவன்...'' சுகுமாரின் உள்ளம் ஓலமிட்டது. காத்திருக்கும் ஒவ்வொருகணமும் நரக வேதனையா இருந்தது.

சற்றுநேரத்திலே பொறுப்பாளவர் ஒருவர் விரைந்து வந்தார். உள்ளே எட்டிப் பார்த்தார்.

''ஓ......!மகே அம்மே! யண்ட! யண்ட! நா சொல்லி விடுறன். ஓங்களைத் தடுக்க மாட்டாங்க...''

சுகுமாரின் மனம் இலேசாகியது. நன்றி சொல்லி விட்டுப் புறப்பட்டான். வழியில் ஒரு முகாமிலேகூட அவர்களைத் தடுக்கவில்லை. தகவல் அனுப்பப்பட்டிருக்கும்.

கார் கைதடிச் சந்தியைத் தாண்டியது.

நேரம் அதிகாலை மூன்று மணி.

நாவற்குழி நெருங்கிக் கொண்டிருந்தது.

'கடவுளே! யாழ்ப்பாணம் வந்திட்டுது. இனிப் பயமில்லை' என எண்ணிப் பெருமூச்சு விட்டு கொண்டான் சுகுமார்.

மைதிலி திடீரெனத் துவண்டு சரியத்தொடங்கினாள். திடுக்கிட்டுப் போய் அவளுடைய தலையை நிமிர்த்தினான் சுகுமார்.

மைதிலியின் கண்கள் மெல்ல மூடிக்கொண்டன.

''மைதிலீ......!''

சுகுமாரின் நீண்ட அலறல் ஒலி காரின் சத்தத்தையும் மீறிக்கேட்டது. வரலாற்றுப் பிரசித்திபெற்ற அந்தப்பரந்த வெளியிலே வீசிக்கொண்டிருக்கும் உப்புக் காற்றுக்கூட ஒருகணம் நிதானித்து மீண்டும் பயணித்தது.

அந்தக் கார் நின்றுகொண்டிருந்தது.

அழுது கொண்டிருக்கும் அவனைத்தேற்ற இயலாமல் செல்லத்துரையர் அப்பாலே தள்ளிப்போய் நின்றார்.

வானத்திலே இலேசான வெளிச்சத் தீற்றல்கள் [illegible]யலுக்கான ஆயத்தமோ?

(யாவும் கற்பனை) ★

# அறுபது ஆண்டுக் கணக்கு எவ்வாறு தோன்றியது?

இந்துக்களின் காலக்கணிப்பிலே வருடங்கள் அறுபதாக வகுக்கப்படுகின்றன. அந்த வரிசையிலே தற்போது நடைபெறுவது 'ஈசுவர' ஆண்டாகும்.

ஆண்டுகளை ஏன் அறுபதாக வகுத்தார்கள்?

பூமி தன்னைத் தானே சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றி வருகின்றது. அது தன்னைத் தானே சுற்றுவதால் இரவு பகல் உண்டாகின்றது. சூரியனைச் சுற்றுவதால் பருவங்கள் உண்டாகின்றன.

இந்த மாற்றங்களின் வேகத்தைக் கணக்கிடத்தான் நொடி, நிமிடம், மணி, நாள், வாரம், மாதம், வருடம், சகாப்தம், சகஸ்ராட்தம் போன்றவற்றை மனிதன் கற்பனை செய்தான்.

நாளை மணிகளாகப் பிரிக்கும் வழக்கும் முதன் முதலில் 3331 ஆண்டுகளுக்கு முன்னர் எகிப்தில் தோன்றியது. பகலை பத்துமணி, அந்திப் பொழுதை இரண்டு மணி, இரவைப் பன்னிரண்டு மணி எனப் பிரித்தார்கள். ஒரு மணிக்கு அறுபது நிமிடம் என்றும் ஒரு நிமிடத்துக்கு அறுபது விநாடிகள் என்றும் வகுக்கப்பட்டது அப்போதுதான்.

இந்த அறுபது என்ற எண் மிக மிக முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். வருடங்கள் அறுபது, நாழிகைகள் அறுபது. இவ்வாறு நிமிடங்களும், நொடிகளும் (விநாடிகளும்) அறுபது. சரி, இந்த அறுபது என்ற கணக்கு எப்படி வந்தது?

முந்தைய வேதபுத்தகமான தைத்திர சம்ஹிதா என்ற நூலின் விவரப்படி — 3331 ஆண்டுகளுக்கு முன் வருடத்தை சூரிய வருடம், சந்திர வருடம் என்று இரு பெயர்களால் அழைத்தனர். சூரிய வருடமென்பது சூரியனை அடிப்படையாகக்

**- எஸ். விஜயா -**

கொண்டது. இது பூமி சூரியனைச் சுற்ற எடுத்துக் கொண்ட நேரமாகும். சந்திர வருடம் என்பது சந்திரனை அடிப்படையாகக் கொண்டது. சூரிய வருடத்திற்கும், சந்திர வருடத்திற்கும் இடையே உள்ள வித்தியாசம் 11 நாள்கள் ஆகும். சந்திரமாதம் 27 நாள்களைக் கொண்டது. இந்த நாள்களையே நாம் 27 நட்சத்திரங்களாகக் கருதுகிறோம். இந்தக் கணக்கு வேறுபாட்டினால் உண்டானதுதான் மகாபாரத யுத்தம்!

அஸ்தினாபுர அதிபதியான துரியோதனின் அழைப்பை ஏற்று தருமர் சூதாடச் சென்றதும், சகுனி பகடைகளை உருட்டி தருமரை தோல்வியடையச் செய்ததும், அதன் காரணம் கொண்டு பஞ்ச பாண்டவர்களைப் பதின்மூன்று வருடங்கள் வனம் ஏக சொன்னதும் அனைவரும் அறிந்த விஷயமாகும்.

சூரிய வருடத்தினை மனத்தில் கொண்டுதான் துரியோதனன் பாண்டவர்களுக்கு வனவாச விதியை நிர்ணயித்தான்! ஆனால் யுதிஷ்டிரான தர்மரோ அதனை சந்திர வருடம் என்ற கணக்கில் முடிவு செய்து விட்டார். அதனால் வனவாசம் முடிவதற்கு 143 நாள்கள் முன்னதாகவே பாண்டவர்கள் வெளிப்பட்டு விட்டனர்.

$11 \times 13 = 143$ நாள்கள்.

இதனால் மூண்டதுதான் மகாபாரதப் போர்.

கிரகங்களிலேயே அதிகம் முக்கியத்துவம் பெற்றது குரு கிரகம் ஆகும். இந்தக் கிரகம் சூரியனைச் சுற்றிவர எடுத்துக் கொண்ட நேரத்தின் அடிப்படையில்தான் வருடக் கணக்கிடு முறை ஆரம்பிக்கப்பட்டது. குருவாகிய பிரஹஸ்பதி (பிரஹஸ்பதி என்றால் அனைத்தும் அறிந்தவர் என்று பொருள்) சூரியனை

(XI ஆம் பக்கம் பார்க்க)

# இந்த வார இராசி...

(VIII ஆம் பக்கத் தொடர்)

அரசியல் பேச்சுக்களில் நிதானமாக இருக்கவும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள்.

**கன்னி:** நீங்கள் கைராசிக்காரர்தான். உங்களை அடிக்கடி அழகுபடுத்துபவர்தான். ஆனால் பட்டென வரும் கோபத்தை நிதானப்படுத்துங்கள். எதிர்ப்பாலார்களுடன் அன்பாக நடவுங்கள். தொழில் ஸ்தானத்தில் பொறுப்புக்களில் கவனமாக இருங்கள். களவு அல்லது இழப்புக்களுக்கு உங்கள்மீது பிறர் சாட்டுதல்கள் சொல்வார்கள். உங்களைச் சுற்றி ஒருசிலர் வட்டமிட்டபடி இருப்பார்கள். நீங்களும் கொடுப்பீர்கள் அவர்களும் உதவி செய்வார்கள். ''அயலவரை நேசி'' என்ற வாக்குப்படி செயற்பட்டு வருவதனால் எல்லோரும் அன்பாக இருப்பார்கள். அடிக்கடி பயம், வயிற்று நோ, உஷ்ண பீடைகள் இருக்கும். பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: வியாழன்.

**துலாம்:** எல்லாவற்றையும் அனுபவிக்கத் துடித்துக் கொண்டிருக்கும் உங்களுக்கு சில ஏமாற்றங்கள் காத்திருக்கின்றன. தொழில் ஸ்தானத்திலும், பொருளிலும் கவனமாக இருக்கவும். உங்கள் ஆசை, ஆத்திரத்தால் வருவதும் வராதுபோகலாம். நல்லவர்கள் பெரியவர்களைப் பகைக்காது பார்த்துக் கொள்ளவும். உஷ்ண பீடைகள், கைகால்தாக்கம், விறைப்பு, வயிற்றில் நோ, கண்வருத்தங்கள் கொடுக்கலாம். மறைமுகப் பகையாளிகள் விலகிச்செல்வர். எந்த விஷயத்திலும் அவதிப்பட்டு ஓடித்திரியாது நிதானமாகச் செயற்பட்டு வாருங்கள். குலதெய்வ வழிபாடு செய்துவரவும்.

★ அதிர்ஷ்ட நாள்: வியாழன்.

**விருச்சிகம்:** நீங்கள் வாக்குச் சாதுரியத்தால் காரியங்களைச் செய்து வருவீர்கள். பிறரை மதித்து நடவுங்கள். கண்டபடி அபிப்பிராயங்களைச் சொல்லாதீர்கள். அயலவரை நேசித்து வாருங்கள். தொழில் ஸ்தானத்தில் உங்கள் நடவடிக்கைகளைச் சிலர் கண்காணித்தபடி இருப்பார்கள். எதையும் போராடித்தான் இக்காலத்தில் நீங்கள் பெறவேண்டும். தெய்வ பக்தி, சக்தி பொருந்தியவர்களின் ஆதரவுகள் உங்களுக்குக் கிடைக்கும். நெஞ்சு, கண், கை, கால் விறைப்பு, குடல் வருத்தம் என்பனமாறி மாறி வர இடம் உண்டு. குலதெய்வ வழிபாடு முக்கியமாகும்.

★ அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு.

**தனுசு:** உங்கள் சொல்வாக்கு செல்வாக்கைக் கொடுக்கும்; பொருள்இழப்பு கொடுக்க இடம் உண்டு. தொழில் ஸ்தானத்தில் ஏட்டிக்குப் போட்டியான சம்பவங்கள் ஏற்பட்டபடி இருக்கும். நண்பர்களும், அயலவர்களும் வீண்வதந்திகளைப் பரப்புவர். அடிக்கடி மனச் சஞ்சலப்படாது நல்ல விஷயங்களைச் செயற்படுத்தி வரவும். நல்ல விஷயங்களைச் செய்யும் பொழுது அதனால் இலாபமும், புகழும் வரும். சந்தர்ப்பங்களில் சிலர் பொறாமைப்பட்டுஉங்களைப் பற்றி தேவையற்ற கதைகளை கட்டிவிடுவார்கள். இந்த உலகத்தில் சரி, பிழை கலந்துதானே எல்லாம் இருக்கின்றது? குலதெய்வ வழிபாடு முக்கியம்.

★ அதிர்ஷ்ட நாள்: வியாழன்.

**மகரம்:** உங்களிடம் பெரிய பெரிய திட்டம்; ஆனால் நிறைவேறாத உள்ளம். உள்ளவற்றை எல்லாம் யாரிடமும் சொல்லி ஆறுவதில் ஒரு வித மனப்போக்கு. தொழில் ஸ்தானத்தில் எடுத்ததற்கெல்லாம் தடை. பெரியவர்களின் பேச்சுக்கு ஆளாக நேரிடும். கடன்பட்டார் நெஞ்சம்போல எப்பொழுதும் கலக்கமும் மனப்பயமும் ஏற்பட்டபடிஇருக்கும். எதிர்ப்பாலாருடன் வாக்குவாதம், அயலவர்களுடன் அபிப்பிராய பேதம் —இப்படியே காலம் ஓடும். ஆயினும் புதிய தொழில் திட்டங்களை அமுல்படுத்தவாய்புக்கள் ஏற்படும். சளி, கண், கால், நோய்கள் சிலருக்கு ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு.

**கும்பம்:** உங்களுக்கு புதிய திட்டங்கள் பல உருவாகும். குடும்பத்தில் கருத்து வேற்றுமைகள் இருந்தாலும் பல நல்ல காரியங்கள் நடக்க இடம் உண்டு. தொழில் ஸ்தானத்தில் மாற்றங்கள் ஏற்படும். உங்களுக்கு மாத்திரமா போராட்டமும், மாற்றமும்? உலக ஓட்டத்தில் பலவித தாக்கங்கள் எத்தனை பேருக்கு கொடுத்தபடி உள்ளது? தெய்வ பக்தி கொண்ட பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். செலவுகள் அதிகரித்தபடி இருக்கும். ஏழரைச் சனி இருப்பதானால் பொருளில் அவதானமாக இருக்கவும். களவுகள் போக இடம் உண்டு.

★ அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு, வியாழன்.

**மீனம்:** கடுகதி (எக்ஸ்பிரஸ்) பஸ்—கரைகாணாத ஓட்டமாம். சனீஸ்வரன் தாக்கத்தால் எதற்கெடுத்தாலும் காலம் தள்ளிப் போட்டபடி இருப்பீர்கள். உங்களால் உங்கள் குடும்பத்தவர்களுக்கும், இனசனங்களுக்கும் பலவித மறைமுக அழுத்தங்கள் இருப்பதனால் எதையும் நிதானித்துச் செய்ய முடியாது. பொருளில் அவதானமாக இருந்து செயற்படவும். புத்திரர்களுக்காக பணச் செலவுகள் அதிகரிக்கும். தூர தேசச் செய்திகளால் நன்மையில்லை. தொழில் ஸ்தானத்தில் போட்டிகள் ஏற்படும். எதிர்ப்பாலாரின் ஆலோசனைகள் நற்பலனைக் கொடுக்கும். கை, கால் தாக்கம் சிலருக்கு ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்: வியாழன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுபது வருடக்...

(X ஆம் பக்கத் தொடர்)

ஐந்துமுறை சுற்றி வருவதால் ஒரு பிரஹஸ்பதி சக்கரம் உண்டாகிறது. ஒரு முறை சுற்ற பன்னிரண்டு வருடங்கள். இவ்வாறு ஐந்து முறை சுற்றி ஒரு பிரகஸ்பதி சக்கரத்தை உருவாக்க அறுபது வருடங்கள் ஆகின்றன. சித்திரை முதல் பங்குனிவரை உள்ளவை இந்த பிரஹஸ்பதி சக்கர நாள்களின் பெயர்கள். இவை மேஷம் முதல் மீனம் வரை உள்ள பன்னிரண்டு ராசிகளாக வழங்கப்படுகின்றன.

பிரபவ, விபவ, சுக்ல, பிரமோத...என்ற வருடங்கள் பிரஹஸ்பதி சக்கரத்தில் அறுபது மாதங்களாகும்.

சமஸ்கிருத பெயருடன் அழைக்கப்படும் இந்த ஒவ்வொரு வருடத்திலும் ஆறு பருவங்கள் உள்ளன. அவை:- வசந்தம் — வெயில் — மழை — இலையுதிர் — குளிர் — பனிக்காலங்கள். ஒவ்வொரு மாதமும் இரண்டு பருவங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

அவை:-

வசந்தம் — மது, வாத; வெயில் — சுக்கிர, சுசி; மழை — நப, நவஸ்ய; இலையுதிர் — ஈசா, ஊர்ஜா; குளிர் — சகஸ், சகஸ்யா; பனி — தபஸ், தபஸ்பா.

கிருஷ்ணபட்சம், சுக்கில பட்ச என்ற பட்சங்கள் ஒவ்வொரு மாதமும் வருகின்றன. இந்த ஒவ்வொரு பட்சமும் இரண்டு வாரங்களாகப் பிரிக்கப்பட்டன.

இவை தவிர, சாலிவாகன சகம், — விக்கிரம சகம் (சைத்ராதி), விக்கிரம சகம் (கார்த்திகாதி) என்ற பல சகாப்தங்களின் பெயர்களைக் காண்கிறோம். இதற்குக் காரணம் என்ன?

குப்தர்கள் காலத்தில் 'சாகர்கள்' என்ற இனத்தினர் பாரதத்தின் மேல் படையெடுத்தனர். அவர்களை வென்றவர்களை 'விக்கிரமாதித்யன்' என்று அழைத்தனர். விக்கிரமாதித்யன் என்ற பெயர் குப்தர் காலத்தில் பல மன்னர்களுக்கும் இருந்தது. சாகர்களை ஒவ்வொரு முறை வெல்லும் போதும் அந்த மன்னர்கள் தங்கள் பெயர் கொண்ட ஒரு சகாப்தத்தை ஆரம்பித்தனர்.

இம்முறையில்தான் விக்கிரம சகம் (சைத்ராதி), விக்கிரம சகம் (கார்த்திகாதி) போன்ற சகாப்தங்கள் ஆரம்பிக்கப்பட்டன. சாலிவாகன் என்ற பெயர் 'சாதவாஹன்' என்ற பெயரின் திரிபு ஆகும். அந்த பெயரில் ஆரம்பிக்கப்பட்டதுதான் சாலிவாகன சகாப்தம். பிரபாதி என்பது இப்போது வழக்கில் உள்ள 60 வருடங்கள் ஆகும். ★

# சுமைகள் இறங்குவதி...

(IX ஆம் பக்கத் தொடர்)

என்பது அவள் கதைகளில் இருந்து அன்று புரிந்தது.

ஊர் என்ன சொன்னது? கமலாவுக்கு என்ன குறைச்சல்? சனம் சொழும்பு போக வருஷக் கணக்கா தவம் கிடக்குதாம். போனால் போக்குத்தான். பிறகு திரும்பி வர அங்கே தவம் கிடக்கவேண்டும். இவள் சுபியை என்ன சுழியாக அனுப்பிவிட்டாள். அவளும் போன போக்கிலை எல்லா விசிட்டும் அடிச்சிட்டு— மாணிக்கத்தாரையும் விட சுழியாக—பத்து நாளிலை வந்திட்டாள்'

'பிறந்தால் கமலாவாகப் பிறக்க வேணும். பெத்தால் சத்யன்—சுபி மாதிரிப் பெற வேண்டுமாம்.' — என்றனர்.

''அம்மா இனி அவன் எனக்கு அண்ணன் இல்லை'' —என்றாள் சுபி.

''கப்பலிலை களைச்சு வந்திருக்கிறாய். உடுப்பை மாத்திக் குளிச்சு முழுகிச் சாப்பிடு. பிறகு கதைப்பம்''— என்றேன்.

பிறந்த நாள் முதல் நெடுக இதுகள் சண்டைப்பிடிக்கிறதும்—விலக்குப் பிடிக்க நான் நடுவிலை நிக்கிறதும் தானே? அடுத்த நிமிசம் அவை ரெண்டுபேரும் உயிருக்கு உயிராகி நிண்டு என்னோடை மல்லுக் கட்டுவினம்.

இதுகளைப் பெரிசா எடுக்கிறதில்லை நானும். வீட்டுக்கு வீடு இதுதான் நிலமை. கண்பட்டுப் போய் சண்டை வாறதா நினைப்பன்.

அப்படி ஒண்டும் பெரிசா கண்பட என்னடை குடும்பத்திலை இல்லை. பிள்ளை இல்லை எண்டு தவிக்கிறவையும், பெட்டைகளைப் பெத்துக்கொண்டு பெடியன் பெற ஏங்கிறவையும், பெடியன்களை வரிசையிலை அடுக்கிக்கொண்டு—கடைசிப் பெடியனுக்குப் பெட்டைச் சட்டை போட்டு, முடிவளர்த்து, திருப்திப்பட நினைக்கிறவையும் எங்களைப் பார்க்கிற பார்வைதான் இந்தக் கேடா?

சுடச் சுட கோப்பியைக் கொண்டுவந்து சுபியிடம் கொடுத்தேன். அவள் கதைக்கும் மனநிலையில் இல்லை என்பது விளங்கிற்று.

கோப்பியை வாங்கி தட்டிலை வச்சிட்டு கட்டில்லை தொப்எண்டுவிழுந்திட்டாள்.

''குடிச்சிட்டுப் பட்டன் புள்ளை. பிறகு குளிக்கலாம்'' —கொஞ்சம் விட்டுக் கொடுக்கிறன். இப்படி விட்டு விட்டுக் கொடுத்துக் கொடுத்துத்தானே பிள்ளையள் கெட்டே போகுதுகள்.

''அம்மா! நல்ல ஆளோடை என்னை அனுப்பி வைச்சாய்! நான் பட்ட பாடு. இதைவிட முன்பின் தெரியாத ஆரோடும் போய் வந்திருப்பனே.''

பேச்சில் வெறுப்புத் தொனிக்கிறது.

''எதையும் சீரியஸாக எடுக்காதை பிள்ளை. அந்தாள் பெத்த தகப்பன் மாதிரி. ஏதும் வஞ்சகமா நடந்திராது. உனக்கு கை பட்டால் குத்தம். கால் பட்டால் குத்தம்...''

''அம்மா!...'' அலறலில் கலங்கிப் போனேன்!

— தொடரும்—

# இன்பத்துள்...

(I ஆம் பக்கத் தொடர்)

கவலையற்ற வாழ்வு

மண்ணுலகப் பிறவிகளில் மனிதப் பிறவியே உயர்ந்த பிறவியாகக் கருதப்படுகிறது. ஆயினும் மனிதப் பிறவியெடுத்தும் கவலையற்று வாழ்வோர் எத்தனைபேர்? இதனைக் கருத்திற் கொண்டே மணிமேகலை ஆசிரியர் ''பிறந்தோர்உறுவது பெருகிய துன்பம்'' என்கிறார். அவர் கூற்றுச் சரியானதே.

ஆயினும் நாலடியார் பிறந்தோர் உறும் பெருகிய துன்பத்தை வெல்ல வழிகூறுகிறது. அந்த வழிதான் என்ன?

நூல்வழக்கிலும், உலக வழக்கிலும் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய தர்மங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். தெரிந்ததுடன் அடக்கத்தை மேற் கொள்ள வேண்டும். பழி, பாவங்களுக்கு அஞ்சவேண்டும். தமக்குச் சரியெனப் படுவதை— சரியானதை—உலகம் பயனடைந்து மகிழும்படி செய்தல் வேண்டும். பெறுகின்ற வருவாய் அளவில் மகிழ்ந்து வாழ்க்கை நடத்தவேண்டும். இவற்றைப் பின்பற்றுவோர் வாழ்வில் சிறப்படையலாம். கவலையற்றுவாழலாம்.

''அறிவது அறிந்தடங்கி
அஞ்சுவ தஞ்சி
உறுவ துலகுவப்பச் செய்து—
பெறுவதனால்
இன்புற்று வாழும்
இயல்பினார் எஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்தல் அரிது''


# விடைகள்

VII ஆம் பக்கத்தில் சிறுவர் சுடர் பகுதியில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு:-


உங்களுக்குத் தெரியுமா?

1. ச, சி, க, கி, கு, த, தி, து.


2.




3.




4.



கண்டுபிடியுங்கள்

1.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 5 | 6 | 8 | 3 | 2 | 5 | 6 | 2 |
| 5 | 3 | 5 | 2 | 6 | 8 | 5 | 8 | 3 |
| 3 | 5 | 2 | 6 | 8 | 3 | 3 | 8 | 5 |
| 6 | 6 | 3 | 2 | 5 | 6 | 6 | 2 | 8 |
| 8 | 2 | 3 | 5 | 6 | 5 | 3 | 5 | 8 |
| 6 | 5 | 8 | 3 | 2 | 6 | 5 | 3 | 8 |
| 3 | 6 | 5 | 3 | 8 | 8 | 2 | 5 | 2 |
| 8 | 6 | 5 | 3 | 2 | 3 | 5 | 6 | 8 |
| 3 | 2 | 5 | 6 | 6 | 8 | 5 | 2 | 3 |

**32568**

2. கட்டைக்குள் வெளியே வராமல் தங்கிய ஆணி ஐந்தாவது இலக்கமுடையது.

3. மூன்றாவது வாகனத்தைப் போல்.

வார்த்தை விளையாட்டு

பனி, பலன், படம், பதம், பலம், கனி, கடன், கலன், கலம், கமம், கமலம், கபடம், கபம், கதம், கம்பம், கம்பன், தன், தனி, தலம், தம், தக, தடம், தம்பம், மதம், மலம், மடம், மகன், மகம், மனிதன், மதனி, மகதம்.

தெரியுமா உங்களுக்கு?

1. மந்திகை. 2. கதிரை. 3. சம்பந்தி. 4. ஆசிரியர்.

# சாமர்த்தியம் பாரீர்!

தீர்வுப் பொதிக்குத் திசையெங்கும்
வகையில்லாத வாழ்த்தும்
போர் தொடுக்கும் போக்கைப் புனிதமாக்கி
அதற்கான ஆதரவும் சலுகையும்
காரீ சூழ் கண்டியில காணப் போகும்
பொன் விழாவின் பொலிவுக்கும் வேண்டி
தேர்தலைத் திணித்து எம் எதிர்பார்ப்பை
எரித்திடும் சாமர்த்தியம் பாரீர்.

சிந்திய கண்ணீரும் கொட்டிய குருதியும்
வீணே அழிந்து போவதையும்
வந்தித்த தேசம் பூகம்பம் வந்துற்ற
பூமியதான கோலமா வதையும்
செந்தமிழும் செழிப்பிழந்து செல்லும்
திக்கெங்கும் செல்லாப் பணமாக
பைந்தமிழர் படும் நெடுந்துயரையும்
பாரிலுள்ளோரே பரிவுடன் பாரீர்.

விதியெங்கும் பீதியின்றி மக்கள்
நடமாடும் நன்னாளும் கூடி
பாதி ராத்திரியிலும் பயமின்றிப்
படுத்துறங்கும் காலமும் வந்து
ஏதிலிகளாய் எம்மினம் எங்கும் அலைவதும்
நிரந்தர மாய் நீங்கி என்றும்
ஆதியான தமிழும் செப்பிடும் தமிழரும்
நிறைவான நிம்மதிகாண வழி தாரீர்.

— க. தியாகராஜா

# நடத்துங்கள்!

உங்கள் மேடை;
உங்கள் நாக்கு;
எது வேண்டுமானாலும் பேசுங்கள்!

உங்கள் பேனா;
உங்கள் அச்சகம்;
எது வேண்டுமானாலும் எழுதுங்கள்!

உங்கள் தராசு;
உங்கள் எடைக்கல்;
எது வேண்டுமானாலும் விமர்சியுங்கள்!

உங்கள் சுவர்கள்;
உங்கள் காகிதம்;
எது வேண்டுமானாலும் ஒட்டுங்கள்!

உங்கள் வாத்தியம்;
உங்கள் கச்சேரி;
எது வேண்டுமானாலும் வாசியுங்கள்!

உங்கள் தூரிகை!
உங்கள் வர்ணம்;
எது வேண்டுமானாலும் வரையுங்கள்!

ஆனால்.....
நாளை.....
காலத்தின் விமர்சனம்
'உங்கள் பிணங்களைக் கூட
தோண்டியெடுத்து வந்து
தூக்கில் போடும்'
என்பது மட்டும்
ஞாபகம்
இருக்கட்டும்!

- வைரமுத்து

கவிஞர் வைரமுத்து எப்போதே எழுதிய இக்கவிதை இப்போது இங்கு பொருத்தமானால் அதற்கு நாம் பொறுப்பல்ல. (ஆ-ர்)

# உலக கோடீஸ்வரர்களில் சுஹார்ட்டோவும் ஒருவர்

உலகப் பெரும் பணக்காரர்களில் இந்தோனேசிய அதிபர் சுஹார்ட்டோவும் ஒருவர்.

இவரது சொத்துக்களின் மொத்தப் பெறுமதி 13 ஆயிரத்து 650 கோடி இந்திய ரூபா.

ஆசியாவிலுள்ள டாடா, பிர்லா ஆகிய பிரபல பணக்காரர்களிலும் முன்னணியில் நிற்பவர் சுஹார்ட்டோ. ஆசியாவிலேயே 9 ஆவது பெரும் பணக்காரர் என்ற பெருமையும் இவரையே சாரும்.

எனினும் புருனை மன்னர் தான் உலகிலேயே பெரும் பணக்காரர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நவீன யுத்த ஆயுதங்கள்...

(III ஆம் பக்கத் தொடர்)

களையும், முந்நூற்று அறுபத்தைந்து நாள்களையும் வகுத்திருக்கிறார்கள். அறுபது ஆண்டு சுழற்சியைக் கண்டுபிடித்து, அதைச் சூரிய தேவனுக்கு அர்ப்பணித்திருக்கிறார்கள். இறக்கைகள் கொண்ட சர்ப்பதேவதையை உருவாக்கி, அதற்கு விளக்கமும் தந்திருக்கிறார்கள்.

சூரியன் — சந்திரன் — சர்ப்பதேவதை இவற்றைக் பூஜிக்கும் இந்தமுறை, மெக்ஸிகோவில் வாழ்ந்த இந்தியர்களாலும் பின்பற்றப் பட்டிருக்கிறது. அங்கு சூரியனார் கோயில் ஒன்றை உருவாக்கி இருக்கிறார்கள். ஐம்பதினாயிரம் சதுரகஜம் பரப்பில் வான்சாஸ்திர விதிப்படி அந்தக் கோயில் அமைக்கப்பட்டிருக்கிறது. அதைக் கட்டியவர் யாரென்றுகூடத் தெரியவில்லை. ஆனால், அதன் நுட்பங்கள் இந்திய சாஸ்திரங்களை ஒட்டியனவாக இருக்கின்றன.

சூரியனின் கதிர்கள் விழுவதை ஒட்டி, நாள்களையும் வாரங்களையும் குறிக்கும் படிக்கட்டு மண்டபங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இவற்றில் இந்திய சாஸ்திரங்களில் குறிக்கப்பட்டுள்ள நேரக் கணக்கு, நாழிகைக் கணக்கு, வாரக்கணக்கு ஆகியவை பின்பற்றப்பட்டிருக்கின்றன.

— இவ்வாறு பல ஆச்சரியம் மிக்க தகவல்கள் மகாபாரதத்தின் சமஸ்கிருதமூலத்தில் காணப்படுகின்றன. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுதப் பரிசோதனைக் குழுவுக்கு ஈராக் விதித்துள்ள தடை நீடிப்பு!

## காலத்தை இழுத்தடிப்பதன் மூலம் காரியத்தை சாதிக்க சதாம் முயற்சி

ஐ. நா. ஆயுதப் பரிசோதனைக்குழு ஈராக்கில் தனது பணிகளை மேற்கொள்ள ஈராக் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்க மறுத்து வருகிறது.

ஆயுதப் பரிசோதனைக் குழுவில் ஈராக் விரும்பாத நாட்டவர்களான அமெரிக்கர்களும் பிரிட்டிஷ்காரர்களும் கூடுதலாக இடம் பெற்றுள்ளனர்.

ஈராக்கின் நடவடிக்கைக்கு இதுவே காரணம்.

ஆயுதப் பரிசோதனைக் குழுவில் உள்ள அமெரிக்கர்களும் பிரிட்டிஷ்காரர்களும் உளவாளிகள் என்று ஈராக் அதிபர் சதாம் ஹுசேய்ன் குற்றஞ்சாட்டி வருகிறார்.

இந்த விவகாரத்துக்குத் தீர்வு காணும் முயற்சியில் வளைகுடாப் பரச்சினையில் மிருதுவான போக்கைக் கடைப்பிடிக்கும் நாடுகளான ரஷ்யாவும் பிரான்ஸும் ஈடுபட்டுள்ளன. இதற்கு முன்னர் இதே போன்ற முட்டுக்கட்டை நிலை ஏற்பட்ட போது ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் பிரிமாக்கோவ் மேற்கொண்ட சமரச முயற்சி வெற்றி அளித்திருந்தது.



சதாம்ஹுசேய்ன்

ஆயுதப் பரிசோதனைக்குழுவுடன் ஒத்துழைக்க ஈராக் சம்மதம் தெரிவித்தது. ஆயுதப் பரிசோதனை நடவடிக்கைகளும் இடம் பெற்றன.

ஈராக்கைத் தண்டிக்கக் கூடாது என்பதில் ரஷ்ய அதிபர் பொரிஸ் யெல்ட்ஸினும் தீவிரமாக இருந்து வருகிறார்.

தற்பொழுது அனுப்பப்பட்டுள்ள ஆயுதப் பரிசோதனைக்குழுவில் கூடுதலாக அமெரிககர்களும், பிரிட்டிஷ்காரர்களும் இடம் பெற்றிருப்பதால் ஆயுதப் பரிசோதனைக் குழுவின் நடவடிக்கைகள் நியாயமானவையாக இருக்க மாட்டா என்று ஈராக் அஞ்சுகிறது.

1991 வளைகுடா யுத்தத்தில் ஈராக் சரணாகதி அடைந்த போது பெரும் நாசம் விளைவிக்கக்கூடிய ஆயுதங்களை அழித்து விடுவதற்கு ஈராக் உடன்பட்டது.

ஈராக்கின் ஆயுதங்களைப் பரிசோதிக்க 1991 இல் ஐ. நா. விசேட கமிஷன் (U.N. Special Commission) ஏற்படுத்தப்பட்டது. இந்தக் கமிஷனின் உறுப்பினர்களே ஈராக்கில் ஆயுதப் பரிசோதனைப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறார்கள்.

### பிரதான பதவிகளில் அமெரிக்கர்கள்

இந்தக் கமிஷனின் பிரதம பரிசோதகரான ரிச்சர்ட் பட்லர் ஓர் அமெரிக்கர். உதவி நிர்வாகத் தலைவர் சார்ள்ஸ் டுயூல்பே என்பவரும் ஓர் அமெரிக்கர்.

1991 ஆம் ஆண்டு முதல் இந்தப்பதவியை வகித்துவந்த நால்வரும் அமெரிக்கர்களே.

ஆயுதப் பரிசோதனை நடவடிக்கைகளுக்கு பொறுப்பான இயக்குநர் ஜேம்ஸ்மூர். இவரும் ஓர் அமெரிக்கரே.

மற்றும் ஆயுதங்கள் தொடர்பான பிரதான கோவைகளும் அமெரிக்க அதிகாரி ஒருவரின் பொறுப்பிலேயே இருந்து வருகின்றன.

ஏவுகணைகள் குறித்து பரிசோதனை செய்ய 5 நிபுணர்கள் மட்டுமே கமிஷனில் உள்ளனர். இவர்களில் ஐவரும் அமெரிக்கர்கள்.

இவர்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்களே ஈராக்குக்கு அனுப்பப்பட்ட ஆயுதப் பரிசோதனைக் குழுவில் இடம்பெற்று உள்ளனர். ஸ்கொட்ரிட்டர் என்ற அமெரிக்கரே ஈராக் சென்ற ஆயுதப் பரிசோதனைக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார்.

### கடும் நடவடிக்கைக்கு ஆதரவு இல்லை

1991 வளைகுடா யுத்தத்தின் போது ஈராக்குக்கு எதிரான யுத்தத்தில் அமெரிக்காவுக்கு. பிரிட்டன் உட்பட அதன் நேசநாடுகளும் ரஷ்யாவும் மற்றும் அரபு நாடுகள் பலவும் ஆதரவு வழங்கி இருந்தன.

ஆனால் தற்பொழுது நிலைமை ஓரளவு மாறி அமெரிக்கா தனித்து விடப்படும் நிலை உருவாகி வருகிறது.

ஈராக்குக்கு எதிரான ஐ. நா. பொருளாதாரத் தடை தொடர வேண்டும் என்பதிலும் ஐ. நா. ஆயுதப் பரிசோதனைக் குழுவுடன் ஒத்துழைக்க மறுக்கும் ஈராக் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதிலும் அமெரிக்காவுடன் பிரிட்டன் மட்டுமே ஒத்து நிற்கிறது.

பாலான அரபுநாடுகள் அஞ்சுகின்றன. இப்படியான நிலை தொடர வேண்டும் என்பதே அமெரிக்காவின் விருப்பமும் ஆகும்.

மற்றது இஸ்ரேல் தொடர்பான அமெரிக்கக் கொள்கை.

குடா யுத்தம் ஒரு சாட்டாக அமெரிக்காவுக்கு அமைந்துவிட்டது.

ஈராக்கை தொடர்ந்து அடக்கிவைக்கவே அமெரிக்கா விரும்புகின்றது.

ஈராக்கை அடக்கவேண்டு



ஈராக் மீதான ஐ. நா. பொருளாதாரத் தடையை ஆட்சேபித்து ஜோர்தானின் தலைநகர் அம்மானில் குழந்தைகள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். ஐ. நா. பொருளாதாரத் தடைகாரணமாக கடந்த 7 ஆண்டுகளில் 5 லட்சம் குழந்தைகள் ஈராக்கில் மரணம் அடைந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

ஈராக் பலம் பெறுவது இஸ்ரேலுக்கு ஆபத்து என்று அமெரிக்கா கருதுகிறது. இஸ்ரேலுடன் நேரடி எல்லையைக் கொண்ட எகிப்து, ஜோர்தான், லிபியா ஆகிய நாடுகள் தற்பொழுது பலம் இழந்த நிலையில் உள்ளன.

மானால் ஈராக் மீதான ஐ. நா. பொருளாதாரத் தடை நீடிக்க வேண்டும்.

ஈராக் மீதான பொருளாதாரத் தடையைத் தளர்த்தி விட்டால் அதன் பின்னர் ஈராக் மனம் மாறி வழிக்கு வந்துவிடும் என்று ரஷ்யாவும் பிரான்ஸும் வாதிக்கின்றன. ஆனால் அமெரிக்கா இதனை ஏற்கத் தயார் இல்லை. ஈராக்கை அடித்தே வழிக்குக் கொண்டு வர முடியும் என்று அமெரிக்கா கருதுகிறது.

### கோழிப்பண்ணையில் கண்டெடுத்த விடியோ கஸெட்

அதி சக்திவாய்ந்த அமெரிக்க U—2 உளவு விமானம், தரையைத் துல்லியமாக நோட்டமிடக் கூடிய ராடர்கள் பொருத்தப்பட்ட ஹெலிகள் ஆகியவை மூலம் உளவு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட பின்பே ஈராக்கிடம் பேரழிவுகளை ஏற்படுத்தக் கூடிய இரசாயன ஆயுதங்கள் உள்ளன என்ற முடிவுக்கு அமெரிக்கா வந்தது.

முன்னர் ஆயுதப்பரிசோதனைக்கு ஈராக் அனுமதித்திருந்த சமயம் ஐ. நா. ஆயுதப்பரிசோதனைக் குழுவினர் தமக்குக் கிடைத்த ஒரு தகவலை வைத்து பாக்தாத்துக்கு மேற்கே உள்ள கோழிப்பண்ணை ஒன்றில் சோதனை நடத்திய போது ஈராக்கின் இரசாயன ஆயுதப் பரிசோதனை தொடர்பான வீடியோ கஸெட் ஒன்றைக் கண்டெடுத்தனர்.

இரசாயன ஆயுதங்கள் நாய்கள், குரங்குகள், கழுதைகள், ஆடுகள் ஆகிய மிருகங்களில் பிரயோகிக்கப்பட்டுப் பரீட்சிக்கப்பட்டது அந்த வீடியோ கஸெட் மூலம் தெரியவந்தது.

இரசாயன ஆயுதங்கள் பிரயோகிக்கப்பட்ட மிருகங்கள் அவஸ்தைப்பட்டு மரணமடைவதும் பரந்த வெளி ஒன்றில் அவை இறந்துகிடப்பதும் அந்தக் கஸெட் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது.

ஈராக்கின் பெரும்பாலான பகுதிகளில் தற்பொழுது ஐ. நா. ஆயுதப் பரிசோதனைக் குழுவினரின் பணி பூர்த்தி அடைந்து விட்டது.

எஞ்சி உள்ள முக்கியமான இடங்களில் பரிசோதனைகளை மேற்கொள்ள இருந்த சமயமே அமெரிக்க, பிரிட்டிஷ் நிபுணர்களைக் காரணம் காட்டி ஈராக் ஒத்துழைக்க மறுத்துவருகிறது.

இரசாயன ஆயுதங்கள் தொடர்பான தனது ஆவணங்களைமறைத்துவிடவும்— தன்னிடமுள்ள இரசாயன ஆயுதங்களை வேறு பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்தவும் தற்போதைய தேக்க நிலையை சதாம் ஹுசேய்ன் பயன்படுத்தலாம் என்று அவதானிகள் கருதுகின்றனர். ★

## உலக உலா

என்.பி.சீலன்

ரஷ்யா, பிரான்ஸ், சீனா ஆகிய பாதுகாப்புச்சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளும் பெரும்பாலான அரபு நாடுகளும் ஈராக் மீது தாக்குதல் நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

### அமெரிக்க கொள்கை உருவாவது எப்படி?

ஈராக் தொடர்பான அமெரிக்கக் சொள்கை எண்ணெய், ஆயுத வர்த்தகம், இஸ்ரேல் ஆகிய மூன்றையும் வைத்தே நிர்ணயிக்கப்படுவதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

ஈராக்கின் அபரிமிதமான எண்ணெய் வளம் ஈராக்கை மட்டும் அல்ல அரபு நாடுகளையும் பலப்படுத்தி விடும் என்று அமெரிக்கா அஞ்சுகிறது.

வளைகுடா யுத்தத்தின் பின்னர், 3 லட்சம் கோடி டொலர் பெறுமதியான ஆயுதங்களை மத்திய கிழக்கு நாடுகளுக்கு அமெரிக்கா விற்றுள்ளது.

1990 ஆம் ஆண்டு [illegible] துக்கு நடந்தது [illegible] நடக்கலாம் என்று [illegible]

எல்லையில் உள்ள மற்றொரு நாடான லெபனான் நீண்ட கால உள்நாட்டு யுத்தம் காரணமாக சின்னாபின்னமடைந்து காணப்படுகிறது.



யெல்டஸின்

லெபானானின் தென் பகுதியில் பாதுகாப்பு வலயம் அமைத்து இஸ்ரேல் தனது படைகளையும் வைத்திருக்கிறது.

இஸ்ரேலுடன் எல்லையைக் கொண்டிராத ஈராக்கின் பலம் இஸ்ரேலுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் அளவுக்கு அதிகரித்திருந்த சமயமே ஈராக்கை அடக்குவதற்கு [illegible]

ஈராக்கை தொடர்ந்து கடுமையான பொருளாதாரத்தடையின் கீழ் வைத்திருக்க வேண்டும் என்பதே அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனின் கொள்கை. ஈராக் தொடர்பான கொள்கையில் அமெரிக்கா உறுதியாக இருக்காவிட்டால் எமது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் எம்மை மன்னிக்க மாட்டார்கள் என்று கடந்த வாரம் வெளியிட்ட அறிக்கையில் கிளின்ரன் தெரிவித்துள்ளார்.



ஈராக்கியர்கள் பரந்த அளவில் படுகொலைகளை செய்தவர்கள். அவர்களுடன் பேச்சு நடத்த முடியாது என்று கிளின்ரன் நிர்வாகம் கருதுகிறது.

ஐ. நா. ஆயுதப் பரிசோதனைச் குழுவினரை ஈராக் நிபந்தனை எதுவும் இன்றி அனுமதிக்க வேண்டும். ஈராக் இதற்கு இணங்க மறுத்தால் அதன் மீது விமான ஏவுகணைத் தாக்குதல்களை நடத்த வேண்டும் என்ற கொள்கையிலிருந்து விலகிச் செல்ல அமெரிக்கா தயார் இல்லை.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org